26
No. M. 2569

ஹிபாஜத்துல் இஸ்லாம்

حفاظة الاسلام

மலர் 5

செந்தமிழ் மாதசஞ்சிகை

இதழ் 4

HIFAZATH-UL-ISLAM

ஹிஜ்ரீ 1352 துல்ஹஜ்ஜு மீ 1934 ஏப்ரல் மீ

உள்ளடக்கம்.

1. அல்குர்ஆன் 109
2. அல்ஹதீது ... 110
3. அல்மதீனத்துல் முனவ்வரா ... 113
4. மிர்ஸாவின் உண்மைத்தோற்றம் ... 114
5. சுகாதாரம்—சிசுக்கள் ஆரோக்கியம் ... 117
6. நாம் முன்னேற்றமடைவதற்குள்ள மார்க்கம் 119
7. ஈஸா (அலை,) சிலுவையிலறைபடவில்லை ... 122
8. மதிப்புரை ... 128
9. கியாமத்தின் ஞாபகச்சின்னம் ... 129
10. சத்திய சன்மார்க்க சீலர்கள் ... 131
11. இஸ்லாத்தின் சிறப்பு ... 137
12. காதியானிமதத்துக்கு சாவுமணி ... 139
13. மிஸ்ரில் காதியானி இயக்கம் ஒழிந்தது ... 140
14. சமூகக் கொடுமை ... 143
15. இஸ்லாத்தின் ஜோதி 144. 16. செய்தித்திரள் 145

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
-2 MAY 1934
MADRAS

சென்னை
ஹிபாஜத்துல்இஸ்லாம் சங்கத்தாரின்
வெளியீடு

K. R. SARMA

ஹிபாஜத்துல் இஸ்லாம்

சந்தா விபரம்

இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய உள் நாடுகளுக்கு ...	ரூபா 3	0	0
பினங்கு, சிங்கப்பூர், மலாயா முதலிய வெளிநாடுகளுக்கு ...	„ 4	0	0
தனிப் பிரதி ...	„ 0	4	0

ஒரு வருஷத்திற்கு குறைந்து பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

நிபந்தனைகள்

1. சந்தாதாரர்களாகச் சேருகிறவர் முன்பணம் செலுத்தியாவது, வி. பி. யிலாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

2. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும், மணியார்டர் அனுப்பும்பொழுதும் தங்கள் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிடவேண்டும். பதிலறிய விரும்புவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

3. ஒரு வருஷத்திற்கு இடையில் சந்தாதாரராகச் சேருவோர் இஷ்டப்பட்டால் முந்திய மாதங்களின் சஞ்சிகைகளையும் கிரயம் கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

4. விஷயதானஞ் செய்ய விரும்புங் கனவான்கள் எளிய நடையில் ஒரே பக்கத்தில் மிகத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

5. மததூஷணையான விஷயங்களும், வீண் தர்க்கங்களை யுண்டு பண்ணும் வியாசங்களும், ஆளைக்குறித்துத் தாக்கி எழுதும் வியாசங்களும், பத்திரிகையின் நோக்கத்திற்கு மாறுபாடான வியாசங்களும் பிரசுரிக்கப்படமாட்டா.

6. எந்த வியாசத்தையும் நிறுத்திக்கொள்ளவும், திருத்திக்கொள்ளவும், சுருக்கிக்கொள்ளவும் ஆசிரியருக்கு உரிமையுண்டு.

மானேஜர்,

"ஹிபாஜத்துல் இஸ்லாம்" ஆபீஸ்,

43-A, போஸ்டாபீஸ் தெரு,

G. T., மதராஸ்.

-2 MAY 1934

حفاظة الإسلام

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம். [குர்ஆன்]

ஆசிரியர்:—மௌலவீ A. R. அப்துர்றஹீம் ஸாஹிப் (பாக்கவி)

மலர் 5	ஹிஜ்ரி 1352 துல்ஹஜ்ஜு மீ 1934 ௵ ஏப்ரல் மீ	இதழ் 4

அல்குர்ஆன்

ஏ! நன்னம்பிக்கை கொண்டவர்காள்! கட்குடிப்பதும், சூது விளையாடுவதும், விக்கிரக ஆராதனைசெய்வதும் ஷைத்தானுடையசெய்கையான பாவக்காரியங்களாகும். ஆதலின், இக்காரியங்களை விட்டு விலகிக்கொள்ளுங்கள்; அதுபொழுது நீங்கள் ஜெயம்பெற்றவர்களாய்விடுவீர்கள். ஷைத்தானே கட் குடிப்பது, சூது விளையாடுவது இவைகளின்பொருட்டால் உங்களுக்கிடையே பகைமைத்தனத்தையும், பலவாறான சண்டை சச்சரவுகளையும் உண்டுபண்ணிவைக்கவும், உங்களை அல்லாஹ்வின் தியானம் தொழுகை முதலியவைகளை விட்டுவிலக்கவும் நாடுகிறான். ஆதலின் நீங்கள் அதைவிட்டு பின்வந்து அல்லாஹ்வுக்கும் அவனது ரசூலுக்கும் வழிப்பட்டு நடந்து பேணுதலுடனிருந்துகொள்ளுங்கள். இவ்வாறு செய்யாதுபோனால் விஷயத்தைத் தெரியப்படுத்துவதுதான் நம்முடைய (ரசூலுடைய) பொறுப்பாகுமென்பதை நன்கு தெரிந்துகொள்ளுங்கள்.

ஆதிகாலத்தில் சில சஹாபாக்களில், கட் குடியின் போதையால் அடிக்கடி பெரும் பெரும் சச்சரவு ஏற்பட்டுக்கொண்டிருந்த தன் பயனை அவர்களுக்கிடையே நாளுக்கு நாள் ஒற்றுமைக் குறைவு ஏற்பட்டுக்கொண்டும், ஐக்கிய வாழ்விற்கு இடையூறு காணப்பட்டும் வந்தது. இந்த துர்ச்செய்கையை அன்னாரை விட்டுப் போக்குவதற்கு, அல்லாஹ் தஆலா குர்ஆன் ஷரீபில், கட் குடியினாலேற்படும் கெடுதிகளை நன்கு விளக்கிக் காண்பித்திருக்கிறான். கள்ளினாலேற்படும் போதையின் காரணமாய் மானிடன் மதிமயங்கி தன்னறிவு இழந்து தவித்துநிற்கும்படி ஏற்படுகிறது. முடிவாகக் கூறுமிடத்து, ஷைத்தானாகிறவன் கட் குடியினாலேற்படும் போதையையும், சூதுவிளையாடுவதாலேற்படும் நஷ்டத்தையும் மானிடரின் கண்களுக்குத் தெரியாது மறைத்து அவைகளினால் விளையும் அனந்தந் தீங்குகளை நன்குணர்ந்து கொள்ளாது செய்து விடுகிறான். இந் நிலைமையில் கட் குடியின் கெடுதியை அல்லாஹ் தஆலா எடுத்துக்காண்பித்து அதைவிட்டுத் தவிழ்ந்து கொள்ளுமாறு கட்டளை பிறப்பித்தவுடனே அதனை உபயோகித்துக்கொண்டிருந்த சஹாபாக்கள் அல்லாஹ்வின் இக் கட்டளையைச் சிரமேற்

தாங்கி கட்குடங்களையும், ஜாடிகளையும் வீதி களிலெடுத்தெறிந்துவிட்டார்களாதலின் தெரு வெல்லாம் ஒரே கள்மயமாகவே இருந்தது. பின்னர் உண்மைத் தோழர்களான சஹாபாக் கள் அப்பாவத்தினின்று வெளிவந்து உத்தமர் களாய்த் திகழ்ந்துவிளங்கியது குறிப்பிடத்தக்க தாகும்.

(வல்லாஹு அஃலம்)

அல்ஹதீது

ஹஸ்ரத்பீபி ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுவ தாவது:—எம்பெருமானார் நபிகள்திலகம் (ஸல்.) அவர்கள் வெளியில் பிரயாணஞ்செல்லுங் காலமெல்லாம் குலுக்குச்சீட்டுப்போட்டுப் பிராட்டிமார்களில் யார்பெயர் வருகிறதோ அவரைப்பிரயாணத்தில் தங்களுடன் அழைத்துச் செல்வது வழக்கமாக இருந்தது. அத்தன்மை போல் ஒருமுறை ஒரு யுத்தத்திற்காக வெளிச் செல்ல நாடியபொழுது சீட்டுக்குலுக்கிப்போட்டதில் என்பெயர் வந்ததால் அந்த சபரில் என்னைக்கூட அழைத்துச்சென்றார்கள். அதுகாலை பர்தாவின் கட்டளை இறங்கியிருந்ததால் யான் ஒட்டகத்தொட்டியினுள் வைக்கப்பட்டுஇறங்குமிடங்களிலெல்லாம் அப்படியேஅத்தொட்டியுடன் கீழே எடுத்து வைக்கப்பட்டுக்கொண்டிருந்தேன். எம்பெருமானார் சத்தியத்தூதர் (ஸல்) அவர்கள் கோரிச்சென்ற காரியம் முடிவடைந்து திரும்பிவருங்காலை மதீனாவுக்குச் சமீபமாய் இறங்குவதற்குள்ள சந்தர்ப்பமேற்பட்டது. அந்த இடத்தில் எனக் கேற்பட்ட முக்கிய தேவையை நிறைவேற்றவேண்டிய சந்தர்ப்பமேற்பட்டுவிட்டதால் யான் சற்றுதூரம் சென்றிருக்குங்கால் பயணம் புறப்படுவதற்குள்ள கட்டளை பிறப்பிக்கப்பட்டு யாவரும் புறப்பட்டுவிட்டார்கள். யான்சென்று திரும்பி வந்து ஒட்டகத் தொட்டியிருந்த இடத்துக்குச் சமீபம்வந்து பார்க்கும்போது என் கழுத்திலணிந்திருந்த மாலை காணப்படவில்லை. அதனைத் தேடிக்கொண்டு திரும்பச் சென்று பார்ப்பதில் சிறிது நேரம் தாமிதமாய் விட்டதால் பிரயாணம் புறப்பட ஆயுத்தமாக இருந்த யாவரும் யான் தொட்டியிலிருக்கக் கூடுமெனக் கருதிக்கொண்டு தொட்டியை எடுத்து ஒட்டகத்தின்மீது வைத்து கட்டிக்கொண்டு புறப்பட்டுவிட்டார்கள். அதுகாலை யான் சிறுவயதுடைய இளநங்கையாகவும் ரொம்ப மெல்லிய திரேகத்தையுடையவளாகவுமிருந்ததால் யான் தொட்டியிலிருப்பதும் இல்லாதிருப்பதும் ஒன்றுபோலிருந்ததால் வித்தியாசம் கண்டுபிடிக்க முடியாதுபோயிற்று. அங்கிருந்து யாவரும் புறப்பட்டுச் சென்ற சற்றுநேரத்துக்கெல்லாம் என்கழுத்திலிருந்து தவறிக்கீழே விழுந்து கிடந்த மாலை அகப்பட்டுப்போயிற்று. அதனை எடுத்துக்கொண்டு கூட்டம் தங்கியிருந்த இடத்துக்கு வந்து பார்க்கும்போது அங்குயாரையும்காணமுடியவில்லை. யாது செய்வதென்று தோன்றாது கீழே தரையில் விழுந்து, பிரயாணஞ் சென்றோர் தொட்டியில் என்னைப்பார்க்காது போய்விட்டார்களாதலின் அந்த இடத்திற்கே திரும்பவருவார்களென எண்ணிக்கொண்டிருந்தேன் இந்நிலைமையில் எனக்கு நித்திரை மிகைத்து தூக்கத்திலாகிவிட்டேன். ஸப்வானிப்னு முஅத்தல ஸலமீ என்பார் கூட்டத்திற்குப்பின் தவறிப்போன சாமான்களை எடுத்து வருவதற்காக நியமிக்கப்பட்டிருந்ததால் அவர் தன்னிருப்பிடத்திலிருந்து அதிகாலையில் புறப்பட்டு வந்தவர், நான் தங்கிவிட்டதைத் தெரிந்துகொண்டு துக்கத்திற்கறிகுறியான திருவசன மொன்றை ஓதினர். யான் அதன் சப்தம் கேட்டு உடனே விழித்துக்கொண்டேன். உடனே அவர் தன் ஒட்டகத்தை உட்காரச்செய்தார் அதன்மீது யான் ஏறிக்கொண்டவுடன் அதிதீபரமாய் ஒட்டகம் நடந்ததால் பட்டாளத்துடன் வந்து சேர்ந்து கொண்டோம். இந்நிகழ்ச்சி சம்பவத்திற்கிடையே எவர்கள் படுதூறு கட்டிவிடவேண்டுமென்று கருதியிருந்தனரோ அன்னோருக்குத்தக்கசமயம் கிடைத்துவிட்டது. எனவே அன்னோர் தங்கள் மனதில் தோன்றியவைகளை எல்லாம் உருட்டித்திரட்டி ஒரு உருவத்துக்குக் கொண்டுவந்து விட்டார்கள். இக்கிளர்ச்சிக்கு அப்துல்லாஹிப்னு உபை என்பார் ஆதிகாரணகாக இருந்தார். இந்நிலைமையில் யாவரும் மதீனாவுக்குள் பிரவேசிக்கவே யான் வியாதியிலகப்பட்டு ஒருமாத காலம்வரை அதிலேயே பீடிக்கப்பட்டிருந்தேன். இதற்கிடையே படுதூறு

சொல்பவர்களும் பலவாறு பேச ஆரம்பித்திருந்தார்கள். யான் வியாதியிலகப்பட்டிருக்குங் காலை எம்பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் அதற்கு முன்னிருந்தஅன்போடு முழுப்பிரியத்தோடுஎன்னைமுன்னோக்காது மேலுக்குமேலாக விசாரித்துச் செல்வதைப் பார்த்து எனக்கு பெரும் சந்தேகமேற்பட்டுவிட்டது. அது காலை யான் பலமற்று சக்திகுன்றியவளாயிருந்ததால் உம்மமஸ்தஃவின் உதவிகொண்டு தேவைக்காகப் பின்புறம் புறப்பட்டுச் சென்றேன். அக்காலை வீடுகளில் மலஜலபாதை செய்துகொள்ளுவதற்கு இடமில்லாததால் ஒவ்வொருவரும் காடுகளில் தனித்தனியே இடவஸதிசெய்து வைத்திருந்தார்கள். நாங்களிருவரும் அங்கு சென்று திரும்பிவருங்காலை அம்மாது துப்பட்டியை மேலே சுருட்டிக்கொண்டு கீழேவிழுந்து அல்லாஹ் தஆலா மஸ்தஃக்குக் கெடுதிவிளைவிப்பானாக! எனக்கூறினள். இதனை செவியுற்ற யான், எதற்காக இவ்வாறு கூறுகின்றாய்; மஸ்தஃ என்பார் பத்ர்யுத்தத்துக்குச் சென்றுவந்தவராகும்; அவர் விஷயத்தில் இவ்வாறுகூறுவது சரியல்லவெனக் கூறினேன். உடனே உம்முமஸ்தஃ என்னும் மாது அம்மனிதன், உம்மீது படுதூறுசெய்து திரிவது உமக்குத் தெரியாதா? எனக்கூறி நடப்பு விஷயங்கள் யாவற்றையும் ஆதியோடந்தமாய்க் கூறினர். இதனைச் செவியுற்றவுடன் என்வியாதி முன்னைவிட பதிமடங்கு அதிகரித்துவிட்டது. இந்நிலைமையில் யான் வீடுசென்றவுடன் சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள் என்னிடம் வந்து என்மீது ஸலாம்சொல்லி உன்நிலைமைஎவ்வாறிருக்கிறதென்று வினவினர்கள். உடனே யான், என்னைத்தந்தை வீட்டுக்கனுப்பி வைத்துவிட வேண்டுமெனக் கேட்டுக்கொண்டேன். அங்குபோய் என்மீது கூறப்படும் படுதூறைத் தக்கவிதமாகத்தெரிந்து கொள்ள நாடினேன். உடனேபெருமானர் (ஸல்.)அவர்கள் அனுமதியளித்து விட்டார்கள். அதுபொழுது யான் வீடுசென்று என்விஷயமாய் மனிதர்கள் யாதுபேசிக்கொள்கிறார்களென்று என் தாய் தந்தையரிடம் விசாரித்தேன். உடனே அன்னோர், ஒருபெண் அழகுசௌந்தரியமுடையவளாயிருந்து அவள்புருடன் அவள் மீது பிரீதிகொண்டிருப்பாராகில் அவள்மீது பலவாறான படுதூறு கூறுவது மானிடர்களின் இயற்கை குணமாகயிருப்பதால் உம்முடைய காரியத்தைப் பார்த்துக்கொண்டிரு எனக்கூறினர்கள். இதனைச் செவியுற்ற யான், மனிதர்கள் இவ்வாறு கூறிக்கொண்டிருப்பதுபேராச்சரியமாகும் எனக்கூறினேன். அன்றிரவு முழுதும் என்கண்களிலிருந்து தண்ணீர் தாரைதாரையாக வடிந்துகொண்டு இரவு முழுதும் நித்திரையில்லாதிருந்தது. அதிகாலையில் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி), உஸாமாபின் ஜைத் (ரலி.) இவ்விருவரையும் கூப்பிட்டனுப்பி தங்கள் அருமைப்பத்தினியார் விஷயமாய் ஆலோசனைபுரிந்தார்கள். ஹஸ்ரத் உஸாமா (ரலி.) அவர்கள், அம்மாது தங்கள் பத்தினியாக இருப்பதால் அவர் மீது எவ்வாறான கெட்ட எண்ணமும் வைக்கலாகாது எனக் கூறினர்கள். ஹஸ்ரத் அலீ (ரலி.) அவர்களோ, அல்லாஹ்வின் ரசூலே! தங்களை அல்லாஹ் தஆலா கஷ்டதிசையில் வைக்கவில்லை; ஆயிஷா யில்லாதுபோனாலும் தங்களுக்குத் தேவை யானோர் மனைவியாக அமையத் தயாராகயிருக்கின்றார்கள் ஆதலால், தாங்கள் பீபி ஆயிஷாவின்வெள்ளாட்டியாகிய புரைராவை அழைத்து உண்மையை விசாரிப்பீர்களாகில் அவள் ஒளிக்காது தங்களிடம் உண்மையைத் தெரிவித்துவிடுவாள் எனக் கூறினர்கள். உடனே சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள் 'புரைரா' என்னும் வேலைக்காரியை அழைத்து பீபிஆயிஷாவின் விஷயத்தில் சந்தேகந்தரக்கூடிய எதாகினுமொரு செயல் நிகழ்பெற்றதாக உம்மால் கூறமுடியுமாவெனக் கேட்டார்கள். அதற்கு அவ்வெள்ளாட்டி, தங்களை நபியாக அனுப்பிவைத்த அல்லாஹ்வின் மீது பிரமாணமாக யான் பீபிஆயிஷா அவர்களில் அவ்வாறான செயல்களை ஒருக்காலும் கண்டிலேன்; ஆனல் சிறு பிராயமுடையவராக இருப்பதால் மாவுகுழைத்துக்கொண்டிருக்கும் போது அப்படியே தூங்கிவிடுவார்; ஆட்டுக்குட்டிவந்து அந்த மாவைத்தின்றுவிடும் எனக் கூறினள். இவ்வார்த்தையினை செவியுற்ற எம் பெருமானர் (ஸல்.) அவர்கள் வெளியில்வந்து என்மனைவி விஷயமாய் படுதூறு கூறமுற்பட்டிருப்பவர்கள் எனக்குப் பெரும் மனவருத்தத்தைக்கொடுத்துவிட்டார்கள்; அல்லாஹ்வின்மீது பிரமாணமாக என்குடும்பத்தார்களிடமிருந்து எவ்வாறானதுற் செய்கைகளும்நிகழ்பெற்றிருக்குமெனயான் நினைக்கவில்லை எனக்கூறினர்கள். இதனைசெவியுற்ற ஹஸ்ரத் ஸஅதிப்னுமுஆத் (ரலி.) அவர்கள் எழுந்து நின்று அல்லாஹ்வின்ரசூலே! தங்களிடம் மன்னிப்புத் தேடிக்கொள்கிறேன்; அவ்ஸ் கூட்டத்தாரில் யாரும் இவ்வாறு கூறியிருப்பார்களாயின் உடனே அவ

ரைக்கொன்றுபோடுகிறோம்; வேறெவரும் கூறி
யிருப்பார்களாயின் உடனே அவரையும்கொன்று
போடுகிறோம்; கஜ்ரஜ் கூட்டத்தாரினின்று
யாரும் இவ்வாறு கூறியிருப்பார்களாயின் தங்
கள் உத்திரவுபோல் செய்யத்தயாராக இருக்
கின்றோம் எனக் கூறினார்கள். உடனே ஸஃதி
ப்னு உப்பாதா (ரலி.) அவர்கள் எழுந்து இது
சம்பந்தமாய்ப் பலமாறு கூறினார்கள். அதுகாலை
யான் (ஆயிஷா) இராப்பகல்முழுதும் அழுது
கொண்டும் ஒவ்வொரு மூச்சையும் துக்கம்நிறம்
பியதாய் வெளியாக்கிக்கொண்டும் தூக்கமற்
றிருந்தேன். முடிவாக அதிகாலையில் என் தாய்
தந்தையர்கள் என்னிடம் வந்தார்கள் அது
பொழுது இரண்டு இரவு ஒருபகல் முழுதும்
யான் துயில்புரியாது அழுதுகொண்டே இருந்த
தால் ஹிருதயம் வெடித்துவிடுமோ என்னும்
எண்ணம் என்மனதில் தோன்றிற்று. என தாய்
தந்தையர்கள் என்னிடம் உட்கார்ந்துகொண்டி
ருக்கும்பொழுதே அன்ஸார் மாதொருத்தி உள்
ளால்வருவதற்கு அனுமதிகோறிஉள்ளால்வந்த
வுடன் என்னுடன்சேர்ந்து அழஆரம்பித்தாள்.
இந்நிலைமையில் நபிகள்திலகம் (ஸல்.) அவர்கள்
அங்குவந்து என்னிடம் உட்கார்ந்தார்கள். படு
தூறு ஆரம்பிக்கப்பட்டகாலமுதல் அவ்வாறு
ஒருநாளும் அவர்கள் உட்கார்ந்தது கிடையாது.
இந்த ஒரு மாதத்துக்கிடையில் தங்கள்மீது எவ்
வாறான வஹியும் வரவேயில்லை. அதுபொழுது
எம்பெருமானார் சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள்
ஹஸ்ரத், என்னை (ஆயிஷா ஸித்தீகா(ரலி.)அவர்
களை) விழித்து, 'ஆயிஷாவே! உம்மீது இன்ன
இன்னவிதமான சந்தேகம் எனக்கேற்பட்டிருக்
கிறது; நீர் அதைவிட்டு நீங்கிக்கொள்ள விருப்
பங்கொண்டிருக்கும் நிலைமையில், இவ்வார்த்தை
கள் பொய்யாக இருக்குமாயின் கூடியசீக்கிரம்
அல்லாஹ் தஆலா வஹியின்மூலம் உம்முடைய
துப்பரவை வெளியாக்கிவைப்பான்; இவ்வாறு
நிகழ்பெற வேண்டுமென நாடுவாயாகில் அல்
லாஹ் தஆலாவிடம் பிழைபொறுக்கத் தேடிக்
கொண்டு மன்னிப்பை விரும்புவாயாக; எந்த
அடியானாகிலும் அல்லாஹ் தஆலாவிடம் தன்
பாவங்களை மன்னிக்கத் தேடுவானாகில் அல்
லாஹ் தஆலா அந்த பாவத்தைப் பொறுத்துக்
கொள்கின்றான். இவ்வாறு எம்பெருமானார் நபி
கள் திலகம் (ஸல்.) அவர்கள் கூறிக்கொண்டிருக்
கும்போதே என்கண் தண்ணீர்வடிவது நின்று
போய் சற்றேனும் அதன் அடையாளம் காணப்
படாதுபோயிற்று. உடனே யான் என் தந்தை
யைநோக்கி, எனக்குப் பகரமாய் பதில்கூறுமாறு
கேட்டுக்கொண்டேன். உடனே அவர்கள், ரசூ
லுல்லாஹ் (ஸல்.) அவர்களிடம் யாதுகூறுவ
தென்று தங்களுக்குத் தோன்றவில்லையெனத்
தெரிவித்துவிட்டார்கள். அதன்பின் பதில்கூறு
மாறு என் தாயாரிடம் கூறினேன். அவர்களும்
யாது கூறுவதென்று தங்களுக்குப் புலனாக
வில்லையெனக் கூறிவிட்டார்கள். அதுபொழுது
யான் சிறுபிராயமுடையவளாயிருந்தும் வெகு
துணிச்சலோடு பெருமானார் (ஸல்.) அவர்களை
நோக்கி, தாங்கள் பலபேர்களின் வார்த்தைக்
குச் செவிமடுத்துவிட்டதால் ஒருவாறு தங்கள்
மனம் மாறுதலடைந்து அதனை உண்மை என்
றும் உறுதிகொண்டுவிட்டீர்கள் ஆதலின் இது
பொழுது யான் உண்மையை உரைப்பேனாகில்
தாங்கள் ஒருக்காலும் நம்பிக்கைகொள்ளமாட்
டீர்கள்; நான் துப்பரவாயிருப்பதை அல்
லாஹ் தஆலா நன்குதெரிந்திருப்பதால் கூடிய
சீக்கிரம் அதனை வெளியாக்கிவிடுவான்; அது
பொழுது தாங்கள் உண்மை யாதென்பதைத்
தெரிந்துகொள்வீர்கள்; இதுபொழுது அல்
லாஹ் தஆலா எனக்கு உதவிபுரியக்கூடியவனாக
யிருக்கிறான்; நான் பொறுமையைக்கைக்கொண்
டிருக்கிறேன், எனக்கூறிவிட்டுப் படுக்கைவிரிப்
புக்குச் சென்றுவிட்டேன். சிற்றடியாளாகிய
என்விஷயமாய் குர்ஆன்ஷரீப் மூலம் எவ்வித
மும் வஹீ அறிவிக்கப்படமாட்டாது; ஆனால்
நபிகள்நாயகம் (ஸல்.) அவர்கள் கனவுமூலம்
உண்மை சம்பவம் அறிவிக்கப்பட்டு விஷயத்
தைத் தெரிந்து கொள்வார்களென்றுமட்டும்
என்மனதில் உறுதி ஏற்பட்டிருந்தது. அதே
சமயத்தில்—அந்த இடத்தைவிட்டு யாரும்எழுந்
திராது உட்கார்ந்துகொண்டிருக்கும்போதே
ரசூலகரீம் (ஸல்.) அவர்கள்மீது வஹீ இறங்க
ஆரம்பித்து தங்கள் திரேகம் வியர்வையால்
நிரப்பப்பட்டு வடிவதற்கு முற்பட்டது. அது
காலை எம்பெருமானார் நபிகள்திலகம் (ஸல்.)
அவர்கள் பீபி ஆயிஷா ஸித்தீகாவை விழித்து,
'ஏ! ஆயிஷாவே! அல்லாஹ் தஆலா இது
பொழுது உமது தூய்மையை வெளிப்படுத்தி
விட்டானாகில் அவனை துதிசெய்துகொள்வா
யாக' எனக்கூறினார்கள். அதுபொழுது என்
தாய்தந்தையர்கள் அங்கு நின்றுகொண்டு
அல்லாவுடைய ரசூலுக்குமுன் தலைசாய்த்து
அவர்களுக்கு நன்றிசெலுத்தும்படி கூறினார்
கள்.



அல்மதீனத்துல் முனவ்வரா

சோதரீர்!

நீர்வளம் நிலவளம் பொருந்திய, மாண்பு மிக்க பூமியாகிய மதீனத்துற் றசூல் என்னும் சிறப்புவாய்ந்த ஸ்தலமானது மட்டில்லாமகிமை வாய்ந்த பூபாகமாகும். எம்பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் ஆரோக்கியமாய் சயனித்திருக்கும் கண்ணியமிக்க புண்ணிய ஸ்தலமுமாகும். உலகதயாளர் சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள் மக்கமாநகரில் சன்மார்க்கப்பிரசாரம் செய்தக்கால் அவர்களையும் அவர்களைப் பின்பற்றியொழுகிய பக்த கோடிகளையும் ஆங்குள்ள அறியாமாக்கள் சொல்லொண்ணா துன்பத்துக்காளாக்கினார்கள்; அதனால் பெருமானார் (ஸல்.) அவர்களைப் பின்தொடர்ந்தோர் பரிசுத்தம்பொருந்திய அப் புண்ணியபூமியைவிட்டு 'ஹிஜ்ரத்' செய்து அன்னிய தேசங்களில் குடியேறவேண்டிய சந்தர்ப்பமு மேற்பட்டுவிட்டது. எனவே ஆரம்பத்தில் ஸஹாபாக்கள் தங்கள் ஞானாஸிரியரவர்களின் அனுமதிபெற்று 'ஹபஷா' தேசம்குடியேறியபொழுது அத்தேச வேந்தரான நஜ்ஜாஷிபாஷா அன்னோரை வரவேற்று தமது தேசத்தில் வசிப்பதற்குள்ள சகல சௌகரியங்களையும் செய்து கொடுத்தார். பின்னர் அன்னவரும் எம்பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களின் திருமுகம்பெற்று இஸ்லாத்தைத் தழுவிக்கொண்டார்.

மற்றும் பல ஸஹாபாக்களும் திரு சமுகத்தின் அனுமதியின்மீது மதீனா முனவ்வராவுக்குக் குடியேறினார்கள். அவ்வூர்வாசிகளில் சிலர் ஏற்கனவே இஸ்லாத்தைத் தழுவியிருந்த காரணத்தால் அவண் ஹிஜ்ரத்செய்துவந்த முஸ்லிம்களை வரவேற்று அவர்களுக்கு வேண்டிய பல சவுகரியங்கள் செய்து கொடுத்தார்கள். கடைசியாக நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்களும் மதீனாவுக்குக் குடியேறிவிடவேண்டுமென்று மதீனாவாசிகளான அன்ஸார்கள் கோரிக்கொண்டு இஸ்லாத்துக்காகத் தங்கள் உடல், பொருள், ஆவி முதலியவற்றையும் அர்ப்பணஞ் செய்வதாகவும் வாக்களித்து பெருமானார் (ஸல்.) அவர்களிடம் "பைஅத்" என்னும் உடன்படிக்கையும் செய்துகொண்டார்கள். அல்லாஹ்தஆலாவும் மதீனாவுக்கு ஹிஜ்ரத் செல்லுமாறு உத்திரவு பிறப்பித்தான். அவ் வுத்திரவிற்கேற்க பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களும் மதீனா முனவ்வராவுக்குச் சென்று அதனை வாசஸ்தலமாகச் செய்துகொண்டார்கள். சிறப்புத்தங்கிய மதீனாமுனவ்வராவில் முஹாஜிரீன்களும் அன்ஸார்களும் ஒன்று சேர்ந்து விட்டதால் அந்த இடம்இஸ்லாத்தின் முக்கிய பீடமாக அமர்ந்தது. அதுகாலை குப்பார்கள் இஸ்லாத்தை நசுக்கிவிட என்னென்னவோ சூக்ஷிகளையும் குரோதச் செயல்களையும் புரிந்துபார்த்தும் யாதொரு சதியும்பயன் படாது போயிற்று. இறுதியில் சத்திய இஸ்லாம்தான் ஜெயம்பெற்றது. உலகத்தில் பரவிக்கிடந்த அந்தகாரங்கள் ஒழிந்து நாநாபக்கங்களிலும் இஸ்லாத்தின் ஜோதி பரவுவதற்கும் அந்தமதீனமா நகர்தான் அரணாக இலங்காநின்றது. இத்திவ்விய நகரின்கண்ணே எம்பெருமானார் சத்தியத்தூதர்(ஸல்.) அவர்கள் சயனித்திருக்கின்றார்கள். அல்லாஹ்தஆலா அவர்களுக்குச் சகல பாக்கியங்களையும் கொடுத்தருள்வானாக.

மகான் அவர்களின் ஜீவியத்தில் அபரிமிதமாக முன்னேற்றமடைந்துள்ள பாகம் இந்நகரில் இலங்கிக்கொண்டிருக்கிறது: அவர்களால் நிர்மாணிக்கப்பட்ட மஸ்ஜிதுந்நபவியும் இதர ஞாபகச் சின்னங்களும் இற்றைக்கும் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றது. அங்குள்ள மஸ்ஜிது நபவிய்யில் ஒரு ரக்அத்து தொழுகையை நிறைவேற்றிவைப்பது இதர இடங்களில் ஆயிரம் ரக்அத்து தொழுவதற்குச் சமமாகும்

என எம்பெருமானர் சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள் கூறியிருக்கின்ருர்களென்ருல், அந்த மகுத்துவம் தங்கிய மேன்மைபொருந்திய ஸ்தலத்தின் நன்மதிப்பு நன்கு புலனுகிறதன்ருே? எனவே ஹாஜிகள் ஹஜ் பிரயாணத்தின் போது மதீனமுனவ்வரா செல்லும் பாக்கியம் பெருங்காலே ஹயாத்துன்னபி அவர்கள் முன் நின்று ஸலாம் சொல்லுகின்ருர்கள். அது பொழுது ஆங்குள்ள இதர சின்னங்களே யும் கண்காணிக் கின்ருர்கள். அதனுல் எண்ணமுடியாத மட்டில்லாத அநேக நன்மை களே ஹாஜிகள் அடைகின்ருர்கள். எனவே ஹஜ்ஜுச் செய்ப அருகதையுள்ளவர்கள் சற்றே னும் பின்வாங்காது இம்மகத்தான புண்ணியம் தங்கிய நற்காரியங்களேச்செய்து இகபர சாத னங்களே அடைவார்களாக.

மிர்ஸாவின் உண்மைத் தோற்றம்

(சென்ற மாதத்தொடர்)

(9) மிர்ஸாவின் பொய்யானபாத்தியதைகளே சற்றேனும் ஆக்ஷேபமின்றி ஒத்துக்கொள்கிற வர்கள்தான் அவரின் கோபத்திலிருந்தும் ஏசலி லிருந்தும் விடுபடுவர்; இல்லேயேல், அவர்கள் அவரது ஆபாஸ வசைமொழிகளுக்கிலக்காவர். ஒவ்வொரு முஸ்லிமும் தன்னுடைய புஸ்தகங் களேப் பிரியத்துடனே வாசிக்கின்றனர்; ஆனல் எவர்களுடைய ஹிருதயங்களில்ஆண்ட வன் முத்திரையிட்டுவிட்டானே, அந்த வேசை மக்கள்மட்டும் என்னே யொப்புக்கொள் கிறதில்லே என்று மிர்ஸா கூறுகிருன்.

(ஆயினயே கமாலாத்தே இஸ்லாம் ப. ப. 547. 48.)

(10) தான் நபியென்ற பாத்தியதைபை நிலே நிறுத்திவிட வேண்டுமென்று மிர்ஸா கொண்டி ருந்த வீணன நம்பிக்கையை முஸ்லிம் உலமாக் கள் தகர்த்தெறிந்துவிட்டதினல் அவர்களேப் பற்றி அடியில் கண்டபடி கூறுகிருர்: "ஒ விசு வாசமற்றவர்களே! பாதி கிறிஸ்தவர்களே! ஏசுவின் எதிரியின் கூட்டாளிகளே! இஸ்லாத் தின் விரோதிகளே!" என்று மட்டுமல்லாது இன்னும் பலவிதமாகவும் கூறுகிருர்.

(இஷ்திஹார் தீன்ஹஸாரி, ப. 12)

இன்னுமிவர் தன்னுடைய 'அன்ஜாமேஆத் ஹம்' தொடர் நூல் 4 பக்கம் 25-ல் "இவர்கள் சத்தியம் செய்வார்களா? ஒருபோதும் செய்ய வேமாட்டார்கள்; ஏனென்ருல் இவர்கள் பொய்யர்களாகவும், நாயைப்போல் திருட்டு மாமிசத்தை விழுங்கக்கூடியவர்களாகவு மிருக் கின்றனர்" என்று மௌலவிகளே நோக்கிக் கூறுகிருர்.

(11) மிர்ஸா, தனது எதிர் கட்சியினரை ஏசிப் பேசினதோடு மட்டும் நின்று விடாது, ஈஸா நபி (அலே.) அவர்களேயும் அதேமாதிரி தாக்கிப் பேசியிருக்கிருர். ஈஸா நபி (அலே.) அவர்களேப்பற்றி அவர் விவரிப்பதாவது: "கர்வம் பிடித்தவர், ஏமாற்றுக்காரர், மந்தமதி யினர், அசுத்த நாவினர், கோபக்குணத்தவர், அறிவிலும் செய்கையிலும் அனுபோகமற்றவர், திருடர், பிசாசைப் பின்பற்றுபவர், சாத்தானுல் இல்ஹாம் (ஞான வெளிப்பாடு) செய்யப்பட்ட வர், மூளேயில் கொஞ்சம் ஒழுங்கீனமானவர், இவரது தாய் வழிப்பாட்டியும் தகப்பன் வழிப்பாட்டியும் விபசாரிகளாயும் கற்பிழந்தவர் களாயுமிருக்க அவர்களின் ரத்தத்திலிருந்து இவரது சரீரம் உற்பத்தியானது. இவ்வித பரம்பரை இவர் (ஈஸா (அலே.) இடம் இருந்ததி னுல்தான் இவருக்கு எப்போதும் வேசையரின் சார்பில் ஆசையிருந்தது; அதனுல்தான் ஒரு வேசியை, அவள் விபசாரத்தினுல் கிடைத்த கூலியைக்கொண்டு எண்ணெய் வாங்கச்செய்து, அதைத் தன் தலேயில் தேய்க்கும்படி அநு மதித்தார்."

(அன்ஜாமேஆத்ஹம் தொடர் நூல் ப.3-7)

இதே புத்தகம் 9-வது பக்கத்தில் மேலே குறிப்பிட்ட வசைச் சொற்களெல்லாம் இயேசு என்பவரைப்பற்றித் தானென்றும் அந்த இயே சுவைப்பற்றித் திருக்குர்ஆனில் ஆண்டவன் ஒரிடத்திலும் குறிப்பிடவில்லேயென்றும் கூறி யிருக்கிருர். 'பொய்யர்களுக்கு ஞாபகசக்திக் குறைவு' என்பதாகப் பாரஸீகப் பழமொழி யொன்றுண்டு. பாசாங்குகாரர்களுக்கும் இவ் விதமே ஞாபகசக்தி குறைவுபடலாம் என்

பது, மிர்ஸாவின் 'ஸஷ்மயே மஅரிபத்' என்னும் நூல் 218-ம் பக்கத்தின்மூலமாகத் தெரிகிறது. பிரஸ்தாப பக்கத்தில், "ஆண்டவன் இயேசுவைப்பற்றிக் கூறும்போது, ஆதம் (அலை.) அவர்களின் சிருஷ்டியையொப்பிடுகிறான்" என்று சொல்லியிருக்கிறார். மிர்ஸா சொல்லியிருப்பதின் தாத்பரியம் யாதெனில், 'ஆதம் (அலை.) ஆண்டவனிடம் எப்படியோ அவ்விதமேதான் ஈஸா நபி அவர்களும்; ஆண்டவன் ஈஸா நபி (அலை.) அவர்களை மண்ணினால் படைத்து "உயிருண்டாகுக" என்று கூறியவுடன் உயிருண்டாகிவிட்டது என்பது திருக்குர்ஆன் வாக்கியத்தின் சாராம்ஸமேயாகும். 'இயேசுவைப்பற்றி திருக்குர்ஆனில் ஆண்டவன் ஓரிடத்திலும் குறிப்பிடவில்லை' என்று மிர்ஸா முன்னால் சொல்லியிருக்கிற உறுதிமொழியை இந்த திருக்குர்ஆன் வாக்கியம் பொய்யாக்கிவிட்டது. திருக்குர்ஆனிலுள்ள விஷயங்கள் மிர்ஸாவிற்கு வாஸ்தவத்தில் தெரியாதோ? அல்லது நபித்தனம் வேண்டுமென்ற ஆவேசத்தினால் தன்னிஷ்டப்படியெல்லாம் சொல்லலாமென்று நினைத்தாரோ? காரணம் எதுவாயிருந்தாலும் மிர்ஸா தன்னுடைய சொந்த வார்த்தையினாலேயே தன்னை நிந்தனைக்குள்ளாக்கிக்கொண்டிருக்கிறார் என்பது திட்டமாகத் தெரிகிறது.

ஈஸா நபி (அலை.) அவர்களைப்பற்றியும், அவர்களின் அருமைத் தாயாரைப் பற்றியும் மிர்ஸா எழுதியிருக்கும் வாக்கியங்களை அடியில் குறிப்பிடுகிறோம். அதனால் அவர் எவ்வளவு ஆபாஸமான அருவருக்கத்தக்க பதங்களை உபயோகித்திருக்கிறார் என்பதை நீங்களே கண்டு கொள்வீர்கள்.

ஈஸா நபி (அலை.) அவர்களைப்பற்றி மிர்ஸாவின் வாக்கியங்கள்

(1) "ஐரோப்பிய ஜனங்களுக்கேற்பட்டிருக்கும் பெருங்கெடுதி என்னவென்றால் குடிதான். இதற்குக் காரணம் ஈஸா (அலை) அவர் ஒரு பெருங் குடிக்காரராயிருந்ததேயாகும். அவர் குடித்ததற்குக் காரணம் பழையவழக்கமாயிருக்கலாம்; அல்லது அவருக்கிருந்த சிக்கின் பரிகாரமாயிருக்கலாம்."

[கிஷ்தியே நூஹ் அடிக்குறிப்பு. ப. 65]

(2) "ஆண்மை என்பது மனிதத் தன்மையின் ஓர் சிறந்த வஸ்துவென்று நீங்கள் கருதவில்லையா? ஆண்மையற்றிருப்பது ஊமையும் செவிடுமாயிருப்பதற்குச் சமந்தான். அங்ஙனமாயின் ஈஸா (அலை.) அவர்களுக்கு இந்தசிறந்த ஆண்மைத்தனம் இல்லாததினால் அவர்கள் மனைவியரை நடத்தவேண்டிய முறைமைக்கும், அவர்களுடன் வைத்திருக்கவேண்டிய சம்பந்தத்தின் முறைமைக்கும் ஓர் உண்மையான பரிபூர்ண முன்மாதிரியாயிருக்கமுடியாது. இதன் காரணத்தினால்தான் ஐரோப்பிய பெண்மணிகள் நாணமற்றவர்களாயும், கற்பு நிலை தவறியவர்களாயுமிருக்கின்றனர்."

[மக்தூபாத்தே அஹ்மதியா வா-3 ப. 28]

(3) "ஈஸா (அலை.) அவர்களின் குணவிசேஷமென்ன? ஒரு பெருந்தீனிக்காரர்; ஒருபெருங்குடியர்." [ஷை நூல் ப, ப. 33—24]

(4) கிஷ்தியே நூஹ் 16 ம் பக்கத்தில் ஈஸா நபி (அலை.) அவர்களின் தாயார் கர்ப்பவதியாக யிருந்துகொண்டே யோசேப்பைக் கலியாணம் செய்ததாகவும், இந்தக் கலியாணமானது 'கர்ப்பவதிகள் கலியாணம் செய்யக் கூடாது' என்பதாக மூஸா (அலை.) கூறியிருக்கும் சட்டத்திற்கு விரோதமானதென்றும் மிர்ஸா எழுதியிருக்கிறார். இதிலிருந்து ஈஸா (அலை.) அவர்களின் தாயார் யோசேப்புடன் கள்ளத்தனமான வியபிசாரச் சம்பந்தம் வைத்திருந்ததாகவும், அவர்கள் யோசேப்புடைய நியாயமான மனைவியல்லவென்றும் மிர்ஸா கூறுவதாகத் தெரிகிறது.

(5) யூதர் கிறிஸ்தவர் இவ்விருவரின் பழக்க வழக்கங்களை ஒன்றுடன் மற்றொன்றை ஒப்பிடுங்கால், யூதர்கள் நிச்சயார்த்தத்திற்கும் கலியாணத்திற்கும் யாதொரு வித்தியாசம் பாராட்டுவதில்லையென்றும், நிச்சயம் செய்யப்பட்ட பெண்கள் தங்களுக்கென வரிக்கப்பட்ட புருஷர்களுடன் மிகவும் நெருக்கமாகக் கலந்து திரிந்து வந்தார்களென்றும், அதன் பயனாய் அநேக பெண்கள் விவாகத்திற்கு முன்பே கர்ப்பவதியாவது சகஜமென்றும்கூறி, இதற்கு உதாரணமாய், மரியம் (அலை.) அவர்களைக் கூறுவதுடன் அவர்கள் தன்வீட்டைவிட்டு வெளியேறி யோசேப்புடன் அலைந்து திரிந்துவந்ததாகவும் மிர்ஸா கூறுகிறார்.

[ஐய்யாமேசுல்ஹ ப. 65]

மிர்ஸாவின் வார்த்தைகளைச் சற்று கூர்ந்து நோக்கி ஆராய்ந்துபார்ப்போம். அவரது 'கிஷ்தியே நூஹ்' என்னும் புத்தகத்தில், யோசேப்பை

விவாகம் செய்வதற்கு முன்னாலேயே மரியம் (அலை.) கர்ப்பவதியாக இருந்தமையால் அவை கலியாணச் சட்டப்படி ஒப்புக்கொள்ளத்தகுந்த தில்லையென்பதாகக் கூறியிருக்கிறார். இன்னும் அவர் தனது 'ஐய்யாமே சுல்ஹ' என்னும் புத்தகத்தில் ஷை மரியம் (அலை.) கலியாணத் திற்குமுன்பே யோசேப்பு மூலமாகக் கர்ப்ப வதியாகிவிட்டதாகவும் கூறியிருக்கிறார்.

சுருங்கக்கூறுமிடத்து, ஈஸா நபி (அலை.) அவர்களை ஓர் வியபிசாரப் புத்திரனென்றும், அவர்களின் திருத்தாயாரை முறைதவறி யொழுகிய பெண்டிரென்றும் மிர்ஸா கூறியிருப் பதைக் காணலாம். நபியென்று பாசாங்கு செய்யும் ஒருவரின் முடிவான தீர்மானம் இது தான்போலும்! இவர் கூறுவதை உண்மை யென்று எவன் ஒப்புக்கொள்கிறானோ அவன் பரிசுத்த திருக்குர்ஆனும் நாயகவாக்கியங்களும் விளக்கமாகச் சொல்லும் உறுதிமொழியை முற்றிலும் அலக்ஷியம் செய்தவனாகிறான். ஒரு மனிதன், தான் கொண்டாடும் பாத்தியதை எவ் விதமாயிருந்தபோதிலும், ஈஸா நபி (அலை.) அவர்களையும், அவர்களின் தாயாரையும் இவ்வி தம் தைரியமாக வெட்கமற்று அவதூறுசெய்ய லாமா? மிர்ஸா தனது எதிரிகளை எப்போதும் அவதூறுசெய்து அதில் பழகிவிட்டபடியால், சரித்திரத்தை மறந்து, தனது மனம்போன போக்கிலெல்லாம் பைத்தியக்காரத்தனமாய் உளறிக்கொட்டியிருக்கிறார். அவர் குறிப்பிட் டுக் கூறியிருக்கும் வார்த்தைகள் நாகரீகமுள்ள ஒவ்வொரு மனிதனுக்கும் அருவருப்பையுண்டு பண்ணத்தக்கதாகவே யிருக்கின்றன. தெரு வில் திரியும் கல்வியறிவில்லா ஒரு சாதாரண மனிதனோ, சன்மார்க்கநெறி தவறியவனோ, அல்லது ஒரு கடுங்குற்றவாளியோ இம்மாதிரி வசைச் சொற்களை ஒருக்கால் உபயோகிக்க லாம் என்று எண்ண இடமுண்டு. ஆனால் தன்னைக் கிறிஸ்தவர்களின் மஸீஹ் என்றும், முஸ்லிம்களின் மஹ்தீயென்றும், ஜோராஷ்டிரி யரின் ஹோஷேதார் என்றும், பௌத்தர்களின் மாத்ரேயப் புத்தர் என்றும், ஹிந்துக்களின் ஸ்ரீகிருஷ்ணன் என்றும், இன்னும் பலவித அந் தஸ்துள்ளவரென்றும் கூறிக்கொள்ளுமொரு வர், ஒரு இழிகுலத்தில் பிறந்து, துர்ப்பழக் கங்களிலேயே பழக்கப்பட்டு, மிகவும் கேவல மான நிலைமையிலுள்ள ஒருவனின் ஸ்தானத் திற்குத் தன்னையும் தாழ்த்திக்கொண்டதின் மர்மம் நமக்குப் புலனாகவில்லை. மேல் கண்ட உண்மை விபரங்களை மறைத்துச் சாதுரியமாக மாற்றிக் கூறுவோரின் வார்த்தையை நாம் ஒப் புக்கொள்ள முடியுமா? கடவுளால் இல்ஹாம் (ஞானவெளிப்பாடு) செய்யப்பட்ட ஒருவரின் அந்தஸ்திற்கு, ஒரு நபியைப்பற்றியானாலும் சரி, அல்லது தனது எதிரிகளைப்பற்றியானா லும்சரி, இத்தகைய மிகவும் அஸங்கிய, ஆபாஸ வசைச்சொற்களைக் கூறுவது பொருந்துமா? தான் கடவுள் என்று சொல்லிக்கொண்டிருந்த பிர்அவுனுக்கு உபதேசிக்கும்படி, மூஸா (அலை.) அவர்களையும் ஹாரூன் (அலை.) அவர்களையும் ஆண்டவன் அனுப்பியபோது, மரியாதையான வார்த்தைகளையே உபயோகிக்கும்படி கட்டளை யிருட்டிருக்கிறதாகக் குர்ஆனில் கூறப்பட் டிருக்கிறது. நமது நபி பெருமானார் (ஸல்.) அவர்களும் பகைவர்களினால் பலமாக எதிர்க் கப்பட்டு, பலவித கஷ்டங்களை யனுபவித்திருக் கும் நிலைமையிலும் தங்கள் பகைவர்கள்மீது ஒரு வாக்கியமாயினும் தூஷணையாகக் கூறியிருப்ப துண்டா? வாக்கியமென்ன, ஒரு வார்த்தை யாயினும் கூறியிருப்பதுண்டா? முதலாவதாக இஸ்லாத்தையொப்புக்கொண்ட ஆண்களையும் பெண்களையும், குழந்தைகளையும் பிடித்து துன் புறுத்தியும், செத்த பிரேதங்களைக்கூடத் தாக் கியும், சஹாபாக்களை (தோழர்களை)க் கொலை செய்தும் வந்த கொடிய விரோதிகளைக்கூட நமது நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் அன்புட னும் ஆதரவுடனும் நடத்தவில்லையா? ஆனால் இங்கேயோ, "மஸீஹ்" (?) "முஜத்தித்" (?) என்று தன்னைக் கூறிக்கொள்ளுமொருவர், தன் பகைவர்களைமட்டும் தூஷிப்பதுடன் நின்றுவிடாது, ஒரு பரிசுத்தத்தீர்க்கதரிஸியை யும் அவர்களின் தாயாரையும் தூஷிக்கிறதை நாம் காண்கின்றோம். ஆண்டவனை உண்மை யாக விஸ்வாசிக்கிற ஒருவன், அந்த ஆண்டவ னின் திருத்தூதர்களில் எவரையாவது தூஷிப் பானா? இப்படி தூஷிக்கிற ஒருவனை ஒரு "மஸீஹ்" என்றாவது, ஒரு "முஜத்தித்" என்றாவது கூறலாமா? அல்லது ஒரு உண்மை முஸ்லிம் என்றுகூடக் கூறலாமா? ஆகவே சுய நலவாதிகள் தங்கள் வயிற்றுப் பிழைப்பைக்கருதி சமயத்துக்குத்தக்கவாறு மிர்ஸா விஷயமாய், ஒரு சமயம் தம்மை நபி என்று தஃவாச்செய் தவரென்றும், ஒருக்கால் சீர்திருத்தக்காரரென் றும் பினாத்தித் திரிவதை நம் முஸ்லிம் நேயர் கள் பொருட்படுத்தமாட்டார்களென்று கருது கின்றோம்.

சுகாதாரம்—சிசுக்கள் ஆரோக்கியம்

சிசுக்களுக்கு உண்டாகும் ஜீரணக்கோளாறுகள்

விஸ்தாரமான நமது தேசத்தில், சிசு மரண விகிதம் நடுங்கத்தக்க விதமாய் இருக்கிறது. இதற்கு முக்கிய காரணம், சிசுக்களுக்குண்டாகும் ஜீரணக் கோளாறுகளேயாகும். ஆனதுபற்றி இந்தக் கோளாறுகள் இன்னவை என்பதையும், அவைகளைப் போக்க வீட்டில் செய்யவேண்டிய சிகிச்சையையும் பற்றி, எல்லோருக்கும் கொஞ்சமாகிலும் தெரியவேண்டியது அவசியமாக இருக்கிறது. சிசுக்களின் ஆகாரமும் சிசுக்களின் வயிற்றுக் கோளாறுகளும் ஒன்ருெடொன்று சம்பந்தப்பட்டிருந்தபோதிலும்கூட, இப்போது ஏற்பட்டிருக்கும் பணநெருக்கடியாலும், சுகாதார விஷயங்கள் ஜனங்களுக்குத் தெரியாததாலும் படித்தவர் படிக்காதவர்கள் யாவருக்குமே சிசுக்களின் ஆகார விஷயத்தில் முக்கியமாய்ப் புட்டிப்பால் புகட்டும் விஷயத்தில் ஒருவித அசிரத்தை ஏற்பட்டிருக்கிறது. ஆனதுபற்றி, இந்த விஷயத்தை விளக்கவேண்டியது மிகவும் முக்கியமாய் இருக்கிறது. முலைப்பாலுண்ணும் குழந்தைகளுக்கு வயிற்றுக் கோளாறுகள் கம்மி. இவர்களின் மரண விகிதம் கூட 100-க்கு ஒன்ருயிருக்கிறது. புட்டிப்பால் புகட்டி வளர்க்கும் சிசுக்களின் மரண விகிதம் 100-க்கு 5 ஆக இருக்கிறது. ஆனதுபற்றி, சிசுக்களுக்குத் தினம் நேரிடக்கூடிய கோளாறுகளைக் குறித்துச் சொல்லுவது உபயோகமாகவிருக்குமெனக் கருதி இந்தக் கோளாறுகளை முக்கியமான குறிகளுடன் தக்கபடி விளக்கிச் சொல்ல உத்தேசிக்கிறேன்.

உப்பஸமும், வயிற்று வலியும்.—இவ்விரண்டு நிலைமைகளும் சிசுக்களிடம் சாதாரணமாய்க் காணக்கூடியவை. வயிற்றிலாவது குடல்களிலாவது காற்று தங்கிப்போவது ஆகாரப்பிசகினுல் நேரிடக்கூடியது. கேஸீனே, ஸ்டார்சோ, சர்க்கரையோ அதிகமாயிருப்பதினுலாவது அல்லது அதிக அளவு ஆகாரம் கொடுப்பதினுலாவது, அல்லது சுருக்கு சுருக்காய் ஆகாரம் புகட்டுவதினுலாவது உண்டாகக்கூடியது. அல்லது சிசுக்களுக்கு ஒரு காலி புட்டி அல்லது முலைக்காம்புபோல் ரப்பரில் செய்து இவைகளைக் கொடுத்து சப்பச் சொல்வதினுல் உண்டாவது. சில சமயங்களில் நிஷ்காரணமாய் தாய் முலைப்பால் உண்ணும் குழந்தைக்கு உப்பஸம் வரலாம். அதுபொழுது அது வயிற்று வலியாலும் வருந்தலாம். இந்த சந்தர்ப்பங்களில் பாலில் ஏதோ கெடுதல் உண்டு என்று நினைக்கவேண்டும். பாலில் ஒருசமயம்கொழுப்பு அதிகமாய் இருக்கலாம். அல்லது தாய் ஆரோக்கியமில்லாதிருந்தால், பாலின் குணம் மாறியிருக்கலாம். உப்பஸம் இல்லாமல் வயிற்றுவலி மாத்திரம் கண்டால், கைகால்கள் ஜில்லிட்டிருப்பதும், அடிவயிற்றின்மேல் போர்வை சரியானபடி இராமலிருப்பதும் இதற்குக் காரணமாக இருக்கலாம். ஆகாரம் சரியாய் ஜீரணமாகாதிருந்தாலும், மலம் இறுகிப் போயிருந்தாலும் அதனுல் வயிற்றுவலி உண்டாகலாம்.

சிசுக்களுக்கு வயிற்றுவலி கண்டால் அதைத் தெரிந்துகொள்வது சுலபம்.—குழந்தை அப்போது 'வீர்' என்று கத்தி அழும். கால்களை இழுத்துக்கொள்ளும். அடிவயிற்றின் சதைகள் கனமாயும் சுருங்கியும் இருக்கும். ஒரு மணிக்கு ஒருதரம் இம்மாதிரி உண்டாகும். இவை எப்போதும் சாயங்கால வேளையில்தான் உண்டாகும். பகலில் ஒன்றுமிராது. வயிற்றுவலி கடுமையாயிருந்தால், குழந்தையின் உதடுகள் வெளுத்துப்போகும். உதடுகள் படபடவென்று துடிக்கும். கண்கள் மேலுக்கு இழுத்துக்கொள்ளும்; கைகால்கள் கெட்டியாய்விடும். முஷ்டியை அமுக்கிக்கொண்டிருக்கும். சிசுக்கள் பலஹீனமுள்ளவைகளாயிருந்தால் இசிவுகள் காணும் மூர்ச்சையாயும் போய்விடும்.

சிகிச்சை.-முலைப்பாலுண்ணும் குழந்தைக்கு ஆகாரத்தின் அளவைக் குறைத்து அடிக்கடி பால் கொடுப்பதையும் நிறுத்தவேண்டும். தாயின் ஆரோக்கியத்தைக் கவனிக்கவேண்டும். அடியோடே முலைப்பால் கொடுப்பதை நிறுத்தக்கூடாது. பால் போதாமலிருந்தால் தினம் 2, 3 விசை பசும்பால் புகட்டி, மற்ற சமயங்களில் தின்னக் கொடுக்கவேண்டும். புட்டிப்பால் புகட்டப்பட்ட குழந்தைகளாயிருந்தால், அந்தஆகாரத்தை மாற்றவேண்டியது. கேஸின்

அளவைக் குறைக்கவேண்டியது அல்லது தயிருக்கு எலுமிச்சம்பழ ரஸமாவது பார்லி ஜலமாவது விட்டுக்கலக்கி, ஜீரணமாகும்படி செய்ய வேண்டும். சில குழந்தைகளுக்கு ஸ்டார்சு அதிகமாக இருக்கலாம். சில உரிமை ஆகாரங்களில் ஸ்டார்சு அதிகமாக இருப்பதுண்டு இவைகளைத் தள்ளும்படி செய்யவேண்டும். மலம் இறுகிக் கட்டிப்போயிருந்தால் க்ளிஸரின் எனிமாக் கொடுத்து பின்னர் பேதி மருந்து கொடுக்கவேண்டும். ஆகாரத்திற்குமுன் தேக்கரண்டியில் டில்-வாடர் தனியாகவோ, அல்லது ஆகாரத்துடன் கலந்தோ கொடுத்தால் அனுகூலமாகவிருக்கும். அடிவயிற்றையும் தொடைகளையும் வெப்பம் கொடுக்கும்படியான போர்வையால் மூடிவைக்க வேண்டியது.

வயிற்றுவலி வரும்போது, உஷ்ணமான பிளானல்களை அடிவயிற்றின்மேல் போட்டு, குழந்தையின் நிலைமையை அடிக்கடி மாற்றிக் கொண்டிருக்கவேண்டியது. அதனுல் காற்று வெளிவரும். தவிர, அடிவயிற்றைத் தடவி அமுக்கினுலும் அனுகூலம் உண்டு. குழந்தை தாயின் தோள்களின் மேலாவது தொடையின்மேலாவது குப்புறப் படுத்துக்கொண்டிருக்கும்போது, காற்று வெளிவருவதற்கு, வயிறு அமுக்கப்படுதலே காரணமாக இருக்கலாம். சில சமயங்களில் ஒரு சின்ன தேக்கரண்டியளவு சலாட் எண்ணெய் புகட்டினுல் வலி நிற்கும். மயக்கமருந்துகளாவது நோயை நிறுத்தும் பவுடர்களாவது கொடுக்கக்கூடாது.

விக்கல்.—இது குழந்தைகளுக்கு அடிக்கடி உண்டாகி அதிக தொந்தரையைக் கொடுக்கக் கூயடிது. சாதாரணமாய், இது குழந்தை பிறந்த சில மாதங்கள் வரைக்கும் காணும். இது ஜீரணக் கோளாறுகளுடன் உண்டாகக் கூடியது. இம்மாதிரி டயபிராம் சுருங்குவதற்குக் காரணம் ஒன்றும் காணேம். சில சமயங்களில் விக்கல் தினம் எடுக்கும். அதனுல் கெடுதல் ஒன்றுமிராது. ஆகிலும், சிசுவிற்கும், பெற்றோர்க்கும் அடிக்கடி ஆயாஸத்தைக் கொடுக்கும்.

சிகிச்சை.—அடிக்கடி விக்கல் கண்டால் ஆகாரத்தை மாற்றினுல் அது நின்றுவிடும். குழந்தையின் நிலைமையை அடிக்கடி மாற்றி, மெதுவாய் அதன் முதுகின்மேல் தட்டி, அடிவயிற்றின் மேற்பாகத்தின் மேல் தடவிக் கொடுத்தால் இதுமட்டாகும். சில கேஸுகளில் ஒரு தேக்கரண்டி குளிர்ந்தநீரில் கொஞ்சம் எலுமிச்சம்பழ ரஸமாவது அல்லது இரண்டு துளி கலக்கின கந்தகத் திராவகத்தையாவது விட்டுக் கொடுத்தால் பிரயோஜனம் உண்டு.

வாந்தி.—முலைப்பாலையாவது புட்டிப்பாலையாவது அவசரம் அவசரமாய் உண்ணும் குழந்தையானது, முதல் இரண்டு மூன்று மாதங்கள் வரையிலும் கொஞ்சம் கக்கும் இது சகஜம். ஆகாரத்திற்கு சில நிமிஷங்கள் முன்னரோ, பின்னரோ யாதொரு சிரமமும் ஆயாஸமுமின்றி கொஞ்சம் ஆகாரம் கக்கும். குழந்தைகளின் சிறிய இரைப்பையானது அதிகமாக அகன்றுவிடாதபடிக்கு இது இயற்கையில் ஏற்பட்ட ஒரு உபாயம். இதனுல் கெடுதல் ஒன்றுமில்லாமற் போனபோதிலும் கூட, இதுவே ஒரு கெட்ட பழக்கத்தை உண்டு பண்ணி, பின்னுல் கஷ்டத்தைக் கொடுக்குமாதலால், இதை இப்போதே தடுக்கமுயலவேண்டும்.

வாந்திக்குச் சாதாரணமான காரணம் யாதெனில், இரைப்பையின் அழற்சியேயாகும். இது தப்பிதமான ஆகாரத்தினுலேயும், ஆகாரம் அதிகமாகச் சாப்பிடுவதினுலேயும், ஆகாரத்தின் குணம் மட்டாய் இருப்பதாலேயும், அடிக்கடி ஆகாரம் ஊட்டுவதாலேயும் உண்டாகக்கூடியது.

வாந்தியுடன் எப்போதும் பேதியும் இருக்கும். தீவிரமான வாந்தி இருக்கும்போது குடற்கோளாறும் இருக்கும்.

இரைப்பை, குடல் கோளாறுகளினுல் உண்டாவது தவிர, வாந்தி எடுப்பது மற்றகுழந்தை வியாதிகளுக்கும் ஒரு அறிகுறியாக இருக்கலாம். வாந்தி தீவிரமானதாகவாவது இருக்கலாம்; அல்லது நீடித்ததாகவாவது இருக்கலாம்.

வாந்தி தீவிரமானதாகவிருந்தால் அது தீவிரமான அஜீரணத்தினுல் உண்டாயிருக்கலாம். குழந்தை ஒய்ந்து படுத்துக்கொண்டிருக்கும்; தேகம் வெளுத்திருக்கும்; வயிற்று வலியால் அழும். உஷ்ணக்கிரம் 101 அல்லது 102 டிக்ரீக்கள் இருக்கும். வாந்தி அடிக்கடி வரும். இரைப்பையில் உள்ளது யாவும் வெளிவரும் வரையில் அநேக மணி காலம் வாந்தி எடுத்துக் கொண்டிருக்கும். கடூரமான கேஸுகளில் வயிற்றில் ஒன்றுமில்லாதிருந்தாலும், சில சமயங்களில் பித்தநீர் கலந்த சளி ஜவ்வும் சிலசமயங்களில் இரத்தம் கலந்த சளி ஜவ்வும் வாந்தியாகும்,

சில கேஸுகளில், பேதியும் கடுமைபாகவிருக்கும்; தேகம் கலகலத்துப்போய்விடும். தீவிரமான வாந்தி இருந்தால், குழந்தைகளுக்குப் பிராணபயமும் நேரிடும், இதில் அவஸ்தைப்பட்ட சிசுக்களுக்கு மறுபடியும் ஆகாரத் தவறுதல் ஏற்பட்டால், இந்த வியாதி மீண்டும்வரும்.

நீடித்த வாந்தியானது புட்டிப்பாலூட்டி வளர்த்த குழந்தைகளுக்குச் சாதாரணமாய் உண்டாகும். அஜீரணம் நீடித்திருப்பதே இதற்குக்காரணம். இம்மாதிரியான வாந்தி அநேக வாரங்கள்வரையிலும் இருக்கும். இதற்கு இரைப்பையானது அளவுக்கு மிஞ்சி அழற்சியடைந்திருப்பதே காரணம்.

இதில் வாந்தியெடுப்பது தவிர, தேகம் மெலிந்துபோகும். குழந்தை வெளுத்துப்போய் சிடுசிடென்று இருக்கும்; பசி அதிகமாகவாவது இருக்கும்; அல்லது குறைந்துபோகும். சாப்பிட்ட பிறகு நோயும் அழுகையும் இருக்கும். நாக்கு அழுக்கடைந்திருக்கும்; குடல்கள் ஒழுங்காயிரா. மலப்போக்கும் மலச்சிக்கலும் மாறி மாறி இருக்கும். மேற்சொல்லியபடி உடனே ஆகாரத்தைக் கக்குவதுபோலில்லாமல், ஆகாரம் போட்ட கால்மணி அல்லது அரைமணி பொறுத்து வாந்திவரும், அதிக கெடுதலான கேஸுகளில் குழந்தை பலஹீனப்பட்டுப்போய் எலும்பு மாத்திரம் தெரியும். களையினாலாவது, ப்ரான்கோ நியூமோனியாவினாலாவது அல்லது இதர சிக்கலான வியாதிகளினாலாவது மரணம் நேரிடும்.

சிகிச்சை.—மேற்சொல்லிய வாந்தியானது ஜீரணக் கோளாறுகளினால் ஏற்பட்டது. இதற்கு ஆகாரத்தைச் சரிப்படுத்துவதுதான் வழி. வேறோர் வியாதிக்கு இது ஒரு அறிகுறியாயிருக்கும் பக்ஷத்தில் வேறொன்றும் செய்ய வேண்டிய அவசியமில்லை. தவறான ஆகாரத்தினால் தீவிரமான வாந்தி கண்டால், அழற்சியை வெளிப்படுத்தவேண்டியதவசியம். இது வாந்தியாலேயே முடிந்துவிடும். ஆனால், இரைப்பையை அலம்பியோ அதிகமாக வெந்நீர் குடிக்கக்கொடுத்தோ, அதை வெளிப்படுத்தி விடலாம். கடுமையான கேஸுகளில் சிலமணி நேரம் ஆகாரத்தையேநிறுத்திவிட்டு, கொஞ்சம் கொஞ்சமாய் அடிக்கடி ஆகாரம் கொடுத்துவர வேண்டியது. முலைப்பாலுண்ணும் குழந்தைகளுக்கு கொஞ்சநேரம் ஊட்டக்கொடுக்க வேண்டியது, அல்லது வே Whey அல்லது ஆல்புமின் ஜலம் கொடுக்கலாம்,

---

நாம் முன்னேற்ற மடைவதற்குள்ள மார்க்கம்

இதுகாலை உலகின் பற்பல பாகங்களிமுள்ள முஸ்லிம்களென்ன? முக்கியமாய் இந்தியாவின்கண் வதிந்துவரும் 8 கோடி முஸ்லிம்களும் மிடிமைத்தனமென்னும் வியாதியால் பீடிக்கப்பட்டு கஷ்டமடைந்து கொண்டிருக்கிறார்களென்பது யாவரும் ஒப்புக்கொள்ளக்கூடிய ஒருவிஷயமாகும். முஸ்லிம்களில், வேறு விஷயங்களில் பலவாறான அபிப்பிராயபேதங்களேற்பட்டிருந்தபோதிலும் அன்னோரின் நிலைமை நாளுக்கு நாள் பிற்போக்கடைந்துகொண்டே வருகிறதென்று கூறுவதில்மட்டும் யாவரும் ஒரே அபிப்பிராயமுடையவர்களாயிருந்து வருகின்றார்கள். ஒருசிலகாலமாய் இதர சமூகத்திலுள்ள பல்வேறு வகுப்பினர்கள் மிடிமைத்தனமென்னும் படுகுழியிலிருந்து வெளிவர பகீரதப் பிரயத்தனமெடுத்துக்கொண்டு காலத்தின்போக்குக்குத் தக்கவாறு தங்கள் காரியாதிகளை நடத்திச்சென்று பலவகையிலும் முன்னேற்றமடைந்துவருவதை நாம் காண்கின்றோம். ஆனால் முஸ்லிம் அரசர்களும் பணம் படைத்த சீமான்களும் நாளுக்குநாள் க்ஷீணதிசைக்குவந்து ஏழ்மைத்தனத்தை அடைந்து வருவதை நாம் பிரத்தியட்சமாய்க் காண்கின்றோம். இவ்வாறு முஸ்லிம்கள் க்ஷீணதிசையடைந்து வருவதைக்காணும் நாம், அதற்குள்ள முக்கிய காரணம் யாதாகுமெனத் தெரிந்து அதற்குப் பரிகாரந் தேடாதிருப்போமாகில் சொற்பகாலத்தில் இந்தியாவின்கண்வதியும்முஸ்லிம்கள், தாழ்ந்த—கேவலமான ஏழை ஜாதியில் கணக்கிடப்பட்டுப் போவார்களென்று யூகிக்க இடமுண்டாகிறது. இதற்கு முக்கிய காரணம் முஸ்லிம்களிடமிருந்த காணிபூமிகளில் முக்கால்

பாகம் இதர சமூகத்தினர்வசம்போய்விட்டது; மீதமிருக்கும் கால்பங்கில் மூன்று அணு விகிதம் வட்டியின்பேரில் அடமானம் வைக்கப்பட்டுப்போயிருக்கிறது. அதுவும் கூடியசீக்கிரம் கைவிட்டுச் செல்லக்கூடியதாயிருக்கின்றது. இதுபொழு தாகிலும் நாம் அதன்மீது கவனத்தைச்செலுத்தாதிருப்போமாகில் 20, 25 வருடங்களுக்குள் அதுவும் கையிழக்கப்பட்டு போய்விடுமென்பது திண்ணம்.

வட்டியைவிட்டு விலகிக்கொள்ளுங்கள்

முஸ்லிம்களின் வருவாயில் மிகுதபாகம் வட்டியாகக் கொடுக்கப்படுகிறது. ஆகவே நாம் ஆரம்பமாக வட்டிகொடுப்பதினின்று விடுதலைபெறுவதற்கு முயற்சிக்கவேண்டும். இதற்காக வட்டியினுலேற்படும் கெடுதிகளேயும் அதனுல் பொருள் நஷ்டமடைந்து ஏழ்மையாய் உட்கார்ந்திருக்க வேண்டிய நிலைமையையும் மஹாஜனங்களுக்குத் தக்கமுறையில் எடுத்துக்காட்டிப் பிரசாரம் புரியவேண்டும். பொது முஸ்லிம்கள் தங்கள் வருவாய்க்குத் தக்கவாறு சிக்கனத்தைக் கைக்கொண்டு வருவாயில் செலவுபோக கொஞ்சம் மீதப்படும்படி செலவு செய்யவேண்டும்.

பெண்களினுல்தான் வீண்செலவுகளுக்கு வழி ஏற்படுகிறது

வீண்செலவு ஆரம்பமாக பெண்களினுல்தான் ஏற்படுகிறதென்றும், இதனுல் முதலில் அன்னேருக்கு கணக்கைக் கற்றுக்கொடுத்து அவர்களிடம் குறிப்பிட்ட ஓர் தொகையைக்கொடுத்து சிக்கனச் செலவு செய்து வரவுசெலவு எழுதிவரும்படிசெய்து அதனைப் பரீட்சிக்கவேண்டு மென்றும், தாம் வெளியில் செல்லும்போதும் கடைவீதிக்குப் போகும்போதும் தேவைக்கதிகமான பணம் வைத்துக்கொண்டு செல்லலாகாதென்றும், வீட்டுக்கு ஏதாகிலும் சாமான்கள் தேவைப்படுமாகில் அதற்குமட்டும் காசு எடுத்துச்சென்று அதனை வாங்கிவரவேண்டுமென்றும், தேவைக்கதிகமாய் காசுகொண்டுபோவதனுல் கண்ணுக்குத் தென்படும் வஸ்துக்களேயெல்லாம் வாங்குவதற்கு மனம் விரும்புமென்றும், எவன் சொற்பமாக சிக்கனத்தோடு செலவுசெய்யும் விஷயத்தில் தேர்ச்சியடைந்துவிடுகிருனே அவனுக்கு வரும்படி சம்பாதிப்பதன் வாயலொன்று திறக்கப்பட்டுப் போகின்றது என்றும் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே வரவுசெலவுகளே எழுதிப்பார்த்து, வருவாயில் குறைவேற்படும்பொழுது செலவினத்தில் மெள்ள மெள்ள சிக்கனத்தை அனுஷ்டிக்க முயற்சிக்கவேண்டியது அத்தியாவசியமாகும்.

சிக்கனத்தைக் கைக்கொள்ளும் முறை

முஸ்லிம்களென்ன? ஒவ்வொரு மானிடப்பிறவியின் ஐஸ்வரியங்களும் அநேகமாய் ஆகாரம், உடுப்பு, மருந்து, வாசஸ்தலம், நகை, சடங்குகளை நிறைவேற்றுவது ஆகியவைகளில் தான் செலவாய்க்கொண்டிருக்கின்றன. ஆனுல் இவைகள் இன்றியமையாச் சாதனங்களாகையால் அறவே இவைகளேஒழித்துவிட்டிருக்க முடியாது. ஆனுல் சிக்கனத்தை அனுஷ்டித்துக் காரியாதிகளைநடத்திச்செல்ல ஹேதுவிருக்கின்றது.உதாரணமாக ஆகாரத்தை எடுத்துக்கொள்வோம்: அநேகர் பிரயாசையோடு சமைத்த சாப்பாடு, விலை மதிப்புடைய சாப்பாடுதான் அதிக இன்பமாக இருப்பதுடன் திரேகாரோக்கியத்தைக் கொடுக்கக்கூடியதாகவு மிருக்கிறதென்று கூறுகின்றனர். இன்னேரின் இக்கூற்று சற்றும் பிரயோசனமில்லாப் பொய்க்கூற்றே யாகும். சாப்பாட்டிற்கு ருசி ஏற்படுவதெல்லாம் சாப்பிடுபவனது விருப்பத்தைப் பொறுத்திருக்கிறது. உண்மையாக சாப்பாட்டின்மீது வெறுப்பேற்பட்டிருக்குங்கால் சாதாரண சொற்ப மதிப்புள்ள சாப்பாடும் இன்பமளிக்கக் கூடியதாகத் தெரிகிறது. அதிகப்பிரயாசையோடு மிகுந்த செலவில் தயாரிக்கப்படும் சாப்பாட்டைவிட சாதாரணச் சாப்பாட்டினுல் மனிதனுக்கு அதிகமாக கெடுதி ஏற்படுவதில்லை. சாதாரணச் சாப்பாடு சீக்கிரம் ஜீரணமாய் விடுவதால் தேகபுஷ்டியையும் பரிசுத்த இரத்தத்தையும் உண்டுபண்ணுகின்றது. ஆகவே நாம் மிதமிஞ்சிய பிரயாசை-அதிகமான பணச்செலவினுல் தயாரிக்கப்படும்சாப்பாட்டைத்தவிர்த்து சாதாரணச் சாப்பாட்டையே தெரிந்துகொள்வோமாகில் நம்முடைய செலவில் சிக்கனமேற்படுவதுடன் நம்முடைய திரேகத்துக்கும் பிரயோசனமேற்படுகின்றது.

உடுப்பில் சிக்கனம்

இதரர்களின் கண்களுக்கு அழகாய்த் தெரிவதற்காகத்தான் நாம் விலையுயர்ந்த உடுப்புகளை அணிந்துகொள்கிருேம். இந்த எண்ணத்தை விடுத்து தூய்மையாயிருப்பதற்கும் ஆரோக்கிய வாழ்க்கையைக் கைகொள்ளுவதற்கும் தான் உடுப்பு அணிந்துகொள்ளுவதென்று கருதுவோமாகில் அநேக ரூபாய்கள் நம்கை வசம் மீதப்படுவதைக் காணலாம்.

வீடுகட்டுவதில் சிக்கனம்

சாப்பாடு உடுப்பு இவைகளின் சிக்கனத்துக் குப்பின் இருப்பிடம் விஷயமாயும் கவனம் செலுத்தவேண்டியது முக்கியமாகும். ஆனல் வீடுகட்டும் விஷயத்தில் ரூபாய் செலவிடுவது வீண் காரியமாகமாட்டாது. ஆனல் அதிலும் சிக்கனத்தைக் கைக்கொள்ளுவது முன்னேற்ற மடைவதற்குள்ள மார்க்கங்களிலொன்ருகும். அல்லாஹ்தஆலா நம் கையில் ஐசுவரியத்தைக் கொடுப்பானுகில் உறுதியான நல்ல கட்ட டம் அமைத்துக்கொள்ளவேண்டும்; அவ்வாறு செய்துகொண்டால் நமக்குமட்டுமன்றி நம் பிந்திய சந்ததிகளுக்கும் போதியதாய் விடுகின்றது; காத்து விலாசத்துடன் உறுதியாய் அமைக்கப்பட்ட ஒரு கட்டடமானது சுகாரோக்கியத்தைக் கொடுத்து பலவாருன வியாதிகள் வராது தடைசெய்துகொண்டிருக் கிறது. தக்க காற்ரேட்டமுள்ள இடவசதி கிடைத்துவிடுமாகில் வைத்தியச் சிகிச்சைக்கும் கம்மியாக செலவிடும் சந்தர்ப்பமேற்படும் எனக்கூறப்படுகிறது.

அளவுக்கு மிஞ்சிய பிரயாசை

உண்ணல் உடுத்தல் முதலியவைகளில் நாம் எவ்வளவு பிரயாசை எடுத்துக்கொள்கிருேமோ அவை மிதமிஞ்சியதாகும். அவை நம்மை நாசத்தின்பக்கல் இழுத்துச் செல்வதுமாகும். அவைகளில் சிக்கனத்தை அனுஷ்டிப்பது கொண்டு, அநேக ரூபாய்கள் மிச்சப்படுவதற்கு ஹேதுண்டாகிறது. இவ்வாறு கூறுவது கொண்டு, வெறும் வயிருக பங்கரக்கோலமாய்த் திரிந்து இன்பமற்ற வாழ்க்கை நடத்தவேண்டு மெனக் கூறுவதாகக் கருதிவிடுக. ஆனல் சிக்க னத்தை அனுஷ்டிக்க வேண்டுமென்றேதான் கூறுகின்ருேம். முடிவாகக் கூறுமிடத்து, வருவாய்க்குச் செலவினம் குறைந்திருக்க வேண்டு மென்பதுதான் நமது கருத்தாகும்.

மருந்தில் சிக்கனம்

வைத்தியசிகிச்சையிலும் மருந்திலும் அநேக ரூபாய்கள் செலவாய்க்கொண்டு போகிறது. நாம் நம்முடையவும், நமது வீட்டுடையவர்களுடையவும் திரேகத்தன்மையை நன்கு தெரிந்துகொண்டு அதற்காகுமான பரிகாரத்தைச் செய்துவருவோமாகில் நம்முடைய அநேக ரூபாய்கள் மீதப்பட்டுப்போகும். நம்முடைய அஜாக்கிரதையின்பயனுக அநேக வியாதிகள் உண்டாகின்றது. ஆகவே பேணுதல் குறைவாக இருப்பது நாம் சுகஜீவியாக வாழ்க்கை நடத்துவதற்குத் தடையாயிருப்பதுடன் கலங்கமற்ற மனத்தினராயிருப்பதையும்போக்கி சஞ்சலசாகரத்தில் மூழ்கினவர்களாகவும் செய்துவிடுகிறது.

ஆபரணத்தில் சிக்கனம்

சுகவாழ்க்கை நடத்துவதற்கு ஆபரணமும் ஓர் பிரதான வஸ்துவாகயிருக்கிறது. பணத்தைச்சேகரித்து வைப்பதற்கு இஃதோர் வழியாகவுமிருக்கிறது. ஆனல் தற்காலப் பழக்கத்திலிருக்கும் அநேக நகைகள் வெளித்தோற்றத்தில் தங்கநகையெனக் கருதப்படினும் அது உருக்கியெடுக்கப்படுமாயின் ரூபாய்க்கு நான்கணுக்கூட தேறுவது கஷ்டமாகும் நிலைமையிலிருக்கின்றது. ஆகவே முஸ்லிம்கள் தங்கள் சம்பாத்தியத்தின்மீது கவனஞ்செலுத்தி தங்கள்சமூகம் க்ஷீணதிசை அடைந்திருப்பதை யுன்னிப்பார்ப்பார்களாகில் இவ்வாருன நகைகளில் தங்கள் ஐசுவரியங்களை செலவிடாதிருப்பார்களாக! ஆனல் பெண்டிர்களின் வித்தியாசத்துக்காக 2, 3 சாதாரண விலைகுறைவாயுள்ள நகைகளைக்கொண்டு போதுமாக்கிக்கொள்வார்களாகில் அதுவே சிறந்தமார்க்கமாகும். தற்கால உலகம் சென்றுகொண்டிருக்கும்போக்கை கவனித்துவரும் மாதுக்கள் தங்கள் ஆபரணங்களை விற்பனைசெய்து முக்கியபல சொத்துக்கள் வாங்குவதில் ஈடுபட்டிருப்பதைக்கண்டு நாம் மிகமகிழ்வெய்துகின்ருேம்.

சடங்குகளை நிறைவேற்றுவதில் சீர்திருத்தம்

இவையாவற்றையும்விட முஸ்லிம்களை க்ஷீணதிசைக்குக்கொண்டுசெல்வது அவர்கள் சடங்குகளை நிறைவேற்றுவதற்காக அபரிமிதமான ஐசுவரியங்களைச் செலவிடுவதாகும். இதில் முஸ்லிம்களின் அநேக கணக்கற்ற ரூபாய்கள் நாசமாய்க்கொண்டே போகின்றன. ஆகவே, இதனைவிட்டுத் தவிழ்ந்துகொள்வதற்காக முஸ்லிம்கள் சன்மார்க்கபந்தத்திற்குக் கட்டுப்பட்டு நடக்க முயற்சிக்கவேண்டியது ஆவசியமாகும். பிறர் இகழ்வார்களென்று அஞ்சி பயந்து தன்சட்டத்தை ஒருக்காலும்மீறிநடக்கலாகாது. இதனல், விவாகத்தில் சீதனம் கொடுக்கலாகாது, வலீமா விருந்தளிக்கக்கூடாது, மரணமாய் விட்டவர்களுக்காக தானதருமஞ் செய்யலாகாது என்றுகூறுவதாகக் கருதிவிடலாகாது. ஆனல் இவ்விஷயங்களிலெல்லாம் சிக்கனத்தை அனுஷ்டித்து தன் ஸ்திதிக்குத் தக்கவாறு நடந்து கொள்ள வேண்டுமென்றே கூறு

கின்றேம். இதுகாலை நம் முஸ்லிம் சமுகத்தினரிடையே கணக்கற்ற பழக்க வழக்கங்கள் ஏற்பட்டு குழந்தை பிறப்பதற்கு முன்னிருந்து அக் குழந்தை விர்த்தாப்பிய திசையை அடைந்து மரணமடைந்துபோன பிறகும் அநேக வீண் செலவுகள் செய்யப்படுகின்றன. இவ்வாறன செலவுகள், இதர சமுகத்தினரிடமிருந்து நம் சமுகத்தினரிடையே வந்து நுழைந்து கொண்டிருக்கிறது. பிள்ளை, தாயின் கெர்ப்பத்திலிருக்கும்போதே அதற்காக சடங்குகளை நிறைவேற்ற முற்படுவது அறிவீனமேயன்றி வேறில்லை. நம் முஸ்லிம் சோதிரர்கள் இவ்வாறன சடங்குகளை நிறைவேற்றுவதற்காகச் செலவிடும் ரூபாய்களிலனேகம் வட்டிக்குக் கடன் வாங்கியதாகவேயிருக்கின்றது. அக்கடனின் முடிவு கடைசியாக காணி பூமிகளை இழந்து ஏழைகளாய் உட்காருவதற்குள்ள ஸ்திதிக்குக் கொண்டுவந்து விட்டுவிடுகிறது. கையிலுள்ள ஐசுவரியம் நீங்கிப் போவதனுல் உரோஷமற்றுப்போகிறது. அதனுல் எந்தக் காரியத்தையும் மனத்துணிச்சலோடு செய்வதற்கு இடங் கொடுப்பதில்லை. ஆகவே நம் முஸ்லிம் சோதிரர்கள் அருமையான ஐசுவரியங்களை வீண் விரயஞ் செய்துவிடாது வெகு ஜாக்கிரதையாக நடந்துகொள்வார்களாக. ஐசுவரியத்தைச் சம்பாதிப்பதைவிட கையில் கிடைத்ததை வீண்விரயஞ் செய்துவிடாது காப்பாற்றிவைப்பதுதான் மிக மிக சிரேஷ்டமுடையதாகும். இவ்வாறு மீதப்படுத்துவதில் தன்மன இச்சையுடன் பெரிய போர்புரிய வேண்டிய சந்தர்ப்பம் மேற்படும். எவனிடமாகிலும் கொஞ்சம் மீதப்பட்டுவிடுமாயின் அவனுடைய மனமானது பலவாறன விஷயங்களில் அந்தப்பணத்தைச் செலவிடுவதற்குத் தூண்டும். அதில் வெற்றிபெற்று மாயவலையில் சிக்கிக்கொள்ளாதவனே சிறந்த புருஷனுகும். ஆகவே நம் முஸ்லிம் நேயர்கள் காலத்தின் போக்கையுணர்ந்து ஆவன செய்வதற்கு முன்வந்து ஜாக்கிரதையாக காலங் கழிப்பதற்கு முன் வருவார்களாக.

ஈஸா (அலை.) சிலுவையிலறைபடவில்லை.

(ஜனுப் அபுல்ஹஸன் ஷாதுலீ வரைவது.)

ஹஸ்ரத் ஈஸா நபி யவர்கள் சிலுவையிலறையப்படவில்லை யென்னும் விஷயத்தை விளக்கி வட இந்திய மேதாவியொருவர் "கஸ்ருஸ்ஸலீப்" என்னும் நாமமுடைய நூலொன்று எழுதியுள்ளார். அதில், கிறிஸ்தவர்களின் சாட்சியங்களைக் கொண்டும் இஸ்லாத்திலுள்ள பிரதான ஆதாரங்களைக் கொண்டும் நபி ஈஸா (அலை.) அவர்கள் சிலுவையிலறையப்படவில்லை யென்பதை தெற்றென விளக்கப்பட்டிருக்கிறது. அவ்விஷயம் பொது மகா ஜனங்களுக்கும் குறிப்பாக கிறிஸ்தவர்களுக்கும் அதிலும் முக்கியமாய் காதியானிக் குஞ்சுகளுக்கும் தக்கப் பயன் படுமெனக் கருதி அதனைத் தழுவிய சில குறிப்புகளுடன் இங்குவெளியிட முன் வந்துளேன்.

குர்ஆன் ஷரீபானது, ஹஸ்ரத் ஈஸா (அலை.) அவர்களின் சிலுவை சம்பவம் முற்ற முற்றத் தவறனதென்றும் தள்ளப்பட்ட விஷயமென்றும் கூறு நிற்கின்றது. மேலும், இதை நம்பக் கூடியவர்களை சபிக்கப்பட்டவர்களென்றும் தீர்மானிக்கின்றது. ஏனெனில் இறைவன்,

"அவர் (யூதர்)கள் அவர் (ஈஸா நபியவர்) களைக் கொல்லவுமில்லை சிலுவையி லேற்றவுமில்லை" என்று திருமறையில் அருளுகிறன். ஆதலின் ஈஸா நபியவர்கள் சிலுவையிலேற்றப்படவில்லை யென்பது முஸ்லிம்களின் ஏகோபித்த அபிப்பிராயமாகும். முஸ்லிம்களுக்கு குர்ஆன் ஷரீப்தான் பிரதான ஆதாரமாகும் என்றாலும் சரித்திரமுறைப்படி இது சம்பந்தமான ஒரு சிலவற்றை எழுத யாம் ஆர்வங் கொண்டுள்ளோம் அவ்வாதாரத்தைக்கொண்டும் குர்ஆன் ஷரீபு கூறுவது மிகமிக சரியானதென்பது நன்கு ஸ்பஷ்டமாய்த்தெரிந்துவிடும்.

சிலுவைக் கோள்கையின் உண்மைநிலை.

கிறிஸ்தவர்கள் சிலுவை சம்பந்தமான இந்நிகழ்ச்சியை ஓர் குறிப்பான நோக்கத்திற்காக

ஏற்படுத்தி யிருக்கின்றன ரென்பதை முதன்முதலாக நாம் கூறிவிடுவது தகமையுடையதாகும். தற்கால கிறிஸ்தவர்களின் மூலக் கொள்கைகளினின்று பாவ நிவாரணம் என்பது உயிர்நாடிபோன்ற ஓர் கொள்கையாம். மேலும் ஹஸ்ரத் ஈஸா (அலை.) பாவதாரிகளின் மீட்சிக்கும் மன்னிப்புக்குமே சிலுவையிலறையப்பெற்று உயிர் துறந்தார்கள் என்றும், அவர்கள் தங்களுக்காகவே பலியானார்கள் என்றும் நம்பும் ஒருவனுக்குப் பாவநிவாரணை உண்டாய்விடும் என்பதற்குச் சிலுவை சம்பவத்தையே முழுப்பொறுப்பாக்கி வைத்திருக்கின்றார்கள்.

ஓர் குற்றமற்ற மனிதனை மற்றப்பாவதாரிகளின் வினைகளுக்கு எதற்காகப் பொறுப்பாளியாக தீர்மானிக்கப்படல்வேண்டும்? அவரை சிக்ஷிப்பதனால் இதர குற்றவாளிகளின் பாவம் எங்ஙனம் மன்னிக்கப்படல் கூடும்? என்னும் விடயமாக இதுபோழ்து ஒரு சிறிதும் எழுத யாம் ஆர்வம் கொண்டிலேம். ஆனால் எமது நோக்கம் சிலுவை சம்பவத்தின் உண்மையை ஆராய்ச்சி செய்வதேயாம். ஈஸா நபியவர்களின் சிலுவை சம்பவம் பாவமன்னிப் பின் கோட்பாட்டுக்காக மட்டிலும் நம்பவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறதாதலின் பாவமன்னிப் பின் கோட்பாட்டை இவண் கொண்டுவர நேரிடுகிறது. ஆனால் உண்மையை ஆராய்ந்து பார்ப்போமாகில் கிறிஸ்தவர்களின் சொந்த வேதங்களும் இதை மெய்ப்பிப்பதாய்க் காணப்படவில்லை.

கிறிஸ்தவர்களின் இக்கோட்பாட்டின் குணம் எதுவரை பரவியிருக்கிறதென்றால், ஹிஜிரி 14-ம் நூற்றாண்டாகிய இதுகாலையும் ஆராய்ச்சியற்ற முஸ்லிம்களிற் சிலரும், தன்னை சீர்திருத்தக்காரரென கருதிக்கொள்ளும் ஒருசில மாக்களும் கிறிஸ்தவர்களின் விவாதப்போருக்குமுன் சரண்புகுந்து குர்ஆன் ஷரீபின் பகிரங்கபோதனைக்கும், முஸ்லிம்களின் ஏகோபித்த அபிப்பிராயத்துக்கும் முற்றமுற்ற மாறாக, ஈஸா நபி (அலை.) சிலுவையிலறைபட்டார்கள் என்று கிருஸ்தவர்கள்கூறும் கூற்றுக்குத் தாளம் போட்டு வருகின்றனர். இம்மூடமாக்கள் இஞ்சீல் வேதத்திலுள்ள விஷயங்களையும், கிறிஸ்தவர்களின் பல்வேறான சமூகத்தார்களின் அபிப்பிராயங்களையும் ஆராய்ச்சிசெய்து, நிதானித்து ஆழ்ந்தநோக்கத்துடன் கவனித்திருப்பரேல், கிறிஸ்தவர்களின் இந்தச் சிலுவைக் கொள்கையில் ஒருபொழுதும் சிக்குண்டிருக்கமாட்டார்களென்பது திண்ணம்.

எதற்காக சிலுவைக் கோள்கையை பரத்த முற்படுகின்றனர்?

உண்மை நிகழ்ச்சியை மெய்ப்பிப்பதற்காக சட்டபூர்வமாய் பின்வரும் விதிகளை ஏற்றுக் கொள்வது அவசியமாகும். அதாவது, பிரதானமாய்க் கண்கண்ட சாக்ஷியமிருக்க வேண்டும்; பின்னர் அக்குறிப்பான சாக்ஷியம் எந்தக் கிரந்தங்களில் வரையப்பட்டிருக்கின்றனவோ அந்தக் கிரந்தங்கள் தக்கவிதத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டவைகளா? அவைகளின் தொடர்பான ஆதாரம் நமதுகாலத்தில் நின்று போகாது சேர்ந்து தொடர்ச்சியாக வந்திருக்கின்றனவா? உதாரணமாக ஸஹீஹ் புகாரீ, ஸஹீஹ் முஸ்லிம் என்னும் ஹதீது கிரந்தங்கள் எமது முஸ்லிம்களிடமிருக்கின்றன. அவற்றின் தொடர் ஆதாரம் இமாம் புகாரி, இமாம் முஸ்லிம் காலம்முதல் தற்காலம்வரைசேர்ந்து தொடராகவே வந்துகொண்டிருக்கின்றன. மேலும் இக்கிரந்தங்களிலடங்கிய நாயகவாக்கியங்கள் முற்றமுற்ற நம்பத்தக்க ராவி (செவிவழிச்சொல் மூலமாகவும், எழுத்தாதாரத்தின் மூலமாகவும் பின்னோருக்கு அறிவிக்கும் இயல்புடையோருக்கு ராவி என்று கூறப்பெறும்) களைக்கொண்டும் நபிகள்பிரான் (ஸல்.) அவர்களை நேரில்பார்த்தவர்களான ஸஹாபாக்கள் வரை சேர்க்கப்படுகின்றன. புகழ்மிக்க ஸஹாபாக்களோ (நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களை நேரில்பார்த்த புண்ணியசீலர்கட்கு ஸஹாபாக்கள் எனச் சாற்றப்பெறும்) வெனின், நபிகள் நாதர் (ஸல்.) அவர்களினின்றும் தங்கள்செவியினால் கேட்ட வாக்கியங்களையும் நபிகள்நாதர் (ஸல்.) அவர்கள்செய்த—இன்னும் மற்றவர்கள் செய்த—நாயகமவர்கள் பார்த்த விஷயங்களை மட்டுமே பின்னோர்களுக்குச் சேர்த்துவைக்கிறார்கள். ஆதலின், இக்கிரந்தங்களிலும் இக்கிரந்த கர்த்தாக்களின் விபரங்களிலும் எவ்விதத் தடுமாற்றமும் ஜனிப்பதற்கில்லை.

இஃதே போன்று பைபிளின் தொடராதாரம் தற்காலம் வரை நின்றுவிடாது நிலைபெற்றிருந்தாலும் அவைகளை ஆக்கியோர்கள் தாங்கள் கூறும் விஷயங்கட்குத் தங்களின் கண்கூடான விஷயங்களைக் கொண்டோ அன்றி இதர நம்பத்தக்க ராவிகளின் சாக்ஷியங்களைக் கொண்டோ நிரூபித்திருந்தாலும் நமக்கு

அவைகளை ஏற்றுக்கொள்வதைத் தவிர்த்து போக்குச் சொல்வதற்கியலா. எனினும் உண்மை அங்ஙனமன்று. ஏனெனில், பைபிளை ஆக்கியோர்கள் வரை அவைகளின் தொடராதாரம் சேர்ந்ததாக இல்லை. மேலும் அந்த பைபிள்களை எந்த ஆசிரியர்கள்பக்கல் சேர்க்கப் படுகின்றனவோ உண்மையில் அவர்களே அந்த பைபிள்களை எழுதினார்களென்றும் நிரூபணமாகவில்லை.

இந்த பைபிள்களின் ஆசிரியர்கள் உண்மையில் யார்? என்று கவனிப்பதை விட்டுவிட்டாலுங்கூட அந்தக் கிரந்தங்களிலடங்கிய சம்பவங்களுக்கு யாதொரு தொடராதாரமும் விபரிக்கப்படவில்லை. இவ்விஷயங்கள் இன்ன மூல கிரந்தங்களினின்று எடுக்கப்பட்டனவென்று எடுத்த நூற்களின் ஆதாரங்களும் காட்டப்படவில்லை. மேலும் இச்சம்பவங்களைப் பார்த்தவர்களும் விபரித்தவர்களும் எவ்வகுப்பினரென்னும் குறிப்பும் காட்டப்படவில்லை. அப்படிக் காட்டப்படாதிருப்பதால் அது கீழ்க்கண்ட வசனத்தை யொத்திருக்கின்றது. அதாவது, ஒரு தேசத்தில் ஒரு அரசனிருந்தான் என்பது போன்றும். சுருங்கக்கூறின், விஷயத்தைச் சொல்விவரும் ராவியும் அறியப்படாதவர்; அவருக்கு விபரித்தவரும் அறியப்படாதவர். இவ்வாறே பைபிளின் நிலைமையும் காணக் கிடக்கின்றது. ஆதலின் சிலுவை சம்பவத்தை மெய்ப்பிப்பதற்குரிய நியாயம் காணக் கிடைக்காதிருக்கிறது.

சிலுவைச் சம்பந்தமாய் பைபிளின் முரணான வசனங்கள்

ஹஸ்ரத் ஈஸா நபி அவர்கள் சிலுவையிலறையப்பட்டதன் சம்பந்தமாக பைபிள் (இஞ்சில்) யாதொரு குறிப்பான கண்கண்ட சாக்ஷியங்களையும் குறிப்பிடவில்லை. யோவான், பெயரைக் காட்டாமல் ஒரு மனிதனென்று மட்டும் குறிப்பிடுகிறார். இதற்கு மாற்றமாக (சேவகர் அவரைப் பிடிக்கவந்த) அப்பொழுது எல்லா சிஷ்யர்களும் அவரைவிட்டு ஓடிப் போனார்கள் என்று மத்தேயு, மார்க் ஆகிய இருவர்களும் ஒற்றுமையாகக் கூறுகின்றார்கள். (மத்தேயு அ-26. வ. 5 6. மார்க்கு அ. 14 வ. 50 பார்க்க.)

எனினும் மார்க்கு அ. 14 வ. 66, 71-ல் பின்வருமாறு காணப்படுகிறது. பேதுரு என்ற சிஷ்யர்மட்டில் ஈஸா நபியவர்களைப் பாது காவலில் வைத்திருந்த அறை முற்றம் வரையும் போனாரென்றும், ஜனங்கள் அவரை அறிந்து கொண்டபொழுது அவரும் ஈஸா நபியவர்களைச் சபித்துவிட்டு அவர்களை விட்டும் நீங்கி அன்னியனென்று தெரிவித்துவிட்டு உயிர்தப்பி ஓடிவிட்டார் என்றும், அதற்குப் பின் என்ன விஷயங்கள் நடந்தனவென்பதை எவரும் கண்கண்ட குறிப்பான சாட்சியங்களாக விபரிக்கவில்லை என்றும் கூறப்பட்டிருக்கிறது.

ஆகவே இவ்வாறான சிலுவை சந்தர்ப்பத்தில் விஸ்வாஸிகளில் ஒருவரும் இல்லாமலிருந்தபொழுது வேறே எந்த மனிதனுடைய சாக்ஷியத்தைக் கொண்டு, ஈஸா நபியவர்கள் சிலுவையிலறையப்பட்டார்கள் என்பதை நிருமாணிக்க முடியும்? யூதர்களோ பகையவர்களாகவும் விஸ்வாஸ மிழந்தவர்களாகவும் இருந்ததினால் அவர்களின் சாக்ஷியம் நம்பத்தக்கதாயில்லை. இவைகளைத்தவிர்த்து சிலுவை நிகழ்ச்சியையும் அதன் சம்பந்தமான விஷயங்களையும் குறித்து முழுதும் சந்தேகிக்கக் கூடிய பல முரண்பட்ட விபரங்கள்பைபிள்களிலேயே பல காணக்கிடக்கின்றன. உதாரணமாக மத்தேயு அ. 26. வ. 48 மார்க்கு அ.14. வ.24, லூக்கா அ. 22. வ. 47ல் எழுதப்பட் டிருப்பதாவது: யஹூதாஸ்கிரியோத்தியானவன் ஹஸ்ரத் மஸீஹ்(அலை.) அவர்களின் நெற்றியின்பேரில் முத்தமிட்டு அவர்களையறிவித்துக் கொடுத்தான். மேலும் இந்த உபாயத்தினால் பிடித்துக் கொடுத்தான் என்பதே.

எனினும் இதற்கு முரணாக ஹஸ்ரத் மஸீஹ் (அலை.) தன்னைப் பிடிக்கவந்தவர்களிடம் தானே இயேசு என்று காட்டிக் கொடுத்ததாகவும் அச்சமயம் அவர்களைக் காட்டிக்கொடுக்கவந்த யூதரசும் அவர்களுடனே கூட நின்றதாகவும் யோவான் அ 18. வ-ல் காணப்படுகிறது. இந்த யோவான் சுவிசேஷத்தில் இது சம்பந்தமாக அவருடைய வேறு யாதொரு சொற்செயற்களும் விபரிக்கப்படவில்லை. இதன் பின்ஈஸா நபியவர்கள் பிடிப்பட்டதின் வரலாறு காணப்படுகிறது.

இதைப் போலவே மத்தேயு அ. 27 வ. 32. மாற்கு அ. 15. வ. 21 லூக்கா அ. 23. வ. 36-ல் எழுதப்பட்டிருப்பதாவது: சிப்பாய் வீரர்கள் சிற்றூரினின்றும் பட்டணத்துக்கு வந்து கொண்டிருந்தபோது ஷம்வூன் கிரேனிஎன்னப்பட்ட ஓர் கிராமவாசியை நிர்ப்பந்தமாய்ப் பிடித்து அவனை ஹஸ்ரத் மஸீஹ் (அலை.) அவர்களின் சிலுவையை எடுக்கச் செய்தார்கள்.

அவன் அதைச் சுமந்தவனாக கொல்கொதா என்னும் ஸ்தலம்வரை கொண்டுபோனான் என்று கூறப்பட்டிருக்கிறது.

எனினும் இதற்கு மாற்றமாக யோவான் அ. 19. வ. 17-ல் எழுதப்பட்டிருப்பதாவது: மஸீஹ் (அலை.) தாங்களே தங்களின் சிலுவையைத் தோளின் மீது எடுத்து கொல்கொதா என்னும் இடம்வரை கொண்டு போனார்கள்.

இஃதே பிரகாரம் மத்தேயு அ. 27. வ. 3. 45,ல்யஹூதாஸ்கிரியோத்தியானவன் ஹஸ்ரத் மஸீஹைப் பிடிப்பதற்காக லஞ்சம் வாங்கின ரூபாய்சம்பந்தமாக எழுதப்பட்டிருப்பதாவது:—

சிலுவை நிகழ்ச்சிக்குப்பின் யஹூதாஸ் மனஸ்தாபப்பட்டு அந்த முப்பது வெள்ளிக்காசையும் பிரதான ஆசாரியரிடத்திற்கும் மூப்பரிடத்திற்கும் திரும்பக் கொண்டுவந்து அந்த வெள்ளிக்காசுகளை எறிந்து விட்டுப்போய் நான்றுகொண்டு செத்தான் என்பதே.

இதற்கு முரணாக லூக்காவினால் எழுதப்பட்ட அப்போஸ்தலருடைய நடவடிக்கைகள் அ. 1வ.18-ல் "யூதாஸ் என்பவன் இந்த வெள்ளிக்காசைக்கொண்டு ஒரு நிலத்தை வாங்கி அதில் தலைகீழாக விழுந்தான்; அவன் வயிறுவெடித்து குடல்களெல்லாம் சரிந்து போயிற்று." என்று காணப்படுகிறது. எனவே ஒரே நிகழ்ச்சியை விபரிப்பதில் இத்தனைப் பெரும்மாறுதல்கள் ஏற்படுவதாயின்,நாம் இந்த பைபிள் (இஞ்சில்)களின் விருத்தாந்தங்களை நம்புவதற்கில்லை.

தற்கால நீதி மன்றங்களில் கொலை சம்பந்தமான கேஸ்கள் நடைபெறுமாயின் கொலைசெய்ததுயார்? எந்த விடம்? அதை கண்கூடாய்ப் பார்த்தது யார்? சாக்ஷிகளென்ன, சாக்ஷியங்களின் யோக்கியாம்சங்களென்ன, என்பன போன்ற பல்வேறு விஷயங்களை மிக நுட்பமாக விசாரணை செய்கின்றார்கள். இப்படி விசாரணை நடத்துவதில் முன்னுக்குபின் முரணானதும் சந்தேகவாக்கியங்களும் ஏற்படுமாயின் கேஸைத்தள்ளி விடுகிறார்களென்பது யாவருமறிந்த உண்மையாம். இங்ஙனமாக, ஒன்றுக்கொன்று முரணாகவும் கண் காணாததாகவும் நம்பத்தக்க சாட்சியங்கள் பூஜ்யமாகவும் இருக்கும் நிலைமையில் சிலுவை சம்பவத்தை எவ்வாறு நம்பக்கூடும்?

மற்றோர் சாக்ஷியம்

மேற்கூறப் பெற்ற பைபிள் (இஞ்சீல்)களிலேயே கீழ்க்கண்ட விபரமும் காணப்படுகிறது:—

ஈஸா (அலை.) தாங்கள் அகப்பட்டுக் கொண்டதற்கு மிக்க வியாகூலப்பட்டார்கள். மேலும் இதைத் தட்டிக் கொள்வதற்கு இறைவனிடம் மிகவும் வருந்தி பிரார்த்தனையும் புரிந்தார்கள். இன்னும் அவர் அழுகையின் காரணத்தால் அவரைக் கேட்கப்பட்டது. என்றும் காணக்கிடக்கின்றது.

ஈஸா நபியவர்கள் தங்களைப் பிடிக்கவரும் சமாசாரத்தைக் கேள்வியுற்று தேவனிடத்தில் பிரார்த்தனை புரிந்தார்கள். இறைவன் அவர்களின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டானென்பதும் அவர்கள் பேரில் யூதர்கள் கைபடவில்லையென்பதும் வெளிப்படையாயிற்று. இவ்விஷயத்தைக் குறித்து இறைவன் குர்ஆன் ஷரீபில் அருளுவதென்னவெனின், மறுமை நாளில் இறைவன் ஈஸா நபியை நோக்கி "ஈஸாவே! எப்பொழுது நான் உம்மைத் தூதர்களைவிட்டுத் தூரத்தில் விலக்கி வைத்திருந்தேனோ அந்த நேரத்தை நினைத்துப் பார்ப்பீராக" என்று கூறுவான். அதாவது இறைவன் ஈஸா நபியவர்களை துஷ்டர்களின் கையில்சிக்க விடாமல் பாதுகாத்த நன்றியை ஞாபகப்படுத்துவான். மேலும் ஈஸா நபியவர்கட்கு இந்தப் பரிதாபகரமான நிலைமையில் "ஈஸாவே, நான் உம்மை சம்பூர்ணமாகக் கைப்பற்றிக் கொள்வேன்; மேலும் உம்மை என்னளவில் உயர்த்திக் கொள்வேன்" என்னும் திருமறை வசனத்தின் நற்செய்தி அறிவிக்கப்பட்டது.

இதன் மூலமாகவும் ஈஸா நபியவர்களின் வேண்டுகோள் திருப்தியாக ஏற்றுக்கொள்ளப்பட்டதே கருத்தாகும். இதையாதறித்து பைபிளும் சாட்சி பகர்கின்றது. உதாரணமாக, ஹஸ்ரத் ஈஸா நபியவர்கள் பிரார்த்தனை புரிந்த விஷயம் மத்தேயு அ. 26. வ. 42; மார்க்கு அ. 15. வ. 34; லூக்கா அ. 22 வ. 42-ல் காணப்படுகிறது. மேலும் இம் மன்றாட்டம் கேட்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயம் எபிரேயர். அ. 5. வ. 7-ல் விபரிக்கப்பட்டிருக்கிறது.

கிறிஸ்தவ வகுப்பார்களின் அபிப்பிராய வேற்றுமைகள்

மேலே விவரிக்கப்பட்டுள்ள விஷயங்களைத் தவிர்த்து கிறிஸ்தவர்களிலுள்ள பற்பல பிரிவாரும் பல அபிப்பிராயம் கொண்டவர்களாய்க் காணப்படுகிறார்கள்.

கிறிஸ்தவர்களில் ஆராய்ச்சி மிக்க ஜார்ஜ் சேல் துரை தமது ஆங்கில குர்ஆன் மொழிபெயர்ப்

பில் வ மகறா(சூ. அலஇம்றான்) என்னும் வசனத்தின் புட்நோட்டில் வரைகிறார் :—

யூதர்களுக்கு மாற்றமாக இறைவனின் இரகசியச் சூழ்ச்சி எவ்வாறிருந்ததெனின், ஈஸா நபியவர்களையோ வானத்தின் பேரில் எடுத்துக் கொண்டு அவர்களின் சாயலை வேறொருவனின் மீது அமைத்து விட்டான்; அவனே ஈஸா நபியவர்களுக்குப் பதிலாக பிடிக்கப்பட்டு சிலுவையிலறையப்பட்டான் என்னும் முஸ்லிம்களின் இக் கொள்கை சந்தேகமற நிச்சயமானதாகயிருக்கிறது. ஈஸா நபியவர்களின் சாயலை மற்றொருவர் மீது போடப்பட்டது என்னும் இச் சம்பவத்தை முஹம்மது நபி (ஸல்.) அவர்கள் தாங்களாகவே கட்டிவிட்டிருக்கிறார்கள் என்று சில கிறிஸ்தவர்கள் கருதுகிறார்கள் எனினும் இவர்கள் நிச்சயமாகத் தவறுதலின் பேரிலிருக்கின்றார்கள். காரணமாவது: ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்.) அவர்களுக்கு வெகு காலத்திற்கு முன்பிருந்த கிறிஸ்தவப் பிரிவார்களிற் பெரும்பான்மையோரின் நம்பிக்கையும் இவ்வாறே இருந்து வந்திருக்கிறது. உதாஹரணமாக,

கிறிஸ்தவர்களில் ஆரம்பத்திலிருந்த பைஸீலிடேன் என்னும் வகுப்பார் ஈஸா நபியவர்கள் சிலுவையிலறையப் பெற்றார்களென்பதை நிராகரித்துக் கொண்டிருந்தார்கள். மேலும், அவர்களின் கொள்கை சாயிமன், என்பவன் அவர்களுக்குப் பகரமாகச் சிலுவையிலேற்றப்பட்டான் என்பதாயிருந்தது. இன்னும் இவர்களை விட முன்னிருந்த சீரந்தன் என்ற பிரிவாரும், இன்னும் ஈஸா நபியவர்களை ஒரு மனிதரென்று மட்டும் நம்பக்கூடிய கார்ப்போக்ரேஷன் என்ற வகுப்பினரும் ஏசுநாதரவர்கள் சிலுவையிலறையப்படவில்லை; அவர்களின் சிஷ்யர் களினின்றும் அவர்களைப் போன்ற ஒருவனைச் சிலுவையிலறையப்பட்டதென நம்புகிறார்கள்.

போட்டேஸ் என்ற ஆசிரியர் கூறுவதாவது: நான் தூதர்களின் சுற்றுப் பிராயாணம் என்ற கிரந்தத்தை வாசித்தேன் அதில் பேதுருயோவான், அந்தரியாஸ்,தாமஸ், பவுல் ஆகியோரின் கிரியைகள் அடங்கியிருந்தன மற்ற விஷயங்களினூடே பின்வரும் விஷயம் ஒன்றும் எழுதப்பட்டிருந்தது. ஈஸா(அலை.) சிலுவையிலறையப்படவில்லை; அவர்கட்குப் பதிலாகப் வேறொருவன் சிலுவையிலறையப்பட்டான்; தங்களின் எண்ணத்தில் ஈஸா நபியவர்களை சிலுவையிலறையப்பட்டதாக நம்பியிருந்த அந்த ஜனங்களின் பேரில் ஈஸா நபி (அலை.) நகைத்தார்கள் —(ஜார்ஜ் சேல் துரையின் மொழிபெயர்ப்பு முற்றிற்று.)

பர்னபாஸ் என்ற சிஷ்யரின் சாட்சியும் இதன் பின் ஜார்ஜ் சேல் துரை இஞ்சீல் பர்னபாஸின் ஆதரவுகாட்டி எழுதுவதின் சாரம் பின்வருமாறு :—

யூதர்கள் ஹஸ்ரத் ஈஸா நபியவர்களைப் பிடிப்பதற்காகப் போய்க் கொண்டிருந்தபொழுது, ஈஸா நபியவர்கள் நான்கு அமரர்களான ஜிப்ரயீல், மீக்காயீல்,இஸ்ராபீல்,யூரேல் ஆகிய இவர்களின் மூலமாக மூன்றாவது வானத்தின்பேரில் எடுத்துக் கொள்ளப்பட்டார்கள்; ஈஸா நபியவர்கள் உலகமுடிவுவரை மரணமாக மாட்டார்கள்; அவர்களுக்குப் பகரமாக யூதாஸ்கிரியோத்தி சிலுவையிலறையப் பெற்றான் ; அவ்வஞ்சகனை அல்லாஹ் யூதர்களின் பார்வையில் ஈஸா நபியவர்களைப்போல் ஒரே மாதிரியாகச் செய்துவிட்டான் ; அவர்கள் அவனைப்பிடித்து பிலாத்தூஸ் இடம் கொண்டு போனார்கள்.

இதற்குப்பின் சேல் துரை இந்த பர்னபாஸின் பைபி (இஞ்சீ)ளின் ஆதாரத்தைக் கொண்டு கீழ்வருவாறு எழுதுகிறார் :—

ஹஸ்ரத் மஸீஹ் (அலை.) இறைவனிடம் உத்தரவு பெற்று தங்களின் மாக்ஷிமை மிக்க மாதாவினுடையவும் சிஷ்யர்களினுடையவும் துயராற்றுவான் வேண்டி மீண்டும் நிலமிசை விஜயம் செய்தார்கள். "ஈஸா நபியவர்கள் வானத்தில் உயர்த்தப்பட்ட பின் யஹூதாஸ் கிரியோத்திக்குப் பகரமாக சிஷ்யர்கள், பன்னிரண்டாவது சிஷ்யராக இந்த பர்னபாஸையே நியமித்தனர் என்று லூக்கா என்பவரால் எழுதப்பட்ட அப்போஸ்தலரின் நடவடிக்கையில் காணப்படுகிறது" இவ்வாறான சிஷ்யர்களில் ஒருவான பர்னபாஸிடம் ஹஸ்ரத் ஈஸா நபியவர்கள் வார்த்தையாடும் பொழுது அவரை நோக்கி, "இயேசு சிலுவையின் பேரில் கொல்லப்பட்டார் என்னும் இத் தவறான கொள்கை முஹம்மது ரசூல்லாஹ் (ஸல்.) தோன்றும் வரை இருக்கும்; அவர் உலகில் வந்து அல்லாவின் மார்க்கத்தைப் பின்பற்றும் ஒவ்வொருவனையும் இந்தத் தவறான கொள்கையைவிட்டும் நிவர்த்திப்பார்" என்று கூறினார். (சேல் துரை மொழிபெயர்ப்பு)

பர்னபாஸ் சீஷரின் சுவிசேஷத்திலுள்ள சில வாக்கியங்கள்

பர்னபாஸ் சீஷரின் பைபிள் (இஞ்சில்) ஸ்பெயின், லாத்தீன், ஆங்கிலம், முதலிய அனேக ஐரோப்பிய பாஷைகளில் மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது. இவ்வமயம் எமது முன்னிலிருக்கும் அதன் அரபி மொழிபெயர்ப்பிலிருந்து சில வசனங்களைப் பொறுக்கி யெடுத்தெழுதுகிறேன்.

(1) சிப்பாய் வீரர்கள் யஹூதாஸைப் பிடித்துக் கட்டினார்கள் (314-ப)

(2) பின்பு அவனை, கட்டப்பட்ட அதே நிலைமையில் நகர் நீதிபதியிடம் கொண்டு சென்றார்கள். (316-ப)

(3) எவனுடைய அதிகாரத்தில் எல்லா முடிவுமிருக்கிறதோ அந்த அல்லாஹ், யஹூதாஸைச் சிலுவை மரத்திற்காக நிறுத்திவைத்தான். ஏனெனில் அவன் இந்த மரணத்தின் அவஸ்தையைப் பெறுவதற்காக. (318-ப)

(4) பின்னர் அவர்கள், அவனை (யஹூதாஸை) ஜம்ஜமா என்ற மலைக்குன்றின் பேரில் கொண்டு போனார்கள். அவ்விடத்தில் குற்றவாளிகளை சிலுவையிலேற்றும் வழக்கமிருந்தது. அவனை நிருவாணமாக்கி சிலுவையிலேற்றினார்கள். (219-ப)

(5) ஹஸ்ரத் ஈஸா நபியவர்கள் இறைவனிடத்தில் "எனது மாதாவையும் சீஷர்களையும் பார்ப்பதற்கு அநுமதி வேண்டும்" என்று வேண்டுதல் செய்தார்கள் (32-10)

(6) பின்னர் ஈஸாநபியவர்கள் மின்னல் வெளிச்சத்தில் மறைந்தவர்களாக விஜயம் செய்தார்கள். (32-10)

(7) மேலும் அவர்கள் மொழிந்ததாவது: நான் ஒருபொழுதும் மரணமாகவில்லை; என்னைக் கர்த்தன் உலக முடிவுரை தனது பாதுகாப்பில் எடுத்துக்கொண்டிருக்கிறான். (322-ப)

(9) அவர்கள் அளித்துள்ள விடையாவது: (நான் சிலுவையில் அறையப்பட்டேன் என்னும்) இந்தத்தவறான கொள்கை முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் (ஸல்.) வருமளவும் நிலைத்திருக்கும்; அவர்கள் விஜயம் செய்யும்பொழுது கர்த்தனின் மார்க்கத்தின்மீது விஸ்வாஸங் கொண்டவர்களுக்கு அந்தத் தப்பபிப்பிராயத்தைத்துலக்கிக் காட்டிவிடுவார்கள். (323-ப)

திருகுர்ஆன் இதை மெய்ப்பித்தல்

இந்தத் தொடரான விபரத்தில் தெளிவாக விபரிக்கப்பட்டிருக்கிற தென்னவெனின்,

ஈஸா நபியவர்கள் சிலுவையிலறையப்படவில்லை. யஹூதாஸ்கிரியோத்தி என்பவனே அறையப்பட்டான். ஈஸா (அலை) அவர்கள் சம்பந்தமாக சிலுவை நிகழ்ச்சி முற்றும்தவறானபிரஸ்தாபமாகும்; அதை யூதர்களும்கிறிஸ்தவர்களும் தங்கள் தங்கள் நோக்கத்திற்காக உண்டு பண்ணி பிரஸ்தாபித்துக் கொண்டார்கள்.

யூதர்கள் ஈஸா நபியவர்களைக்கொலை செய்தோமென்று பெருமை பாராட்டவும் கிறிஸ்தவர்கள் பாவநிவர்த்திக்கொள்கையை நிருமாணிப்பதற்குமாம். எனினும் எதார்த்தமோவெனின், இதற்கு முற்றமுரணைக் காணப்படுகிறது. அதாவது, கர்த்தன் ஈஸா நபியவர்களை உயிரோடு வானத்தில் உயர்த்திக்கொண்டு அவர்களுக்குப் பகரமாக வேறோர் மனிதனைச் சிலுவையிலறையச் செய்தான்.

இவ்விஷயத்தைத் தெளிவாக குர்ஆன் ஷரீபில் விவரிக்கப்படுகிறதாவது:

நாம் யூதர்களைப் பின்வரும் விஷயத்திற்காகவும் சபித்தோம்: நாங்கள் மரியமுடைய குமாரர் அல்லாவுடைய தூதரான மஸீஹைக்கொலை புரிந்துவிட்டோம்.

என்று அவர்கள் கூறுகிறார்கள் (உண்மையில்) அவரை அவர்கள் (யூதர்கள்) கொலை செய்யவுமில்லை சிலுவையின் பேரில் ஏற்றவுமில்லை எனினும் வேறொருவனை அந்த சொரூபத்திலாக்கப்பட்டது (அவனையே பிடித்துச் சிலுவையிலேற்றிக்கொன்றார்கள்) எவர்கள் இவ்விஷயத்தில் பல்வேறு விதமாக அபிப்பிராயப்படுகின்றார்களோ அவர்கள் சந்தேகத்திலிருக்கின்றார்கள் அவர்களுக்கு மதிப்பான அபிப்பிராயத்தைத் தவிர்த்து வேறு சரியானஞான மில்லை. இன்னும் நிச்சயமாக அவரை (ஈஸாநபியவர்களை) அவர்கள் கொல்லவில்லை. மேலும் இறைவன் அவரை தன்னளவில் உயர்த்திக் கொண்டான். இன்னும் அல்லாஹ் மகாதத்துவமுடையவனும் ஆழிய அறிவுள்ளவனுமாயிருக்கிறான். (ஜுஸ் 6. சூ நிஸா.)

கிறிஸ்தவ சகோதரர்கள் மக்களை மோக்ஷகதி சேர்ப்பான் வேண்டி பிரசாரத் தோரணையில் தேசமெங்கும் சுற்றுப் பிரயாணம் செய்வதாக ஹி. இ, ஸைபுல் இஸ்லாம் போன்றபத்திரிகை

கள் மூலமாக அறிகிறோம். மானிடர்மீது அன்பு பூண்டு அன்னோர்களை சத்வழியில் கொண்டு வரமுயற்சிப்பது மெச்ச தக்கதோர் மேலான கைங்கரியமென்பதில் ஒரு சிறிதும் சந்தேகமில்லை. எனினும் இப்படிப்பட்ட பிரசாரகர்கள் தங்களின் ரக்ஷிப்புக்குரிய அஸ்திபார நிலை எத்தகைய தென்பதையும் சற்று நோட்டமிட்டுக் கொள்ளல்வேண்டும். எனெனின், தங்களின் ஆணிவேர்போன்ற பாவநிவர்த்திக் கொள்கை யென்னும் அடிப்படை சேற்றில் நாட்டிய கம்பம் போல் தத்தளித்துக் கொண்டிருக்கும் நிலைமையில் அதில் பூரண விஸ்வாஸத்துடன் சார்வதும், அம்மார்க்கத்தில் சேர்ப்பதற்காக எராளமான பெருந்தொகைகளைச் செலவுசெய்வதும் எமாற்றமாய் விடக்கூடாது. ஆதலின் கிறிஸ்தவ நண்பர்கள் நிச்சமான நம்பிக்கைக் குரிய மார்க்கத்தைக் கண்டுபிடித்து அப்பால் பிரசாரம் செய்வார்களாயின் ஈருலகிலும் பாராட்டப் பெறுவார்களென்பதை நாம் அவர்கட்கு அன்புடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம். அன்னோரின் நிலைமையே இவ்வாறிருக்கும்போது அக்கொள்கையை தங்கள் புத்தகங்களிலும் கிரந்தங்களிலும் பத்திரிகையிலும் வற்புறுத்தி எழுதிக்கொண்டு, இதுதான் முஸ்லிம்களின் கொள்கை என்று வற்புறுத்தித்திரியும் நயவஞ்சக கோஷ்டியினரின் மாயவலையில் நம்முஸ்லிம்கள் சிக்கிக் கொள்ளாதிருப்பார்களாக.

மதிப்புரை

ஹயாத்தமஸீஹ் (அலை.) இரண்டாம் பாகம்

இஃது தென்காசி முஸல்மான் ஆசிரியர் ஜனாப் மீ. இ. முஹம்மது அப்துல்காதிர் சாஹிப் அவர்களாலியற்றப் பெற்றதாகும். முதற்பாகத்தைப்போல் இதுவும் அரும் பொக்கிஷமாய்க் காணப்படுகிறது. கபட காதியானிகளால் முஸ்லிம்கள்பால் விடுக்கப்படும் 17 வினாக்களுக்கும் இதில் தக்க வாயாப்புக் கொடுக்கப்பட்டிருப்பதைக் காணலாம். திருகுர்ஆனின் திவ்விய திரு வஸனங்களைக் கொண்டும் சஹீஹான தக்க ஹதீதுகளைக் கொண்டும் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் உயிருடன் வானுலகு உயர்த்தப்பட்டு தற்சமயம் ஹயாத்தாகவே இருக்கின்றார்கள்; கியாம நாளின் அடையாளமாக கடைசி காலத்தில் இப்பூஉலகின்கண் இறங்குவார்கள் என்னும் விஷயங்கள் சாங்கோபாங்கமாய் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. இதில் மற்றொரு விசேஷம் என்னவெனின், மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானி தம்மாலியற்றப் பெற்ற அநேக கிரந்தங்களில், ஹஸ்ரத் செய்யிதுனா ஈஸா அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம் அவர்கள் உயிருடனிருக்கின்றார்கள்; பிற்காலத்திலிறங்குவார்களென்று எழுதி யிருப்பதை பக்கங்களுள்படக் குறிப்பிட்டு வரைந்திருப்பதாகும். இறுதியாக மிர்ஸா வாக்குச் சொல்லப்பட்ட "மஸீஹ்" "ஈஸா" தாம்தானென்று தாவாச் செய்ததுடன் ஹஸ்ரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களும் தாமும் எகதேசத்தில் ஒத்திருப்பதாகவும் தமது நூற்களில் வரைந்திருப்பதால் இவருடைய நடவடிக்கை ஹஸ்ரத் அவர்களது நடவடிக்கைக்கு ஒத்திருக்கிறதா வென்பதை ஒத்துப் பார்க்க வேண்டிய சந்தர்ப்ப மேற்பட்டுவிட்டது. ஆகவே, இப்புத்தகத்தில் நான்கு அட்டவணைகள் பொறிக்கப்பட்டு முந்தியதில், ஹஸ்ரத் ஈஸா (அலை.) அவர்கள் சம்மந்தமாய் நபிகள் திலகம் (ஸல்.) அருள்செய்துள்ள விஷயங்கள் ஒரு பக்கத்திலும்அதற்கெதிரே மிர்ஸா சாஹிபின் குணாகுணங்களும், இரண்டாவதில் ஹஸ்ரத் ஈஸா (அலை.) அவர்கள் சம்மந்தமாய் மிர்ஸா வரைந்திருக்கும் விஷயங்கள் ஒரு பக்கத்திலும் அதற்கெதிரே மிர்ஸா தம்மைக் குறித்து தாமே எழுதிய விஷயங்களும், மூன்றாவதில் ஹஸ்ரத் ஈஸா (அலை.) அவர்களையும் அவர்களது தாயாரான ஹஸ்ரத் மர்யம் (அலை.) அவர்களையும் குறித்து மிர்ஸா பினாத்தி யிருக்கும் ஆபாஸ அருவருப்புடைய கூற்றுகளை ஒருபக்கத்திலும் அதற்கெதிரே முஸ்லிம்கள் மிர்ஸாவின் மீது எழுப்பிய கடாவுகளும், மிர்ஸாவின் சிஷ்யர்கள், லாகூரில் மரணமான மிர்ஸா வேறு காதியானில் அடக்கமாயிருக்கும்

மிர்ஸா வேறு எனக்கூறி யிருப்பதால் இவ்விரு கோஷ்டியாரின் அபிப்பிராயங்களையும் தனித்தனியே நான்காவதில் இருஜாபிதாக்களாகவும் பொறிக்கப்பட்டிருக்கிறது. இந்நான்கு ஜாபிதாக்களையும் ஊன்றி நோக்குவோமாயின், மிர்ஸா எவ்வகையிலும் ஹஸ்ரத் ஈஸா (அலை.) அவர்களுக்கு ஒத்திருக்கவில்லை என்னும் விஷயம் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கா நிற்கின்றது. மிர்ஸா தாம்தான் வாக்குச் சொல்லப்பட்ட ஈஸாவென்று தாவாச்செய்வதற்காக, ஹஸ்ரத் ஈஸா (அலை.) அவர்கள் வெகுகாலத்திற்குமுன்பே மரணமாய்விட்டார்களென்றும், அவர்களது கபர் காஷ்மீரத்திலிருக்கிறதென்று ஒருசமயத்திலும், மற்றொரு நேரத்தில் மிஸர் தேசத்திலிருக்கிறதென்றும் கூறி பலவாறாக பிணாத்தியிருப்பதாலும் அவரதுகுமாரர் மிர்ஸா பஷிருத்தீன் முஹம்மதும், முஹம்மது அலியும், இவர்களின் சிஷ்யர்களும் இதனை அங்கீகரித்து ஹஸ்ரத் ஈஸா (அலை.) அவர்களின் கபர் ஸ்ரீநகர் கான்யார் வீதியிலிருப்பதாக உளறிக்கொட்டி வருவதாலும் இவ்வாதாரமற்ற பொய்க்கூற்றுகளுக்கெல்லாம் இந்நூலில் தக்க வாயாப்புகொடுத்து, மிர்ஸா தமது ஜீவியகாலத்தில் ஸ்ரீநகருக்குத் தமது ஆட்களை அனுப்பி அங்குள்ள ஒரு கபரை ஈஸா (அலை.) அவர்களுடைய கபரென்று விளம்பரப்படுத்துவதற்காக சன்மானம் அளிப்பதாகக் கூறியதை அங்குள்ளோர் மறுத்து அவ்வாட்களைத் திருப்பி அடித்த விநோதசம்பவங்களும் தக்க அத்தாக்ஷிகளுடன் வரையப்பட்டிருக்கிறது. தவிரவும் காதியானிகள் ஈஸா (அலை.) அவர்கள் மரணமாய் விட்டார்களென்று மாலிக் இமாமும், சுன்னத் ஜமாஅத்து உலமாக்களில் மற்றும் பலரும் வரைந்திருப்பதாகக் கூறி பொது மக்களை ஏமாற்றி வருகின்றனராதலின் ஹஸ்ரத் இமாம் மாலிக் (ரஹ்.) அவர்களோ மற்ற உலமாக்களோ அவ்வாறு ஒன்றும் கூறவில்லையென்பதை தக்க ஆதாரங்களைக் கொண்டு நிரூபித்து அப் பொய்க்கூற்றுகள் மறுக்கப்பட் டிருக்கிறது. சுருங்கக்கூறுமிடத்து, காதியானிகளின் பிணாத்துதலுக்கு மறுப்பாய் எழுதப்பெற்ற கிரந்தங்களில் இஃதோர் சிரேஷ்ட நூலாய்த் திகழ்கிறதெனக் கூறுவது மிகையாகாது. இச்சிறந்த நூல் ஒவ்வொருவரிடமும் இருக்கவேண்டியது அத்தியாவசியமாகு மென்பதை நாம் கூறத் தேவையில்லை. அதிலும் தென்னாட்டின் பற்பல இடங்களிலும் காதியானிக்குஞ்சுகள் கிளம்பி குதர்க்கவாதம் புரிந்துவரும் இக்காலை அன்னாருடன் மல்லாடவேண்டிய சந்தர்ப்பமேற்பட்டிருப்பதால் ஒவ்வொருவரிடமும் இந்நூல் இருந்தே தீரவேண்டும். சுருங்கக் கூறுமிடத்து, இப்புத்தகம் வைத்திருப்பவர்களிடம் காதியானிகளின் ஜம்பம் பலிக்காதென்று திண்ணமாய்க் கூறலாம். இஃது உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டு 350 பக்கங்கொண்டதாயிருந்தும் எல்லோரும் வாங்கிப் பார்க்கவேண்டுமென்பதைக் கருதி கிரயம் மிகக் குறைவாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பிரதி 1-க்கு ரூ. 1. தபால்செலவு வேறு. ஆகவே யாவரும் இதனை வாங்கிப் படித்துப் பயன் பெறுவார்களென்று நம்புகிறோம்.

கிடைக்குமிடம் :—

முஸல்மான் ஆபீஸ், தென்காசி.

கியாமத்தின் ஞாபகச்சின்னம்

சமீபத்தில் வட இந்தியாவில் தோன்றிய பூகம்ப அதிர்ச்சியின் கோரச்சம்பவ நிகழ்ச்சிகள்

ஜனாப் மௌலானா ஷபீஉ தாவூதி M.L.A. அவர்கள் அறிவிப்பதாவது :—முஜப்பர்பூர் என்னும் பட்டணத்திலுள்ள கட்டடங்கள் முழுதும் இடிந்து பாழடைந்து போயிருப்பதுடன் இடிந்து விழுந்த கட்டடங்களில் சில மட்டும் அப்படியே இருந்துகொண்டிருக்கிறது. அங்கு எஞ்சியுள்ளவர்கள் குளிர் தாங்க முடியாது தவித்துக்கொண்டிருக்கும் நிலைமை பரிதபிக்கத்தக்கதாயிருக்கிறது. எமது வீடும் நாசமடைந்து அநேக பள்ளி வாசல்களும் ஒன்றுமில்லாதிருக்கிறது. பூமி பிளந்து அற்குள்ளிருந்து சூடான தண்ணீர் வெளியில் பொங்கி வந்துகொண்டிருக்கின்றது. இவ்வதிர்ச்சி இராக்காலத்திலேற்பட்டிருக்குமாயின் யாரும் தப்பியிருக்கமுடியாது. 3 ஆயிரம் சவங்கள்வரை இதுவரை வெடிப்பிலிருந்து வெளிவந்திருக்கிறது.

மௌலானா ஷாஹ்சுலைமான் சாஹிப்புல்வாரியவர்கள் அறிவிப்பதாவது:—நான் கியாமத் நாளில் ஏற்படும் அமளியை காதால்கேட்டும் கிரந்தங்கள் மூலம்பார்த்துமிருக்கிறேன்; அதனை இதுகாலை பீஹார் மாகாணத்தில் நிதர்சனமாய்க் கண்ணாலேயேபார்த்துக்கொண்டேன். இதுகாலை யான் ஒரு வெட்டவெளி மைதானத்தில் பெண் சாதி பிள்ளைகளுடன் கிடக்கின்றேன். தர்பங்கா, முஜப்பர்பூர், மூங்கிர் முதலிய இடங்களில் அநேக தனவந்தர்களும் கியாதி வாய்ந்தோர்களும் இந்தக்கஷ்டத்தில் அகப்பட்டு பரிதபித்துக்கொண்டிருக்கின்றார்கள். என் மூத்த குமாரராகிய மௌலானா ஹுஸைன் மியான் சாஹிப் இங்குள்ள ரிலிப் கமிட்டியில் தக்கசேவை புரிந்து வருகின்றார்.

ஜமால்பூரின் நிலைமை

ஜமால்பூரின் கியாதி வாய்ந்த தலைவர் அறிவிப்பதாவது:—ஆரம்பத்தில் ஏற்பட்ட அதிர்ச்சியின் தொடர்பே அடிக்கடி நிகழ்ந்து கொண்டிருக்கிறது. சில நாளைக்குமுன்கூட ஓர் சம்பவம் நிகழ்பெற்றது. எனவே இங்கு எவரும் அமைதியோடு வாழ்வதில்லை. இங்கு 1200 பேர் மரணமடைந்திருப்பதாகத் தெரிகிறது. மூங்கிரில் ஒரு வரிசை வீட்டை ஒழுங்கு படுத்தியதில் 700 சவங்கள் வெளியாயிருக்கின்றன. அங்குள்ள ஒரு (சவுக்) முச்சந்தியில் பெரிய மண்மேடு ஏற்பட்டுப் போயிருக்கின்றது. ஆகவே மூங்கிர் என்னுமூரின் பெயர் நாமங்கூட இல்லாது போய்விடும்போல் தோன்றுகிறது. அங்குள்ளோர் யாவரும் ஊருக்கு வெளியில் குடிசைகளில் வாசஞ்செய்து வருகின்றார்கள். ஜமால்பூரில் எஞ்சியோர் அந்த ஊரையே விட்டுவிட்டார்கள். மைதானத்தில் வாசஞ்செய்வோர் சதா அழுதுகொண்டும் பெருமூச்சுவிட்டுக்கொண்டு மிருக்கின்றார்கள். அவர்களின் சப்தத்தைக்கேட்ட மாத்திரத்திலேயே ஹிருதயம் துடித்து ஈரல் வெடித்துப் போகக்கூடியதாயிருக்கிறது. சிநேகிதர்கள், தங்கள் நண்பர்கள் உயிருடன் பூமியில் புதைபட்டதையும், சிசுக்கள் தங்கள் தாய்மார்கள் தட்டுத் தடுமாறியதையும், பெண்கள் தங்கள் புருடன்மார்கள்மரணமடைந்ததையும் கண்ணாரக்கண்டு வருந்தியதை இங்கெடுத்துக் கூறுவதற்கியலாதிருக்கின்றது. இக்கோரக் காக்ஷிகளை நிவர்த்தி செய்வதற்காக எங்களாலேண்டவரை முயற்சித்து வருகின்றோம். ஆனால் துர்அதிஷ்ட வசமாய் இதுவரை ஏழைகளுக்குச் சரியான பரிகாரம் தேடிக்கொடுக்க முடியாமதிருக்கின்றது. கவர்ன்மெண்டு புறத்திலிருந்து 125 போர்வை வரை ஏழைகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஜமால்பூரில் ரயில்வே தொழிலாளருக்கு மூன்று மாததவணைக்கு நபருக்கு 5 ரூபாய் கடன் கொடுக்கப்படுகின்றது.

மூங்கீரின் நாசம்

மூங்கிரின் நாசத்தை நேரில் கண்ட ஒருவர் கூறுவதாவது:—யான் கடைத் தெருவில் சாமான் வாங்கிக்கொண்டிருந்தேன்; அது பொழுது ஆகாயக் கப்பலின் சப்தம்போல் பயங்கரமான கோர சப்தம் கேட்டது; உடனே பூமியில் இரு அசைவுதல் ஏற்பட்டு பூமியை திருகையில் வைத்துச்சுற்றுவதுபோல் தோன்றிற்று; துயர்படியாய் மூன்றுநிமிஷநேரம்வரை இவ்வசையுதல் இருந்துகொண்டேயிருந்தது. இதனைக் கண்ணுற்ற ஜனங்கள் வீடுகளிலிருந்தும் கடைவீதிகளிலிருந்தும் வெளியில் ஓட ஆரம்பித்தார்கள். உடனே வீடுகள்கீழேவிழஆரம்பித்தது; அதுபொழுது யான் நின்றுகொண்டிருந்த இடத்தில் மட்டும் 135 பேர் நின்று கொண்டிருந்தார்களாதலின் அவர்கள் ஒவ்வொருவரும் கட்டடத்தின் மத்தியிலகப்பட்டு மாண்டு போனார்கள். இந்நிலைமையில் ஒரு வீடு கீழே விழுந்தது; அதன்மீது ஒரு சுவர் விழுந்தது; அச்சுவற்றின் ஒருபகுதி அந்தவீட்டின்மேல் விழுந்ததால்அச்சுவர்அப்படியே நின்றது; அது அழுத்தமாக இருந்ததால் எவ்வித பிளவும் ஏற்படவில்லை யாதலால் நான் அதற்குள்ளால் அப்படியே உட்கார்ந்துகொண்டதால் என் உயிர் தப்பிக்கொண்டது. அதுபொழுது என் நிலைமை பரிதாபமுடையதாயிருந்தது. அரைமணி நேரம் வரை அதற்குள்ளாலிருந்து விட்டு கல்லை ஒதுக்கிக்கொண்டு வெளியில்வந்து தாய் வயிற்றிலிருந்து புதிதாக ஜனித்தவன்போலாய் விட்டேன். யான் அதுகாலை மூங்கிரிலில்லாது வேறு எங்கேயோ இருப்பதுபோல் தோன்றிற்று. யான் ஒவ்வொருஅடி எடுத்துவைக்கும் போதும் கட்டடத்திற்குக்கீழிருந்து மனிதர்கள் முணங்குவதின் சப்தம் என் செவிக்கெட்டிக் கொண்டிருந்தது. இந்நிலைமையில் யான் ஒரு கல் குவியலின்மீது உட்கார்ந்துகொண்டு இரவுக்காலத்தைக் கழித்தேன். அதிகாலையில் எழுந்து பார்க்கும்போது ஊர்முழுதும் ஒரே கல் குவியல் மயமாகவே இருப்பதைக்கண்

டேன். என் சிநேகிதரொருவர் கட்டடத்துக் கீழ் அழுந்திக் கிடப்பதை பெரும்பிரயாசை யோடு வெளியில் எடுக்கும்படிநேர்ந்தது. கபன் செய்வதற்கு எவ்வித வசதியுமில்லாதிருந்தது. தனித்தனியே அடக்கம் செய்வதற்கும் முடியா திருந்தது. ஆகவே மும்மூன்று ஜனுஸாக்கள் ஒன்ருக ஒவ்வொரு கபரில்வைத்து அடக்கம் செய்யப்பட்டது.

பீஹார் கல்வி மந்திரியாகிய ஆனரபிள் மிஸ்டர் சையித் அப்துல் அஜீஜ் பாரிஸ்டர் அவர்கள் சார்பாக அறிவிக்கப்படுகிறது. அவர்கள் முஜப்பர்பூர் பகுதிகளில் நாசமடைந்துபோன ஸ்தலங்களை பார்வையிட்டுத் தெரிவிப்பதாவது :—ஒரு இடத்தில் நீர் அருவிகள் ஓடிக் கொண்டிருக்கின்றது; மற்ருெரு இடத்தில் பூமி பிளந்து ஆற்றின் ஜலம் பூமிக்குள் சென்று கொண்டிருக்கிறது. ஒரு நதி வரண்டுபோயிருக்கும்போது அதன்மீது ஒரு பஸ் சென்றது. உடனே பூமி அதிர்ச்சி ஏற்படவே அந்த பஸ்ஸில் ஏறிவந்தவர்கள் யாவரும் கீழே இறங்கிவிட்டார்கள். உடனே பூமியில் வெடிப்புக்கண்டு அந்த பஸ் பூமிக்குள் போய்விட்டது. அல்லாஹ்வின் கிருபையால் அதில் ஏறியிருந்தவர்களுக்கு எவ்விதக் கெடுதியும் நேரிடவில்லை. வேருெரு இடத்திலிருந்த கல்லைப் புரட்டியதில் அங்குள்ள வெடிப்பில் ஒரு மாது இரு குழந்தைகளை தன் மார்போடு அணைத்துக் கொண்டு அப்படியே இருந்ததாயும் தாய் மரணமாய் பிள்ளைமட்டும் உயிருடன் இருந்ததாயும் தெரிகிறது. சில இடங்களில் கடிசான அசைவுதல் ஏற்பட்டதின் பயனுய் அங்குள்ளோர் உட்காரவுமியலாது நிற்கவுமியலாது போய்விட்டார்கள். முடிவாகக் கூறுமிடத்து அங்கு கண்ணுல் கண்டவற்றை நாவாலும் சொல்ல முடியாது; பேனுவினுலும் எழுதமுடியாமலிருக்கிறது. ஆகவே கியாமத்நாள்தோன்றி அல்லாஹ் தஆலா தனது அபாரசக்தியினை வெளியாக்குவதுபோல் தோன்றிற்று.

மஸ்ஜித்களின் நிலைமை

பாட்னுவிலுள்ள பாங்கிப்பூர் வர்த்தக சங்கத்தின் காரியதரிசி அறிவிப்பதாவது :—இதுகாலை நம் முஸ்லிம்கள் மஸ்ஜித்களின் நாசத்தை நிவர்த்தி செய்வதற்கு முயற்சிசெய்யவேண்டியது அத்தியா அவசியமாகும். இது முஸ்லிம்கள் தனியே ஆற்றவேண்டிய சேவையாகும். எனவே முஸ்லிம் அல்லாத இதரர்களின் உதவி கொண்டு நடைபெறக்கூடிய காரியமுமல்ல. பாட்னு என்னும் பட்டணத்தில்மட்டும் சுமார் 1500 மஸ்ஜித்கள் உள. அவைகளில் 1400 வரை முழுதும் இடிந்துபோயிருக்கிறது. இதிலிருந்து மாகாணத்தின் இதர ஊர்களிலுள்ள மஸ்ஜித்களின் நிலைமையை நன்கு தெரிந்து கொள்ளலாம். இதுகாலை அல்லாஹ்வின் உண்மையடியார்கள், உடைந்துபோயிருக்கும் அந்த மஸ்ஜித்களில் எவ்வித பயமுமின்றி தொழுகையை நிறைவேற்றி வருகின்ருர்கள். இது மிகவும் அபாயமான காரியமாகும். மழைகாலம் சமீபித்து வருகின்றது; அதற்குமுன் பள்ளியின் மராமத்து ஒழுங்குபடுத்தல் பிரதானமாகும். இந்நிலையிலேயே மழை ஆரம்பமாய் விடுமாகில் பலவாருன கஷ்டசங்கடங்களை அனுபவிக்கும்படி நேரிடும். ஆகவே நம் முஸ்லிம்நேயர்கள் முன்வந்து அல்லாஹ்வின் வீடாகிய பள்ளி வாசல்களை சீர்படுத்தும்புண்ணியகைங்கரியத்தி லீடுபட்டு இகபாசாதனங்களைப்பெற முயற்சிப்பார்களாக.

சத்திய சன்மார்க்க சீலர்கள்

இமாமுல் ஆரிபீன் ஹஜ்ரத் புலேல்பின் இயாள் (றஹ்.) அவர்கள்

இமாமுல் ஆரிபின் ஹஜ்ரத் காஜா புலேல்பின் இயாள் (ரஹ்.) அவர் ஹிஜ்ரீ 127-ம் ஆண்டு ரபீஉல் அவ்வல்மீ 23-ம் தேதி சமர்கந்தில் ஜனனமானுர்கள். சிறு பிராயத்திலேயே அளவற்ற புத்தி தீக்ஷணிய முடையவர்களாயும் கூர்மையான அறிவு படைத்தவர்களாயும் விசால திருஷ்டியுடையவர்களாயுமிருந்தார்கள். ஹஜ்ரத் அவர்கள் ஏழு பிராயத்தை எத்தியவுடன், அவர்களுடைய மாமனுராகிய ஸஈதுப்னு ஹாரிது என்பார் அவர்களுக்கு கல்வி புகட்ட ஆரம்பித்து முதலாவது குர்ஆன் ஷரீப் கற்பித்துக் கொடுத்துப் பின்னர் ஸன்மார்க்க ஞானங்

களை அறிவித்துக் கொடுத்ததால் மகான் அவர்கள் தங்கள் பதினைன்காவது பிராயத்தில் மாபெரும் கல்வி மானுகத் திகழ்ந்தார்கள். இதற்கிடையில் குர்ஆன் ஷரீபை மனனஞ் செய்து ஹாபிலாகவுமாய் விட்டார்கள்.

வெளிரங்கமாக கல்விகளைக்கற்று தேர்ச்சியடைந்தபின் அகசுத்தம் மனத்தூய்மை முதலியவைகளில் பிரவேசித்து 11-வருட காலம் வரை இஷாத்தொழுகைக்குச் செய்யும் ஒளுவினுல் பஜர் தொழுகையை நிறைவேற்றிவந்ததுடன் ஹஜ்ரத் காஜா அப்துல்லாஹிப்னு ஜைத் (ரலி) அவர்களிடம் உபதேசமும் பெற்றிருக்கின்ருர்கள்.

ஹஜ்ரத் அவர்கள் மாபெரும் கல்விமானுகத் திகழ்ந்ததுடன் சிறந்த குணசாலியாகவும் இனிமையான அழகிய வார்த்தையாடுபவர்களாகவும் சம்பூர்ண மனத்தினராயும் சிறியோர் பெரியோர் முதல் சகலரிடமும் தன்மையோடு நடந்து கொள்பவர்களாயும் யாரையும் தாழ்மையாக நோக்காதவர்களாயும் திகழ்ந்ததுடன் அவர்களின் சற்குணத்தைப் பின்பற்றி நடக்க யாவரும் விருப்பங் கொள்ளுகிறவர்களாயும் அவர்களது அபாரகுணத்தை சகலரும் போற்றிப் புகழ்பவர்களாயுமிருந்தார்கள். இவ்வாறுன தன்மை வாய்ந்திருந்ததுடன் கொடை வள்ளலாகவும் விளங்கினுர்களாதலின், ஒரு வஸ்துவை விரும்பிச்செல்லுபவர்கள் அவர்களின் தலைவாயிலிலிருந்து வெறுங்கையுடன் திரும்பிச் சென்றது கிடையாது. ஆகவே ஹஸ்ரத் அவர்களிடம் அகப்பெருமை மூர்க்ககுணம் முதலியவற்றின் வாடை கூட வீசியது கிடையாது. ஆனல் இந்நிலைமையில் ஐசுவரியம் படைத்தவர்களிடம் அவர்களின் ஐசுவரியத்தைக் கருதி ஒருநாளும் தலை சாய்த்தது கிடையாது.

ஹஜ்ரத் அவர்கள் வைதீக விஷயத்தில் மகானுய்த் திகழ்ந்ததுடன் கீர்த்திவாய்ந்த வியாபாரியாகவும் பெரும் இலாபம் சம்பாத்தியம் செய்கிறவர்களாயுமிருந்ததால் தங்கள் தேவைக்காக இதரர்களிடம் செல்லவேண்டிய ஆவசியமில்லாதிருந்தது. ஆரம்பத்தில் தங்களிடம் சொற்பக்காசு இருந்தபொழுதும் உள்ளதைக் கொண்டு போதுமாக்கிக் கொள்பவர்களாயிருந்தார்கள். இந்நிலைமையில் ஹஜ்ரத் அவர்கள் கீர்த்திபெற்ற மாகானுய் விளங்கியதால் தனம் படைத்ததலைவரொருவர் இரண்டாயிர ரூபாய் கொண்டுவந்து ஹஸ்ரத் அவர்களிடம் கொடுத்தார் உடனே ஹஸ்ரத் அவர்கள், கீழ்கையைவிட மேல்கைதான் அதாவது வாங்குவதைவிட கொடுப்பது தான் மேலாகுமென்று நாயகவாக்கியம் கூறுவதால், தாங்கள் கொடுக்கும் நன்கொடையை யான் பெற்றுக்கொள்ள முடியாதெனத் தெரிவித்து விட்டார்களென்று ததுகிறத்துல் வாஸிலீன் என்னும் கிரந்தத்தில் கூறப்பட்டிருக்கிறது.

இஸ்லாமியப் பிரசாரம்

ஹஸ்ரத் அவர்கள் சன்மார்க்கப் பிரசாரத்தின்மீது அதிகப் பற்றுக்கொண்டிருந்தார்களாதலின் தங்களின் மிகுத நேரத்தை அவ்வுத்தம கைங்கரியத்தில் செலவிடுபவர்களாயிருந்தார்கள். அல்லாஹ்தஆலா அவர்களுக்குப் பிரசங்க வன்மையை அளித்திருந்ததுடன் அதில் தெய்வீகசக்தியும் அமைந்திருந்ததால் கேள்ப்போர் மனதில் அம்பு பாய்வதுபோல் பாய்ந்து நெகிரில்லாப் பிரயோசன மளிந்துவந்தது குறிப்பிடத்தக்கதாகும். ஒரு முறை ஹஸ்ரத் அவர்கள் சமர்கந்தில் "அல்லாஹ்வின்மீது பிரீதிகொள்ளுதல்" என்னும் விஷயமாய்ச் சொற்பெருக் காற்றுங்காலை யூதர் நஸாரா முதலிய இதர மதவாதிகளில் 128 நபர்கள் வரை சுத்த சத்திய இஸ்லாம் மார்க்கத்தைப் பின்பற்றி யொழுகியிருக்கின்ருர்கள். அப்பிரசங்கத்தின் முக்கிய சாரம்ஸம் பின் வருமாறு :—

உலக மடங்கலையும் படைத்து ரக்ஷித்துக் காப்பாற்றிவரும் அல்லாஹ்வுக்கே சகல புகழும் உரித்தாகுக. வணக்கத்துக்குப் பாத்திரமானவன் அவனைத் தவிர வேறு யாருமில்லை. அவன் உலகமடங்கலையும் வளர்த்துக் காப்பாற்றுகிறவனுயிருக்கிறுன். ஒவ்வொரு உயிர்ப் பிராணிக்கும் தீன் அளிப்பவனுயுமிருக்கிறுன். இவ்விஷயத்தில் அவனுக்கு யாரும் உதவி கிடையாது. உலக முழுதிலும் அவனுடைய அதிகாரமே செல்படியாய்க்கொண்டிருக்கிறது. அவன் அளவற்ற கிருபையாளனுகவும் நிகரற்ற அன்புடையோனுமாயு மிருப்பதால் அடியார்கள் அவனுடைய கட்டளைக்கு எவ்வளவு தூரம் மாற்றஞ் செய்தபோதிலும் பாவமன்னிப்புத் தேடிவிடுவார்களாயின் அவர்களின் பாவத்தை மன்னித்து அன்னேர்மீது தனது கிருபையின் வாயலைத் திறந்துவிடுகின்றுன். எனவே ஆதரவற்று மதிமயங்கி தடுமாறித் திரிபவர்களே! எதற்காக நீங்கள் அவனது கிருபையினின்று தூரத்திலிருக்கின்றீர்கள்;

உடனே எழுந்து உங்கள் நாயனது பொருத்தத்தைத் தேடுவதற்கு முயற்சியுங்கள்; அவனது கட்டளைக்குமுன் சிரம் சாய்ப்பதற்குப் பிரயத்தனப்படுங்கள்; இனி நீங்கள் வேறு யோசனை செய்வதற்குத் தேவையில்லை; அவனுக்கு வழிப்பட்டு நடந் தொழுவீர்களாயின் உங்கள் சங்கை மரியாதைகள் அதிகரித்துக்கொண்டே போகும். அவன் அடியார்மீது அளவற்ற அன்பு பூண்டவனாயிருக்கிறான். மனோ இச்சைக்கு வழிப்பட்டு நடப்பவர்களே! அல்லாஹ்வின் சம்மந்தத்தை விட்டு நீங்கியிருக்கும் இவ்வுலகின் அற்ப வாழ்க்கையானது அழிந்து நாசமாகப் போகக்கூடிய ஒரு விளையாட்டாக இருக்கிறது. ஆகவே அதனளவில் முன்னோக்காது சதா காலத்தின் சுவண்டியைத் தேடுவதற்குப் பிரயத்தனப்படுங்கள். எவன் பலவாறான அபிலாஷைகளையும் தவிழ்ந்து தனது ரக்ஷகனை நாடுகின்றானோ, இன்னும் ஒவ்வொரு நேரமும் தன் எஜமானனின் பொருத்தத்தையே பிரதானமாகக் கருதுகின்றானோ இன்னும் அவனுடைய விருப்பத்தையே பிரதானமாக நாடிக்கொண் டிருக்கின்றானோ அவனுக்குத்தான் சதாகாலத்தின் சுவண்டியும் கிடைக்குமென்று உங்களுக்கு ஞாபகமூட்டுகின்றேன். அல்லாஹ் தஆலாவின் உண்மை அடியார்கள் யாரென்று உங்களுக்குத் தெரியுமா? எவர்கள் தங்கள் மனவிருப்பமான அபிலாஷைகளை மறந்து தங்கள் நாயனின் விருப்பத்தைத் தேடுகின்றார்களோ அவர்கள் பலவாறான சோதனைக்குட்படுத்தப் படுகின்றார்கள்; சிலகால் அவர்களது கழுத்துக்கள் வாள்முனைக்கு இலக்காகின்றது; சிலகால் தூக்கு மரத்திலேற்றப்படுகின்றார்கள்; அவர்கள் நெஞ்சுகள் ஈட்டியின் குத்துச்கு பாத்தியமாகின்றது. இவ்வாறான பரிசோதனையுடைய காலத்திலும் அன்னோரின் மனதில் அல்லாஹ்வின் பிரீதியே மிகைத்துப்போய் இருக்கும். ஆகவே ஏகசக்தி பொருந்திய அல்லாஹ் தஆலாவுக்கு வழிப்பட்டு நடந்து கொள்ளுங்கள்" என்பதே.

அல்லாஹ்வின்மீது பற்று

ஹஸ்ரத் அவர்கள் அல்லாஹ்வின்மீது அபரிமிதமான பிரீதிகொண்டிருந்தார்களென்பது, அவர்களது நடவடிக்கைகளிலிருந்தே வெளியாய்க் கொண்டிருந்தது. அவர்களது இராக்காலங்களிலநேகம் அல்லாஹ்வின் தியானத்திலேயே சென்றுகொண்டிருந்தது. அல்லாஹ்த ஆலாவை வணங்காதயாதொரு இரவும் ஹஸ்ரத் அவர்கள்மீது செல்படியானது கிடையாது. ஹஸ்ரத் அவர்களின் பிரதான சிஷ்யராகிய எஹ்யபின் ஆஸிம் என்பவர் கூறுகின்றார். எங்களுடைய குருவாகிய ஹஸ்ரத் காஜாபுலைல் அவர்கள் இராப்பகல் காலத்தில் 150 ரக்கஅத்து தொழுகை நிறைவேற்றுகிறவர்களாயும் ஆயிரம் ஸலவாத்து ஓதுகிறவர்களாயுமிருந்தார்கள்; இரவு முழுதும் வணக்கம் புரிந்துகொண்டிருந்தும் பகலில் சொற்ப நேரமே தூங்குகிறவர்களாயிருந்தார்கள் என்பதே.

சுன்னத்தைப் பின்பற்றுதல்

ஹஸ்ரத் அவர்கள் எம்பெருமானார் (ஸல்.) அவர்களின் நடவடிக்கைகளைப் பின்பற்றி நடப்பதில் அதிகப்பிரீதி கொண்டிருந்தார்களாதலின் தங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு காரியத்திலும் மகான் அவர்களின் அடிச்சுவற்றையே பின்பற்றி நடப்பதற்குப் பஹீரதப்பிரயத்தனமெடுத்து அவ்வாறே நடந்து வந்தார்கள். எனவே, ஹஸ்ரத் அவர்கள் ஏழைகள் சக்தியற்றோருக்குப் பெரும் உபகாரம் புரிந்து வந்தார்கள்; வியாதியஸ்தர்களைச் சந்தித்து அவர்களுக்குத் தேர்தல் சொல்லி வந்தார்கள்; தங்கள் காரியங்களைத் தங்கள் கையினாலேயே செய்துவந்தார்கள்; அவர்கள் கல்விபயின்று முடிந்தவுடன் அவர்களது ஐசுவரிய நிலைமையும் தக்க விதமாக இருந்து வந்ததால் சுகவாழ்க்கை நடத்தி சுவண்டியோடு காலங்கழிக்க ஹேதுவிருந்தும் வெளிரங்கமான இச்சுவண்டியை அற்ப வஸ்துவாகவே எண்ணியிருந்தார்கள்.

உண்மையை வெளிப்படுத்தல்

எந்த மனிதனுடைய மனதில் அல்லாஹ்த ஆலாவின் வலுப்பமும் மேன்மையும் நிரம்பியிருக்கின்றதோ அந்த மனிதன் யாருக்கும் பயப்படமாட்டாரென்றும் வாள் வீச்சுக்கும் பயப்படாது உண்மையை வெளிப்படுத்தி விடுவாரென்றும் பெரியோர்கள் கூறியிருக்கின்றார்கள். எனவே, ஹஸ்ரத் அவர்கள் இக்குணத்தில் முற்றும் சிறந்து விளங்கினார்களென்பதை அவர்கள் வாணாள் சரிதையினின்று நன்கு தெரிந்துகொள்கிறோம். ஒருநாளன்று ஓர் மாணவர் ஹஸ்ரத் அவர்களிடம் வந்து, ஸமர்கந்து அரசர் விஷயமாய் தூஷணையான வார்த்தைகள் கூறி அவர் வன்னஞ்சராக யிருப்பதுடன் அளவுக்கதிகமான மூர்க்ககுணம் படைத்தவராயுருக்கின்றார் எனத் தெரிவித்தார். உடனே ஹஸ்ரத் காஜா அவர்கள், அமீரின் இருப்பிடஞ்சென்று அமீரை நோக்கி உம்முடைய இவ்வாழ்க்கையை பிரதானமாகக் கரு

திக் கொண்டு மானிடத் தன்மையைவிட மேன்பட்டவரென்று கருதுகின்றீர் போலும். உம்மிடம் ஏழைகள் ஏதாகிலும் கூறுவது குற்றமாக இருக்கிறதுபோலும். இஃது உண்மையாயின் அது, உமது வாழ்க்கை என்னும் சுடரை நூர்த்துவிடக் கூடியதாக இருக்குமென்று உபதேசஞ் செய்கின்றேன். நீர் நல்ல சாலிஹான காரியங்கள் செய்துவிட்டு மறு உலக யாத்திரை செய்வீராகில் அங்கு அல்லாஹ்வின் சன்னிதானத்தில் தக்க விதமாய் வரவேற்கப்படுவீர். இல்லாது போனால் சுடர்விட்டெறியும்படியான நரகம் உமது இருப்பிடமாகுமென்பதை தக்க விதமாய் கவனத்தில் வைப்பீராக. அரசரே! இஸ்லாம் மதமானது மனிதர்களுக்குள் ஏற்றம் தாழ்வு என்னும்பாகுபட்டைஅழித்தொழித்து விட்டதென்பது உமக்குத் தெரியாதா? உங்களில் அதிகமாய் அல்லாவை பயந்து நடந்தவன் தான் அவனிடம் சங்கையான—மேலானவன் என்பதாய் குர்ஆன் போதனை செய்திருப்பது உமக்குத் தெரியாதா? இந்நிலைமையில் உம்முடைய வாழ்க்கையை மானிடத் தன்மையை விட மேலாகக் கருதுகின்றீரா? எனக் கேட்டார்கள். காஜா அவர்களின் இக் கடும்மொழிகள் அமீரின் ஹிருதயத்தில் அம்பு பாய்வது போல் ஏறிவிட்டதால் உடனே அவர் தாம் இழைத்து வந்த தவறினின்று உடனே மன்னிப்புத் தேடித் தௌபாச் செய்து உத்த புருடனாய்ச் சிறந்து விளங்கினர்.

உபதேசரத்தினங்கள்

(1) எந்த மனிதன் சகல காரியங்களிலும் அல்லாஹ்தஆலாவின் பொருத்தத்தைப் பிரதானமாக வைத்துத் தனது காரியங்களை நடத்திச் செல்லமாட்டானோ அவன் பெரும் பொய்யனாகும்.

(2) உங்கள் மனம் தடுமாற்றமடைந்து நிலையற்றிருங்குங்கால் அல்லாஹ் தஆலாவிடம் பிரார்த்தனை புரியுங்கள். அது பிரார்த்தனை ஒப்புக் கொள்ளப்படும் நேரமாகும்.

(3) எந்த ஏழையாகிலும் சீமானின் வீட்டுக்குச் சென்று அச் சீமானின் மனதை திருப்தி செய்வதற்காக பலவாறான உண்மையற்ற வார்த்தைகள் கூறுவானாகில் அவன் மிகவும் அற்பனாயிருக்கும்.

(4) எவன் வெளிரங்கமானவைகளையே கவனித்துக்கொண்டு அதிலேயே பராக்காயிருக்கிறானோ அவன் அந்தரங்கத்தைத் தெரிந்து கொள்ளாதவனாய் விடுகின்றான்.

ஹஸ்ரத் அவர்கள் மரணம்

ஹிஜ்ரீ 187-ம் ஆண்டு ரபீஉல் அவ்வல்மீ 3-ந் தேதி ஹஸ்ரத் அவர்கள் வியாதியால் பீடிக்கப்பட்டதால் பேச்சு வார்த்தையே நின்று போயிற்று. மூன்று தினங்கள்வரை கடுமையான ஜுரத்தோடிருந்து நான்காவது தினம் அல்லாஹ் தஆலாவின் சமுகம் சேர்ந்து விட்டார்கள். ஹஸ்ரத் அவர்கள் கபர்ஷரீபானது மக்கமா நகரில் 'ஜன்னத்துல் முஅல்லா' என்னுமிடத்தில் யாவரும் சென்று ஜியாரத் செய்து வருமிடத்தில் அமைந்திருக்கின்றது.

ஹஸ்ரத் கதீஜத்துல் குப்ரா (ரலி) அவர்கள்

உத்தம மாதின் திருநாமம் கதீஜாவாகும். காரணப்பெயர் 'உம்முல் ஹஸனத்' என்பதாகும். பின்னர்எம்பெருமானார் நபிய்யகரீம் (ஸல்.) அவர்கள் "தாஹிரா" வென்றழைத்திருக்கின்றார்கள். அவர்கள் அரபவகுப்பினரின் உயர் குடும்பமாகிய குரைஷ் வர்க்கத்தைச் சார்ந்த தூய்மைவாய்ந்த மாது சிரோன்மணியாகும். தங்கள் குணவிசேஷத்தால் தனிச்சிறப்பினையுடன் சிறந்து விளங்கிவந்தார்கள். அவர்கள் மிதமிஞ்சிய கொடைவள்ளலாக விளங்கினர்களென்பதற்கு, அவர்களிடம் ஒரு வஸ்துவை நாடிச் சென்றோர் வெறுங்கையுடன் திரும்பவில்லை என்பதே போதிய சான்றாகும். ஏழைகளை ஏற்று ஆதிரிப்பவர்களாயும் விசாலமனத்தினராயும் வரையாது கொடுக்கும் வள்ளலாயும் சிறந்து விளங்கினர்கள்.

விவாகம்.

ஆரம்பத்தில் அரப்தேசத்திலுள்ள கியாதி வாய்ந்த தலைவரும் பெரிய வியாபாரியுமாகிய 'அபூஹாலா'வுடன் விவாகம் நடைபெற்றிருந்தது. பின்னர் 'அதிக் பின்ஆபித்' உடனும் அவர் மரணமானவுடன் 'சைபீ இப்னு உமைய்யா'வுடனும் விவாகமாயிருந்தது. இவரும் அல்லாஹ் அளவில் சேர்ந்தவுடன் மாதரசி அவர்கள் கைம்பெண்ணாய் விட்டார்கள்.

வியாபாரம்

ஹஸ்ரத் கதீஜா (ரலி.) அவர்களின் தந்தையாரகிய 'குவைலதிப்னு அஸத்' என்பார் அரப் வர்க்கத்தாரில் கியாதிவாய்ந்த தலைவராயும் பிரக்யாதிபெற்ற வியாபாரியுமாயிருந்தார். அவருடைய காலத்திலிருந்தே பீபி அவர்கள் வியாபாரத்தில ஈடுபட்டுவிட்டார்கள். எனவே, பீபிஅவர்கள் வேலையாட்கள் மூலம் வியா

பாரத்தை நடத்திவந்தார்கள். மாதவர்களுக்கு அல்லாஹ்தஆலா அதிகமான ஐசுவரியத்தைக் கொடுத்து எவ்விதக் குறைவுமின்றி வாழ் நாளைக் கழித்துவந்தபோதிலும் அவர்கள் மனதுமட்டும் நிம்மதிபடையாது துக்கசாகரத் தில் மூழ்கிப்போய் இருந்தது.

எம்பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர் கள் 25 பிராயத்தை அடைந்தவர்களான போது தாங்கள் சற்குணம் வாய்ந்த சன்மார்க்க சீலராகவும் உத்தமகுணம் வாய்ந்த உண்மை புருஷராயும் சிறந்துவிளங்கியதால் அரபுதேசத் தின் ஒவ்வொருமூலை முடுக்கிலும் 'அமீன்' என்னும்பெயருடன் அழைக்கப்பட்டும் ஞாபகப் படுத்தப்பட்டும் வந்தார்கள். பீபி கதீஜா (ரலி.) அவர்களது மனம் ஆரம்பமுதலே இவ்வா றன தூய்மைவாய்ந்த சற்குண சீலர்பால் பற் றுக்கொண்டிருந்ததாகையால் வெகு அன் போடு நபிகள் திலகம் (ஸல்.) அவர்களை தங்கள் வியாபார ஏஜண்டாக அமரும்படி தூதனுப்பி வைத்தார்கள். எனவே, தங்கள் வியாபார சாமான்களை ஷாம் தேசத்துக்குக் கொண்டு செல்லும்படியும் தங்கள் வேலைக்காரராகிய 'மைஸரா'வைக்கூட அனுப்பிவைப்பதாகவும் மற்றவர்களுக்குக் கொடுக்கும் இலாபப்பங்கில் இரட்டிப்புக் கொடுப்பதாயும் தெரிவித்துக் கொண்டார்கள். எம்பெருமானார் நபிகள் தில கம் (ஸல்.) அவர்கள் தங்கள் சிறியதந்தைய ரான ஹஸ்ரத் அபூதாலிப் அவர்கள் மூலம் பீபி கதீஜா (ரலி.) அவர்களின் வியாபார நிலை மையை நன்கு தெரிந்திருந்தார்களாதலின் அன் போடு ஒப்புக்கொண்டு வியாபாரச் சரக்குகளை ஷாம்தேய பக்கல்கொண்டு சென்றார்கள். நபி பெருமானார் (ஸல்.) அவர்கள் அங்கு கொண்டு சென்று விற்பனை செய்ததில் அல்லாஹ்தஆலா வின் கிருபையால் பெருத்தலாபம் கிடைத்து விட்டது. இதற்குமுன் எந்த வியாபாரிக்கும் இவ்வாறன லாபம் கிடைத்ததேயில்லை.

அப்பிரயாணத்தில் கூடச்சென்ற 'மைஸரா' என்னும் அடிமை கூறுவதாவது :—நாங்கள் ஷாம்தேசம் செல்லுங்கால் பாதையில் வெயில் நேரம்வரும்போது சிறிய மேகமொன்று, பெரு மானார் (ஸல்.) அவர்கள் தலைமீது நிழலிட்டுக் கொள்ளும்; தாங்கள் ஏதாகிலும் மரத்துக்குக் கீழ் தங்குவார்களாயின் அது பசுமை பொருந்தியதாய்விடும்; தங்களைக்காணும் பாதி ரிகளெல்லாம் இவர் மிகமிக தூய்மையுடையவ ராக யிருக்கிறார் எனக்கூறினர் என்பதே.

ஹஸ்ரத் அவர்கள் அப்பிரயாணத்தினின்று திரும்பிவரவே சரியானபடி பீபிகதீஜா (ரலி.) அவர்களிடம் வியாபாரக்கணக்கை ஒப்புவித் தார்களாதலின் பீபி அவர்கள் சந்தோஷத் துடன் அதனை எற்றுக்கொண்டு ஆரம்பத்தில் கூறியிருந்ததற்கு இரட்டிப்புக் கொடுத்தார்கள்.

பெருமானாருடன் விவாகம்

ஹஸ்ரத் கதீஜா (ரலி.) அவர்கள் கைம்பெண் ணாகயிருந்தார்களாயினும் அவர்கள் அழகு சௌந்தரிய முடையவர்களாயும் தீக்ஷணிய அறிவும் விசால ஞானமும் படைத்த செல் வந்த மாதாகவு மிருந்ததால் அநேகத் தலை வர்கள் விவாகம் புரிந்துகொள்ள உத்தேசித் தனராயினும் பீபி அவர்கள் அதற்குச் சம்மதித் தார்களில்லை. இந்நிலைமையில் அவர்கள் தங்கள் உண்மைத் தோழியாகிய 'நபீஸா' என்னும் மாதை பெருமானார் (ஸல்.) அவர்களிடம் அனுப்பி விவாகம்பேசி வரும்படி செய்தார்கள். 'நபீஸா' மூலம் கிடைத்த வேண்டுகோளை பெருமானார் (ஸல்.) அவர்கள் ஏற்றுக்கொண் டார்கள். பின்னர் விவாக மஜ்லிசில் பெருமா னார் (ஸல்.) அவர்களின் பெரிய தந்தையராகிய அபூதாலிப் அவர்களும் கதீஜா (ரலி.) அவர்க ளின் சிறிய தந்தையாகிய அம்ரிப்னு அஸதும் கூடயிருந்தார்கள். ஹஸ்ரத் அபூதாலிப் அவர் கள் நிகாஹ்குத்பா ஓதி 500 தங்கநாணயம் மஹர் ஏற்படுத்தினார்கள். விவாக காலத்தில் பெருமானார் (ஸல்.) அவர்களுக்கு 25 பிராய மும் பீபி அவர்களுக்கு 40 வயதுமாயிருந்தது. ஆனால் பீபி அவர்கள் அழகு சௌந்தரியத்தி லும் சுகஜீவியாக வாழ்க்கை நடத்தியதிலும் சிறு பிராயமுடையவர்களே போன்று தோன் றினார்கள். பெருமானார் (ஸல்.) அவர்கள் இவ் விவாகத்தினால் பெரும் சந்தோஷமடைந்துசதி பதிகள் இருவரும் திருப்தியாக வாழ்க்கை நடத்திவந்தார்கள்.

நபிப்பட்டத்தின் ஒளி

நபிப்பட்டம் வெளியாவதின் காலம் சமீ பித்துவிடவே, அல்லாஹ் தஆலா பெருமானார் (ஸல்.) அவர்களின் மனதில் தனித்திருப்பதில் அதிக விருப்பத்தை அளித்துவிட்டான். எனவே பெருமானார் (ஸல்.) அவர்கள் மக்கமா நகரிலிருந்து மூன்றுமைல் தூரத்திலுள்ள 'ஹிரா'ப் பொதுப்புக்குச் சென்று மாதக்கணக் கில் அங்கு அல்லாஹ் தஆலாவை தியானித் துக் கொண்டிருப்பார்கள். சில நாளைக்குப் போதுமான சாப்பாட்டை எடுத்துக்கொண்டு

சென்று அது முடிந்தவுடன் வீட்டுக்குத் திரும்பிவந்து மறுபடியும் தேவையானதை எடுத்துச் செல்வார்கள். 'வஹி' வருவதற்குமுன் உண்மையான கனவுகள் வெளியாய்க் கொண்டிருந்ததாகையால் எதைத் தாங்கள் கனவில் பார்க்கின்றார்களோ அவை நிதர்சனமாய் வெளியாய்க் கொண்டிருந்தது. இந்நிலைமையில் தாங்கள் வழமைபோல் 'ஹிரா'ப்பொதும்பில் வணக்கம்புரிந்து கொண்டிருக்குங்கால் ஒரு மலக்கு தோன்றி கூறியதாவது:—

முஹம்மதே நன்மாராயம் உண்டாவதாக! நான் ஜீப்ரயீலாகும். அல்லாஹ் தஆலாவால் அனுப்பப்பட்டு தங்களிடம் வந்திருக்கிறேன்; தாங்கள் அல்லாஹ்வின் ரசூலாகும். உலகத்தை ஒழுங்குபடுத்திவைப்பதும் நேர்வழிகாண்பிப்பதும் தங்கள்மீதுள்ள கடமையாயிருப்பதால் மானிடர்களை ஏகத்துவத்தின் பக்கல் அழையுங்கள்; உண்மையான ஆண்டவனை வணக்கம் புரிவதற்குக்கற்றுக்கொடுங்கள்; இதுபொழுது அல்லாஹ்வின் பக்கத்திலிருந்து யான் கொண்டுவந்திருக்கும் வஹி அறிவிப்பை ஓதுங்கள் என்பதாகும். அதுபொழுது பெருமானார் (ஸல்.) அவர்கள் யான் எழுதப்படிக்கத் தெரியாத உம்மியாகயிருப்பதால் எவ்வாறு ஓதமுடியும் எனக்கூறினார்கள். உடனே ஹஜ்ரத் ஜிப்ரயீல் (அலை.) அவர்கள் முன்வந்து கட்டி அணைத்து இதுபொழுது ஓதுங்கள் எனக்கூறினார்கள். உடனே பெருமானார் (ஸல்.) அவர்கள் 'இக்ரஉ' ஸூரத்தின் சிலவாக்கியங்களை ஓதியபின் ஜிப்ரயீல் (அலை.) மறைந்து விட்டார்கள். உடனே எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் நடுக்கமுற்றவர்களாய் வீடுவந்து அருமைப்பிராட்டியரான பீபி கதீஜா (ரலி.) அவர்களிடம் நடைபெற்ற சம்பவங்களைக் கூறி துப்பட்டி போர்த்தும்படி கூறினார்கள். உடனே பீபி கதீஜா (ரலி.) அவர்கள் படுக்கையை விரித்து பெருமானார் (ஸல்.) அவர்களைப் படுக்கச்செய்து கம்பளியைப்போர்த்துவிட்டார்கள். பின்னர் சற்று தெளிவேற்பட்டவுடன் நிகழ்பெற்ற முழு சம்பவங்களையும் விபரித்துக்கூறினார்கள். உடனே பீபி அவர்கள் தங்களை, தவ்ருத் இன்ஜீல் வேதங்களை தக்க முறையில் கற்று பாண்டித்தியம் பெற்றிருந்த 'வறகாபின் நவ்பல்' அவர்களிடம் அழைத்துச் சென்றார்கள். அவர்களிடம் பெருமானார் (ஸல்.) அவர்கள் சம்பவ நிகழ்ச்சிகள் யாவற்றையும் தெரிவிக்கவே, அவர் கூறியதாவது:—மூஸா (அலை.) அவர்களிடம்வந்துகொண்டிருந்த நாமூஸ அஃலம் தான் தங்களிடம்வந்திருக்கிறார்; ஹஸ்ரத்மஸீஹ் (அலை.) அவர்கள், பிற்காலத்தில் வருவார்களென்று கூறிச்சென்றவர்கள் தாங்கள்தான் என்பதே. பின்னர் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் வீடுதிரும்பி வந்து ஆரம்பமாக ஹஸ்ரத் கதீஜா (ரலி.) அவர்களை, உண்மையான ஏகப்பரம்பொருளாகிய கடவுளை வணங்குவதின் பக்கல் அழைத்தார்கள். உடனே அவர்கள் ஈமான் கொண்டு பின்வருமாறு கூறினார்கள்:—அல்லாஹ்வுடைய ரசூலே! யான் தங்கள் துணைவியாக யிருக்கின்றேன்; தங்கள் கீர்த்தி மகிமைகளை யெல்லாம் நன்கு தெரிந்திருக்கிறேன்; தாங்கள் மிகவும் உண்மையுள்ளவர்களாய் யிருப்பதுடன் தங்களின் பேணுதல் தன்மை அரப்நாடு முழுதும் பிரக்யாதி பெற்றிருக்கின்றது; தாங்கள் ஏழைகளை ஆதரிப்பதற்காகவும் வியாதிஸ்தர்களை சந்தித்து தேறுதல் கூறுவதற்காகவும் பிரத்தியேக பங்கெடுத்துக் கொள்கின்றீர்கள்; தங்கள் அளவற்ற கிருபையாளராகவும் மட்டற்ற தயாள சிந்தை வாய்ந்தவர்களாயும் ஞான பொக்கிஷத்தின் அரசராகவும் திகழ்ந்து கொண்டிருக்கின்றீர்கள்; தங்களின் சாதாரண வாழ்க்கையும் சற்குண சிந்தையும் ஓர் அழகிய முன் மாதிரியாய்த் திகழ்ந்து கொண்டிருப்பதின் பயனைத் தான் அல்லாஹ் தஆலா தங்களுக் நபிப்பட்டத்தை அருள் செய்திருக்கிறான் ஆகவே தாங்கள் உண்மையான நபியாகயிருக்கும் என்பதே. இந்நிகழ்ச்சி சம்பவத்தை ஐரோப்பிய சரித்திராசிரியராகிய எட்வர்ட் கிப்பன் என்பவர் தமது சரித்திர புத்தகத்தில் குறிப்பிட்டிருக்கின்றார்.

இஸ்லாமியப் பிரசாரம்

ஆரம்பமாக இஸ்லாத்தின் சந்திரன் பிரகாசிக்க முற்பட்ட காலமானது, முஸ்லிம்கள் மனதில் பயம் குடிகொண்ட காலமாகயிருந்தது; தேசத்தின் நானாபாகங்களிலும் மடமையே குடிகொண்டு விக்கிரக ஆராதனையின் புகையே எங்கும் நிரம்பிப் போயிருந்தது. விக்கிரக ஆராதனைக் கொள்கைக்கு முன், அதற்கு மாற்றமாய் ஒரு வார்த்தை கூறுவதும் பெரும் குற்றமாகக் கருதப்பட்டு வந்தது. இவ்வாறான சோதனையுடைய காலத்தில் ஹஸ்ரத் கதீஜா (ரலி.) அவர்கள் மன தைரியத்தோடு அரப் மாதர்களுக்கிடையே இஸ்லாமியப் பிரசாரம் புரிய முற்பட்டார்கள். அரபிகளில் கியாதி வாய்ந்த வர்த்தகர்களின் பெண்சாதிமார்கள் தங்களிடம் வந்திருந்தகாலை அவர்கள் யாவ

ரும் பீபி அவர்களின் சத்தியபோதனையை ஏற்று மறைவாக ஈமான் கொண்டுவிட்டார்கள். இதுவன்றி பீபி அவர்கள் இதர அரப் வர்க்கத்தாரின் பெண்டீர்களிடஞ் சென்று இஸ்லாத்தின் உன்னத நிலைமையை இனிதெடுத்தோதியும் அவர்களின் துக்கம் சந்தோஷம் முதலியவைகளில் கலந்துகொண்டு மிருந்திருக்கின்றார்கள். பீபி அவர்களின் இம்முயற்சியின் பயனாய் 60 மாதுக்கள்வரை இஸ்லாத்தின் உண்மைக் கொள்கையை முழுமனதோடு ஏற்றுக்கொண்டிருக்கின்றார்கள்.

பெருமானாரின் விருப்பம்

ஹஸ்ரத் கதீஜத்துல் குப்ரா (ரலி.) அவர்கள் அளவற்ற தீக்ஷணிய அறிவுடையவராயும் பெருமானார் (ஸல்.) அவர்களின் சுகதுக்கங்களை தங்கள் சுகதுக்கம்போல் பாவிக்கிறவராயுமிருந்ததால் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் அம்மாதரசியின்மீது அதிகப்பற்றுக் கொண்டிருந்தார்களாதலின், அவருடைய மரணத்தின் போது பெருமானார் (ஸல்.) அவர்கள் ஆழ்ந்த துக்க சாகரத்தில் மூழ்கினார்கள். அதற்குப் பின்னும் அம்மாதை சதாவும் ஞாபித்துக் கொண்டேயிருப்பார்கள்.

பீபி ஆயிஷா (ரலி.) அவர்கள் கூறுவதாவது:—பீபி கத்தீஜா (ரலி.) அவர்கள் மீது எனக்கிருந்த பொறாமையை விட வேறு யார் பேரிலும் அதிகமான பொறாமை ஏற்பட்டிருக்கவில்லை. ஒருநாளன்று ஹஸ்ரத் அவர்கள் பீபி கதீஜா (ரலி.) அவர்கள் விஷயமாய்க் கூறிக் கொண்டிருந்தபொழுது, அல்லாஹ்வின் ரசூலே! இதுபொழுது, அல்லாஹ் தஆலா தங்களுக்கு அம்மாதைவிட அழகிய பெண்சாதிகளைக் கொடுத்திருக்க, ஒரு விர்த்தாபியமடைந்த மாது விஷயத்தை இவ்வளவு பாரதூரமாய் எடுத்துக் காட்டுகின்றீர்கள் எனக் கூறினேன். இதனைச் செவியுற்ற எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் மனவருத்தமடைந்தார்களாதலின் அவர்களது முகாரவிந்தத்தில் துக்க அறிகுறி காணப்பட்டது. உடனே பெருமானார் (ஸல்.) அவர்கள் என்னை விழித்து ஆயிஷாவே! அல்லாஹ் தஆலா அம்மாதைவிட மேலான பெண்சாதியை எனக் களிக்கவில்லை; சகல மானிடரும் காபிராயிருக்கும்போது அம்மாது ஈமான் கொண்டுவந்தார்; உலக முழுதும் என்னைப் பொய்யாக்கி வைத்துக் கொண்டிருந்தகாலை அம்மாது எனக்கு பொருளுதவி செய்தார் எனக் கூறினார்கள். அதற்குப்பின் ஒருபொழுதும் அம்மாதை யான் தூஷணையாகப் பேசியது கிடையாது.

மரணம்

நுபுவ்வத்தின் பத்தாம் ஆண்டு ஷவ்வால்மீ 11-ந்தி காலை மரணமடைந்துவிட்டார்கள். தாங்கள் உயிருடனிருக்கும் வரை எம்பெருமானார் (ஸல்.) அவர்களின் உற்ற துணைவியாய்ச் சிறந்து விளங்கினார்கள்.

இஸ்லாத்தின் சிறப்பு

திருக் குர்ஆன் போதனைகளின் மேன்மை

ஜப்பானில் முதலாளி, தொழிலாளி சகோதரத்துவம்

(டாக்டர் காலித் ஷெல்டிரேக் அவர்கள் பிரசங்கம்)

“ஆங்கில பாஷைதான் அகில உலகிற்குப் பொது பாஷையாக விருக்கிறது” என்று வெஸ்டர்ன் இஸ்லாமிக் அஸோஸியேஷன் பிரசிடெண்ட் டாக்டர் காலித் ஷெல்டிரேக், ஈப்போ டவுன் ஹாலில் சென்ற ஞாயிற்றுக்கிழமை இரவு பிரசங்கம் செய்கையில் குறிப்பிட்டார்.

ஆண்டவன் ஒருவன் உண்டென்று நம்புகிறவர்களெல்லோரும் மனித சமூகத்திற்கே பயனளிக்கக்கூடிய முறையில் ஒத்துழைக்கவேண்டுமென்றும் இதில், உதாரணமாக ஜப்பானியர்கள் பூராவும் ஐக்கிய ஒற்றுமையுடன் வாழ்ந்து வருகிறார்களென்பது கண்கூடாகக் காணக் கிடக்கிறதென்றும் அறிவுறுத்திப் பேசினார்.

அவ்வமயம் பேரா ராஜா பெண்டாரா அக்கிராசனம் வகித்தார். மலாய்க்காரர், இந்தியர், முஸ்லிம்கள் மற்றுமனேகர் உள்பட ஏராளமானோர் டவுன் ஹாலில் குழுமியிருந்தனர். பிரசங்க ஆரம்பத்திற்கு முன் ராஜா பெண்டாரா, டாக்டர் ஷெல்டிரேக், மிஸ்டர் காலித் சிம்ஸன் ஆகிய மூவரும், எம். எம். ஹாதர் பாச்சா கம்பெனி மானேஜிங் டைரெக்டர் மிஸ்டர் அப்துற் ரஹீம் அவர்களால் மாலைகள் சூட்டப்பட்டு பூச்செண்டுகள் அளிக்கப்பட்டனர்.

'இஸ்லாம்' என்றால் சமாதானம்

'இஸ்லாம் என்ற பதத்திற்கு சமாதானம் எனப்பொருள் விளங்கும்' என்று கூறி உபன்னியாசத்தை டாக்டர் ஷெல்டிரேக் ஆரம்பித்தார். அவர் கூறியதாவது :—

"தற்பொழுது உலகில் அநேக மதங்களிருக்கிறன; இன்னும் பல ஏற்படலாம். ஆனால் இஸ்லாம் அவைகளிலெல்லாம் ஒப்பற்றது. மற்ற மதங்கள் அதற்குரித்தான ஒரே நபியை ஏற்றுக்கொண்டன. ஆனால் இஸ்லாம் எல்லா நபிமார்களையும் ஏற்றதுமல்லாமல், அவர்கள் அவ்வப்போது உலகிற்கு அல்லாஹு தஆலாவால் அனுப்பப்பட் டிருக்கிறார்களென்றும், அவர்கள் விடுத்துள்ள செய்திகளெல்லாம் ஒரே விதமானதென்றும் கூறுகிறது. இவ்வடிப்படையான கொள்கையின்பேரில் மனித சமூகம் சிந்தையை நாட்டினால் மதங்களுக்குள்ளும், சமூகங்களுக்குள்ளும், ஜாதிகளுக்குள்ளும் வேற்றுமை, வித்தியாசங்களிரா. பரிசுத்த குரானில் கண்டிருக்கும் பிரகாரம் "ஆண்டவன் ஒருவனே" "மனித சமூகமும் ஒன்றே."

ஏக சகோதரத்துவம்

மனிதவர்க்கம் தனித்தனி தொகுதியாய் சுய இச்சையுடன் வாழ்வதைவிட்டு எல்லோரும் ஒரே குடும்பத்திலுதித்த சகோதரர்களாகப் பாவிக்கவேண்டும். ஒரு மனிதன் சீனத்தைச் சேர்ந்தவனாகவோ அல்லது மொராக்கோவைச் சேர்ந்தவனாகவோ இருக்கலாம். ஆனால் அவர்களெல்லோரும் ஒரு தாய்வயிற்று மக்களாகக் கருதப்படல் வேண்டும். மதம் மனித ராசியை வரையறுத்துப் பிரிப்பதற்காக ஏற்படவில்லை. ஆனால் வாழ்க்கையின் வழியைக் காட்டுவதற்காக உண்டாக்கப்பட்டவை. அதுவே, வாழ்க்கையின் நீதி.

மதமானது மானிடரிடம் மலிந்துகிடக்கும் ஆபாசங்களைக் கட்டுப்படுத்தி, மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை என்பவைகளைப் போக்கி வாழ்வின் நன்மை தீமைகளை யுணர்த்தி, "என்னுடையது," "உன்னுடையது" என்னும் பாபத்துக்குக் காரணபூதங்களை அழிப்பதற்காகவே ஏற்பட்டது.

சிருஷ்டி கர்த்தா

"இப் பிரபஞ்சத்தைப் படைத்து, போஷித்து ஆண்டுவரும் ஒரே ஒரு சிருஷ்டி கர்த்தா உண்டு" என்று திருகுர்ஆன் போதிக்கின்றது. இதுவே கடவுளின் உண்மைத்தத்துவம். பொது ஜனங்கள் கடவுளின் உருவையோ தத்துவத்தையோ பற்றி விவாதிக்கத் தேவையில்லை. ஆனால் எவ்விதக் கோட்பாடுகளையோ நம்பிக்கைகளையோ இவைகளை யெல்லாம் ஒதுக்கித் தள்ளிவிட்டு எல்லாவற்றிற்கும் உயர்ந்ததும், உண்மையானதுமான ஒரு கடவுள் உண்டென்பதை மட்டும் மானிடர்கள் மனதில் கொள்ளவேண்டும். ஆதலால் மதமானது அந்த உண்மைப் பொருளைக் கண்டடைய பண்ணும் வழியேயாகும்.

சில நாட்களுக்கு முன் நான் சீனத்திலிருக்கும்போது அதே தேசத்தில் மதம் தான் சாமர்த்தியத்தின் வழிகாட்டியாகத் துலங்குகிறது எனக்கண்டேன். முஸ்லிம்கள் குறுகிய மனப்பான்மை யுடையோராக இருக்கமுடியாது. இருக்கவுமாட்டார்கள். சிறப்பாக யாரொருவர் மதம் என்பதின் உயரிய கொள்கைகளை சரிவரத்தெரிந்து கொள்வாரோ அவர் குறுகிய நோக்கமுடையவராய் இருப்பதரிது. கடவுள் ஒரு இனத்தவர்கட்கு மட்டும் பரிணமிப்பார் என்று நினைக்கவும் தகாது.

திரு குர்ஆனின் ஓர் அம்சமாவது மாறுபடவேயில்லை

திரு குர்ஆனில் கூறப்பட்டவைகளில் ஒரு சிறிய மாறுதலாவது, திருத்தமாவது கடந்த 13 நூற்றாண்டுகளாக ஏற்படவேயில்லை. ஆதியிலிருந்த பிரகாரமே அது இன்றும் இருக்கிறது. அதிலுள்ளவற்றை நேர்மையாகப் படித்தறிந்தால் அது அற்புதமானதோர் கிறந்தமாக விளங்கும்.

எதற்காக அராபி பாஷையிலேயே ஓதுகின்றீர்களென்று சிலர் கேட்டார்கள். அராபி பாஷையில் ஓதுவதால் முஸ்லிம்களுள் (எத்தேசத்தவராயினும்,வேற்றுமை யில்லாமலிருக்கவும் ஒருகுறிப்பிட்ட நேரத்தில் எத்தேசத்து முஸ்லிம்களும் ஜெபிக்கவும் கூடும்.

யாரேனும் மதத்தில் ஆசாரம் சடங்கு சாஸ்திரம் இருக்க வேண்டுமென்கிறார்களோ அவர்களுக்கும் மதத்திற்கும் பாரதூர வித்தியாசமிருக்கின்றது. மதத்தின் உண்மைத் தத்துவம் மறைந்தழிந்து போகின்றது. ஆதலால் தான் இக்காலத்தில் உண்மை மதத்தைக் கடைப்பிடித் தொழுகுங்கள் எனும் ஒலி உலகத்தில் கிளம்பி யிருக்கின்றது.

இஸ்லாமில் மதங்களின் ரக்ஷண்யம்

நான் ஒரு முஸ்லிம்; ஒரு ஆங்கிலேயனுமாவேன். நான் பல மதங்களையும் படித்தறிந்திருக்கிறேன். ஆனால்மற்ற மதங்களுக்கெல்லாம் இஸ்லாமில் தான் ரக்ஷண்யமுண்டு. ஒரே கடவுளிருக்கும்போது பலதிறப்பட்ட மக்களிருக்க முடியாது. நாங்கள் புரட்சிக்காரர்களுமல்ல; பொது வுடமைக்காரர்களுமல்ல; இஸ்லாமில்மானிடரெல்லோரும்சமம். எஜமானனுக்கும் பணியாளுக்கும் வித்தியாசமில்லை. இருவரும் சரிசமானமானவர்களே. மொரோக்கோவில் எஜமானும் வேலையாளும் ஒரே மேஜையில் சமபோஜனம் அருந்துவதை அடிக்கடி பார்த்திருக்கிறேன். நாங்கள் 1300 வருஷங்களாக அபேதவாதக் காரர்களே. எனினும் நாங்கள் அழிந்து போகவில்லை. உலகம் சீர்கெட்டிருக்கும்போது இஸ்லாம் தோன்றிற்று.

ஜப்பானியர் முஸ்லிம்களல்ல. எனினும் அவர்களுடைய வாழ்க்கையில் இஸ்லாமியக் கொள்கைகள் மலிந்து கிடக்கின்றன. ஜப்பானில் தொழிலாளரோடு எஜமானரும் சேர்ந்து பாடுபடுகின்றனர். தொழிலாளர்களுக்கு வேண்டிய சௌகரியங் களெல்லாம் எஜமானவர்களால் செய்து கொடுக்கப்பட் டிருக்கின்றன. அவர்களுடைய பிள்ளை குட்டிகளெல்லாம் செவ்வனே பரிபாலிக்கப் படுகின்றனர். ஜப்பானிய சமூகம் முழுவதுமே கவர்ன்மெண்டோடு ஒத்துழைக்கின்றது. அதனாலேதான் இப்பிரதேசங்களில் ஜப்பானியர் சரக்குகளைக் கொண்டு வந்து விலை சரசமாக கொட்டிக்குவிக்கின்றனர்.

ஆங்கிலம்.

நான் சென்ற விடமெல்லாம் உபன்னியாசங்கள் ஆங்கிலத்திலேயே செய்தேன். இதுவே உலக பொது பாஷையாகி வருகின்றது.

முடிவில் முஸ்லிம்களும், முஸ்லிம் அல்லாதோரும் சேர்ந்து ஒத்து வாழவேணுமாய்க் கேட்டுக் கொண்டார்.

அக்கிராசனருக்கும் பிரசங்கம் நிகழ்த்தியவருக்கும் வந்தனமளிக்க கூட்டம் இனிது முடிவுற்றது.

காதியானி மதத்துக்கு சாவுமணி

கொழும்பு நீதிபதியின் நேர்மையான தீர்ப்பு

முஸ்லிம் மனைவியை அஹ்மதிய கணவனிடம் ஒப்புவிப்பது தகாது

பாணத்துறை மெயின் தெருவில் வசிக்கும் யூசப் லெப்பை மரைக்காயர் அப்துல் ஹமீது என்னும் அஹ்மதியன் தனது மனைவியையும் மகவுவாகிய பாத்திமுத்து நாச்சியாவையும், ஆறுமாத முடைய பஷீர் அஹ்மதையும் தம்மிடம் ஒப்புவிக்கவேண்டுமென்று நீதிபதி கனம் அக்பர் அவர்கள் முன் மனுச்செய்து கொண்டார். அளுக்காமத்தில் வசிக்கும் J. L. M. இப்றாஹீம் லெப்பை மரைக்காயரும் அவர் மனைவி சாலிஹா உம்மாவும் எதிர் மனுதார்கள். மனுதாரர் தரபில் ஸ்ரீமான் மந்தாரா முதலானோரும் எதிர்மனுதாரர்கள் சார்பாக ஜனாப் எஸ். ஏ. மரைக்காயர் முதலியவர்களும் ஆஜராயிருந்தனர். கனம் நீதிபதி அவர்கள் இருதரப்பு வாதங்களையும் கேட்டுவிட்டு தீர்ப்புக் கூறுகையில் குறிப்பிட்டிருப்பதாவது:—

தீர்ப்பின் சாராம்ஸம்

இரு தரப்பு வக்கில்களின் முன்னிலையில் நான் மனுதாரரின் மனைவியை விசாரணை செய்திருக்கிறேன். இந்தக் குடும்பப் பிரிவினை அதிக மதப்பற்றினால் ஏற்பட்டிருக்கின்றதென்பது தெளிவாகின்றது. கணவன் அஹ்மதிய பிரிவைச் சேர்ந்தவர்; மனைவியோ ஸுன்

னத் வல்ஜமாஅத்தைச் சேர்ந்தவர். தன் மதஸ்தர்கள் குறை கூறுவதைக் கண்டே மனைவி தன் கணவனிடமிருந்து பிரிந்து வாழத் தீர்மானித்திருப்பதாகத் தோன்றுகிறது. இந்தவழக்கு சம்பந்தமாகச் சமர்ப்பிக்கப்பட்ட கடிதங்கள், மனைவி தன் கணவன்பால் அதிக அன்பு கொண்டிருப்பதாகவும் அவருடன் வசிக்க விரும்புவதாகவும், ஆனால் சகல மதஸ்தர்களின் வெறுப்புக்கும் தாய்வீட்டுச் சுற்றத்தார்கள் அனுதரவு செய்து விடுவார்களே என்பதற்கும், இஸ்லாம் மார்க்கக் கட்டளைகட்கும் பயந்து அவர் அவ்விதம் செய்யத் துணியவில்லை யென்றும் தெரிகிறது. மனைவியின் சுற்றத்தினரும், ஸுன்னத்வல்ஜமாஅத் எல்லா முஸ்லிம்களும் அஹ்மதியப்பிரிவினர்களை அதிகமாக வெறுக்கின்றனர். இது உண்மைபாக இருந்தாலும், இல்லாவிட்டாலும் தன் கணவன் அஹ்மதிய மதத்தைத் தழுவி நிற்கும் வரை, தான் அவரிடம் சென்று வசிக்க முடியாதென்று மனைவி தெளிவாக எம் முன்னர் தெரிவித்து விட்டார். கணவனும் தனது அஹ்மதிய மதத்தை விட்டு விட விரும்பவில்லை.

மனைவிக்கு 22 வயதாகி யிருப்பதாகத் தெரிகிறது. ஒரு குழந்தைக்குத் தாயாகவும் இருக்கிறார். இவ்விதம் வயது வந்த ஸ்திரீ தன் விஷயத்தில் தானே தீர்மானம் செய்து நடந்து கொள்ள சட்டம் இடமளிக்கின்றது. ஆகவே, அவரைக் கணவனிடம் ஒப்புவிக்க எனக்கு அதிகாரம் கிடையாது. இதைப்பற்றி தீர்மானம் செய்யும் உரிமை மனைவியைச் சேர்ந்தது. ஆகவே, நான் மனுதாரரின் மனுவைத் தள்ளுபடி செய்கிறேன்.

குழந்தைக்கு இப்போது தாயிடமிருந்து பிரிக்கத்தகுந்த வயதாக இல்லை. பச்சைக் குழந்தையாக இருப்பதால் அதைத் தாயிடமிருந்து பிரிக்கக்கூடாது. மேலும் முஸ்லிம் சட்டப்படி சிறு குழந்தை தாயின் பராமரிப்பிலேயே இருக்கவேண்டுமென்ற நியதி ஏற்பட்டிருக்கிறது. இந்த வழக்கைக் கவனிக்குமிடத்து இந்தப்பிரிவினை சட்டசம்பந்தமாக ஏற்படுவதாயினும் குழந்தையைப் பராமரிக்கும் உரிமை தாயிடம் அல்லது பாட்டியிடம் இருக்கவேண்டியிருக்கிறது. தான் வாழவிரும்பும் இடம்பற்றி அக்குழந்தையே தீர்மானிக்கும் வயதையடையும்வரை, தகப்பன் ஓர் ஆண்குழந்தையைப் பராமரிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள உரிமை கிடையாது. ஆகவே குழந்தை தாயிடமே இருக்கத் தகுந்தது. செலவு தொகையைப் பற்றி நான் எவ்விதத் தீர்ப்பும் செய்யவில்லை.

(முஸ்லிம் நீதிபதிகள் மார்க்க சம்பந்தமான விஷயங்களில் நடந்து கொள்ளும் தோரணை எத்தன்மையுடையதா யிருக்கிறதென்பதை இதனால் நன்கு தெரிந்து கொள்கிறோம். இதனால் தான் நமது சென்னை ஹைகோர்ட்டுக்கும் ஒரு முஸ்லிம் ஜட்ஜ் நியமிக்கப்படுவது அவசியமானதென்று நாம் பன்முறையும் வற்புறுத்தி வருவதுடன் அவ்வாறு செய்யுமாறு மேன்மை தங்கிய கவர்ன்மெண்டாரையும் வேண்டுகின்றோம். ப-ர்)

மிஸரில் காதியானி இயக்கம் ஒழிந்தது

எவன் சமூகப் பிரிவினையையுண்டுபண்ண விரும்புகின்றானோ அவன் உண்மை இன்னதென்பதைக்கூட கவனியாது தன் மனசாட்சிக்கு விரோதமாய்க் காரியாதிகளைநடத்த முற்பட்டு தாம்செய்வதுதான் உண்மையாகுமென பறைசாற்ற முன்வந்து அதனை மக்களிடையே பரத்த முற்பட்டுவிடுகின்றான். ஆனால் உண்மையான—சன்மார்க்கப் பாதையில் செல்பவர்களோ, எப்பொழுதும் உண்மையுடனேயே நடந்துவருகின்றார்கள். ஆகவே, மிஸர் தேசத்திலுள்ள வீரசிகாமணிகள் இது காலை முன்வந்து, சத்தியத்தைக் கடைப்பிடித்தொழுகி தேசத்துக்கு வழிகாட்டியாய்விளங்குவதை நாம் கண்டு மிகவே மகிழ்வெய்துகின்றோம். சமீபகாலமுன் காதியானிப் பிரசாரர்களிற்சிலர் மிஸர்தேசம் சென்று, தாங்கள்தான் உண்மைச் சத்தியத்தைப் பிரசாரம் செய்யக் கூடியவர்களென்றும், உண்மை ஊழியர்களென்றும், உலகிலுள்ள முஸ்லிம்களில் எவரும் தங்களைப்போல் கட்டுப்பாடுடன் இஸ்லாமியப் பிரசாரஞ் செய்யவில்லையென்றும் பறைசாற்றிவந்ததன்பயனை மிஸர் தேசத்திலுள்ள இள

வாலிபர்களில் அநேகர், இஸ்லாமிய ஊழியத்தின் பெயர்கேட்டமாத்திரத்தில் உண்மை விஷயங்தெரியாது அப்பிரசாரகர்களின் மாய வலையில் சிக்குண்டு அதனைப் பின்பற்றிவந்தார்கள். ஆனால் சிலகாலத்துக்குப்பின் அவர்கள் காதியானிக் கொள்கையின் உண்மை விஷயங்களை நன்கு தெரிந்துகொண்டனராதலின் தங்களுக்கு காதியானி கொள்கையுடனே அதனைப் பிரசாரம் செய்பவர்களுடனே எவ்வித சம்பந்தமுமில்லையென அறிக்கை வெளியிட்டுவிட்டார்கள். அதுசம்பந்தமான முழுவிவரங்களும் மிஸரிலிருந்து வெளிவரும் 'அல்பத்ஹ்' என்னும் பத்திரிகையில் வெளிவந்திருப்பதால் அதனை நேயர்களின் பார்வைக்கு அப்படியே தருகின்றோம். மிஸர்தேச வாலிபர்கள் கூறுவதாவது:—

முஸ்லிம் வாலிபர்களாகிய நாங்கள் சத்திய சன்மார்க்கத்தைப் பரத்த வேண்டுமெனவும், இஸ்லாமிய ஊழியத்தில் ஈடுபட்டுழைக்க வேண்டுமெனவும் அவா கொண்டிருந்தோம். இந்நிலைமையில் காதியானிகளின் சூழ்ச்சியொன்றும் எங்களுக்குத் தெரியாதிருந்தது. ஆனால் அவர்களின் கூற்றுக்களில் சிலதைமட்டும் கேள்விப்பட்டிருந்தோம். காதியானி வகுப்பு இஸ்லாத்தின் ஊழியம்செய்வதற்காகத்தான் ஏற்பாடாயிற்றென்றும் இந்த வகுப்புத்தான் ஒற்றுமையுடன் ஒரேமூச்சாய் இஸ்லாமியப் பிரசாரம் செய்துவருகிறதென்றும் அப்பிரசாரகர்கள் கூறினார்கள். எங்கள் மனதிலும் இஸ்லாமிய சேவைபுரிய வேண்டுமென்னும் அவா மிதமிஞ்சி இருந்துவந்ததால் அவர்களுடன்சேர்ந்து அத்தொண்டில் ஈடுபடலாமெனக்கருதி அவர்களுடன்சேர்ந்து மிஸரில் காதியானி சங்கமொன்று ஸ்தாபிதஞ்செய்து அதற்கு அஹ்மத்ஹம்தீ அபந்தி அவர்களைத் தலைவராகவும் ஏற்பாடுசெய்தோம்.

நாங்கள் அவ்வகுப்பில் சேர்ந்துகொண்ட போதிலும் அவர்களின் சூழ்ச்சிகள் யாதொன்றும் எங்களுக்குத் தெரியாதிருந்தது. எனவே, குலாம் அஹ்மதின் சரித்திரவரலாறுகள் யாதொன்றும் எங்களுக்கு அறவே தெரியாது. அப்பிரசாரர்களும் மிர்ஸாவின் சரித்திரம் எங்களுக்குத் தெரியக்கூடாதென்று வெகுதூரம் மறைத்தே வைத்திருந்தனர். ஒருமனிதன் காதியானிக் கொள்கையைப் பகிஷ்கரித்துஅதை விட்டு தௌபாச் செய்வதற்கு குலாம் அஹ்மதால் இயற்றப்பெற்ற நூல்களைப்பார்ப்பதே போதியனவாயிருப்பதால் அந்நூற்கள் யாருக்குமே தெரியக்கூடாதென மறைத்துவைத்திருந்தனர்.

இதுகாலை யாங்கள், அவருடைய நடப்புகளையும் அவரால் இயற்றப்பெற்ற நூற்களில்கூறப்பட்டிருப்பவைகளையும் நன்குதெரிந்துகொண்டதால் அவருடைய 'குத்பயெ இல்ஹாமிய்யா'வில் கூறப்பட்டிருக்கும் ஒருவிஷயமே அக்கொள்கையைவிட்டு நாங்கள் திரும்புவதற்குப் போதியனவாயிருக்கின்றது. அதில் கூறப்பட்டிருப்பதாவது:—இரண்டாவது அனுப்பப்பட்டது (மிர்ஸாவின் தோன்றுதலானது) முதலில் அனுப்பப்பட்டதை (முஹம்மது (ஸல்.) அவர்களின் தோன்றுதலை)விட மேலானதாகும் என்பதே. இதுவன்றி மிர்ஸாவின் சரித்திரசம்பந்தமாய், முஹம்மதீபேகத்தை விவாகம் செய்துகொள்ள முயற்சிசெய்தகாலை அவர் செய்த சூழ்ச்சியே போதியதாகயிருக்கின்றது. இவ்விஷயங்களையெல்லாம் நாங்கள் தக்கவிதமாய்த் தெரிந்துகொண்டதால், காதியானிவகுப்பில்சேர்ந்து அவர்களுடன் பைஅத்துச் செய்தது பெரும்வழிகேடென்பதாகவும் குலாம் அஹ்மத் காதியானி சம்பந்தப்பட்ட விஷயங்களிலிருந்து தௌபாச்செய்து வெளிவர வேண்டியது அவசியமென்பதாயும் நன்கு தெரிந்துகொண்டோம். மேலும் குலாம் அஹ்மதைப் பின்பற்றியவர்கள் முஸ்லிம்களை வழிகேட்டின்பக்கல் அழைத்து வருவதாலும், குலாம் அஹ்மது தமது வார்த்தைகளை குர்ஆன் ஷரீபின் திருவாக்கியங்களைவிட மேலாகக் கருதுவதாலும் காதியானி மதம் இதர நபிமார்களுடைய மார்க்கத்தைவிடப் பிரகாசமாய் ஜ்வலித்துக்கொண்டிருக்கிறதென அன்னோர் கூறிக்கொண்டிருப்பதாலும் அதன் வழிகேட்டை நன்குதெரிந்துகொண்டோம். ஆகவே அவர்களுடன் நாங்கள் பைஅத் (அநுதிமானம்) செய்ததை, நரகத்தைக் கிரயம்கொடுத்து வாங்கியதாகக் கருதுகின்றபடியால நாங்கள் அக்கெட்ட கொள்கையைவிட்டு தௌபாச் செய்து அல்லாஹ் ரசூலின் கட்டளையைச் சிரமேற்கொள்ள வேண்டுமென்பதையுணர்ந்து அவ்வாறுசெய்ததை உலகமக்களுக்கு அறிவித்துவிட விரும்புகின்றோம். இங்ஙனம்,

அஹ்மத்ஹம்தீ (மிஸர் அஹ்மதிய்யா சங்கத் தலைவர்) அலிய்யபாஜீல், அஸ்ஸெய்யித் அப்துல் மஜீது (ஜமா அத்த அஹ்மதிய்யா காரியதரிசி), ஹஸன் அஹ்மத் அப்துஸ்ஸலாம், அஹ்மத்

அல்துஸ்ஸலாம் (மெகானிகல் இன்ஜனீர்), அப்துஸ்ஸலாம் அஹ்மத், செய்யத் அப்துல் ஹமீது (முத்ரிகாபிரசுராலய சொந்தக்காரர்கள்)

[மிஸர் வாலிபர்களின் இத்தீர மார்க்க பக்தியை நாம் மிக மிகப் பாராட்டுகின்றோம். காதியானி முஹம்மதலியால் வெளியிடப்பட்ட ஹோலி குர்ஆனில் பல சன்மார்க்க முரண்களிலிருப்பதைக்கண்ட மிஸர்வாசிகள், சில நாளைக்குமுன் அந்த ஆங்கில மொழி பெயர்ப்பு மிஸரின் எல்லைக்குள் வரலாகாதென தீர்மானித்து அதனை பஹிஷ்கரித்து உலகத்தில் கீற்று பெற்று விளங்கினர்கள். இதுபொழுதும் அங்குள்ள வாலிப வீரசிரோன்மணிகள் முன் வந்து வழிகெட்ட காதியானிக் கொள்கையை ஒழிக்க முன் வந்திருப்பதை நாம் கண்டு மிகமிக மகிழ்வெய்துவதுடன் அன்னவர்களின் முயற்சி பூர்ணஜெயமடைந்து மிஸர் தேசத்திலிருந்தே அக்கொள்கை ஒழிக்கப்பட்டுப் போகுமென்று பூர்ண நம்பிக்கை கொள்கிறோம். ஆனல் நமது தென்னாட்டிலுள்ள வாலிபர்களிற் சிலர்மட்டும் இதுவரை காதியானிக் கொள்கைகளின் கெடுதியைத் தெரிந்து கொண்டும் அதைவிட்டுத் தௌபாச்செய்து வெளிவராமலிருப்பதற்கு மிக மிக வருந்துகின்றோம். அதிலும் அத்துர்கொள்கை தான் சரியான இஸ்லாமியப் பிரசாரமென்று பறைசாற்றப்படுவதற்கு மிகுதம் வருந்துகின்றோம். ஆகவே, நமது தென்னாட்டு வாலிபர்கள் சற்றுகண்விழித்து உண்மையைத்தெரிந்துகொண்டு தீயகொள்கையும் அதனைத் தாங்கிப் புரியப் படும்பிரசாரமும் ஒழிந்துபோவதற்குத் தக்கன செய்ய இடுப்புக்கட்டிக்கொண்டு முன்வரும் காலமே நமதுநாடு ஜெயம்பெறுவதற்குள்ள நந்நாளாகும். அதுவே நாமனைவரும் ஒற்றுமையாய்த் திகழ்வதற்குள்ள நற்காலமுமாகும் என்பதை அன்பர்களுக்கு அறிவித்துக் கொள்கிறோம்.—பா.]

காதியான் கலீபாவும் மிஸ் ரோபோ என்பவளும்

நமது தேசப்பத்திரிகைகளி லனேகவற்றில், மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் சாஹிப்,(தற்கால காதியானி வகுப்புத்தலைவர்)மிஸ்ரோபோ இவர்கள் சம்பந்தமான நாவலொன்று பிரசுரமாயிருக்கின்றது. அதன் சரித்திரம் வருமாறு:—

லாகூரிலுள்ள பிரக்யாதிபெற்ற 'ஸிஸல்' என்னும் ஐரோப்பியவிடுதியில் அழகு சௌந்தரியமுடைய மிஸ்ரோபோ என்னும் பெயருடைய ஓர் இள நங்கை வேலை செய்துகொண்டிருந்தாள். கலீபாசாஹிப் காஷ்மீர் கமிட்டியில் ஊழியம் புரிவதற்காக அடிக்கடி லாகூர்வருங்காலை அந்த விடுதியில் தங்கிக்கொண்டு ப்லருக்கும் சாப்பாடு கொடுத்துக்கொண்டிருந்தார். இந்நிலைமையில் மார்ச்சு 1-ந் தேதி அவ்விடுதியில் கூத்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதற்குத் தேவையான சாமான்களெல்லாம் அந்த மிஸ் ரோபோவின் அறையிலிருந்ததால் அந்த நேரத்தில் அவளைத் தேடிப்பார்த்ததில் விடுதியைவிட்டு வெளிச்சென்று விட்டதாகத் தெரியவந்தது. கடைசியாகத் தீரவிசாரணை செய்துபார்த்ததில், சில நாட்களாகவே காதியானி கலீபாவிடமிருந்து அவளிடம் தூது வந்து கொண்டிருந்ததாகவும், அன்றையதினம் கலீபாவே இரு மோட்டார்களுடன் அங்குவந்து அவளுடன் வெகுநேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு அவளைத் தம் மோட்டாரில் கூட அமர்த்திச் சென்றதாகவும் தெரியவந்தது. இதனைத் தெரிந்துகொண்ட அவ்விடுதியின் சொந்தக்காரர் வருத்தமுற்று, அவள் வெளியில் சென்றுவிட்டதால் தமக்குப் பெரும் நஷ்ட மேற்பட்டுவிட்டதாகவும் அதனை தாம் ஒருக்காலும் மன்னிக்க முடியாதென்றும் பத்திரிகைகளில் விளம்பரம் செய்துவிட்டார். இதனுல் பல பத்திரிகைகளும் கொட்டை எழுத்துக்களில் அதனைப் பிரசுரித்து கூக்குரலிட முற்பட்டது. கலீபா காதியானிக்கு ஏற்கனவே 3, 4 பெண்சாதிகளிருக்க மிஸ் ரோபா மறைந்போன இரகசியம் வெகு சீக்கிரம் பரவிவிட்டது. பின்னர் மிஸ் ரோபோ என்பாள் மார்ச்சு 3-ந்வ அந்த விடுதிக்குத் திரும்பிவந்து கலீபா காதியானி அவர்கள் தமக்கு சாப்பாடு இடவசதி முதலிய சகல சௌகரியங்களும் செய்து கொடுப்பதுடன் மாதமொன்றுக்கு ரூ. 80 சம்பளம் கொடுப்பதாயும், பிள்ளைகளைச்சீர்திருத்திவரும்படியும்செய்திருக்கிறார் எனக் கூறினள். அதுகாலை அவளுக்கு அந்த விடுதியில் மாதச் சம்பளம் ரூ. 30 கிடைத்துவந்தது. இவ்வாறு கூறிய மிஸ் ரோபா தன் அறையைத் திறந்து சாமான்களை எல்லாம் எடுத்துக்கொண்டு வெளியில் சென்றுவிட்டாள். இதுவிஷயம் தேசத்தின் பற்பல பத்திரிகைகளிலும் பிரசுரமாயிருக்கின்றன. எவர்கள் உலகமுழுதையும் சீர்திருத்தம்செய்வதாக பறைசாற்றிவருகின்றார்களோ அவர்களின் தலைவருடைய நடவடிக்கை எவவாறிருக்கிறதென்பதை நேயர்கள் ஊன்றி கவனிக்கக் கட

வார்களாக! அவர்களுடைய குழந்தைகளை சீர் திருத்துவதற்கு ஓர் விடுதியில் வேலை பார்த்து வருபவள் தான்தேவையாகயிருக்கிறதுபோலும் அதிலும் 30 ரூபாய் சம்பளகாரிக்கு ஒரே அடியாய் 80 ரூபாய் எதற்காக் கொடுக்கப்படுகிறது? இதன் இரகசியம் யாதாகுமென்பது நம்முஸ்லிம் நேயர்களுக்கு மறைந்த விஷயமல்ல. இதனை நேயர்கள் நன்கு சிந்தித்துப் பார்ப்பார்களாக.

சமூகக் கொடுமை

முஸ்லிம்களின் உள்ளத்தின் கொதிப்பு

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாவின் திருத்தூதராகிய நமது நபிகள் நாயகம் முஹம்மது (ஸல்.) அலைஹி வஸல்லம் அவர்களின் ஜீவிய சரித்திரத்தையும் அற்புதமென்னும் நற்குணங்களையும், சில சித்திரரூப உருவப் படங்களையும், "கேசரி" சென்ற 4-3-34 ஞாயிற்றுக்கிழமை பத்திரிக்கையில் செந்தமிழ் நாகரிக முறையில் பாசாங்கு காட்டிப்பிரசுரித்து எழுதியிருக்கும் வரிகள் ஒவ்வொன்றும் முஸ்லிம்களின் உள்ளத்தின் துண்டுகளைப் பொடிப்பொடியாய் நொறுக்குகின்றது. புத்துக்கள் வசிக்கும் கரையானை உயிர்வதைசெய்ய வந்த சர்ப்பம்போல் விஷங்கொண்டுயெழுதிவிட்டு, 5-3-34 திங்கட்கிழமை பத்திரிகைல்யில் "ஊமைபன் சொன்னன் செவிடன்கேட்டான்" என்ற பழமொழிபோல்,மேல்நாட்டு பத்திரிகையைப் பார்த்துப் பிரிசுரித்தேனென்று முஸ்லிம்களுக்கு நல்வழி காட்டும் நண்பரைப்போல் கூறியது, ஆடு நனைகிறதென்று ஓனாய் அழுகிறதென்றுகூறும் பாவனையைப்போலிருக்கின்றது.

ஒரு மதஸ்தர் அன்னிய மதத்தை நன்குணராதபடி ஆங்காரங்கொண்டு எழுதின பேனக்கோலானது 35 கோடி முஸ்லிம்களின உள்ளத்திலும் பசுமரத்தில் அரைந்த ஆணிபோல் பதிந்திருக்கிறது. அன்றியும் சன்மார்க்கத்துக்கும்நமது ஏகரக்ஷகனைகடவுளுக்கும்பொருத்தமற்ற கட்டுரைகளை வெளியிடுவது விபரீதமல்லவா? நீதிநூல் கல்லாதவர், விதித்தனம் செய்யாதவர், பழி நோக்காதவர், பகைவர்க்கிழியவராவார். "தீயாரைக்காண்பதுவும் தீதே, திருவற்ற தீயார் சொற்கேட்பதுவும் தீதே, தீயார் குணங்களுரைப்பதுவும் தீதே,யவரோடிணங்கியிருப்பதுவும் தீது." "கல்லா தொருவன் குலநலம் பேசுதல் நெல்லினுட் பிறந்த பதராகுமே." "அறிவோர்க்கழகு கற்றுணர்ந்தடங்கல், அறிவோர்க்கழகு வருமையிற் செம்மை." நீண்டகாலமாய் பசியால் வருந்திய சர்ப்பம் எலியென்று மூஞ்சுறைப் பிடித்துக் கொண்டு கவலையில் மூழ்கின பாவனைபோல் (கேசரி) சன்மார்க்கத்தில் தலையிட்டு செய்த வேலை பெரும் இடைகூறுன வேலையில் மூழ்கும்படி நேர்ந்துவிட்டது.

போலி பத்திராதிபர்கள் இதற்குமுன் முஸ்லிம்களின் மார்க்க பற்றுதலை சரிவர உணராமல் கூறிவிட்டு, கூண்டில் அகப்பட்ட எலியைப் போல் மூலைமூலையாய் முட்டித்திரிந்தது, (கேசரிக்கு) ஞாபகமில்லையா? "ஆய்ந்து ஆராய்ந்து பாராத காரியம் தான் சாகக்கடவது" என்ற பழமொழி போலாகிவிட்டது.

"பியர்ஸன்ஸ் வீக்லி" பறிமுதல்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப்பற்றி இழிவாக எழுதியதாக கிளர்ச்சி.

லாகூர் மார்ச் 8.

லண்டனில் பிரசுரமாகும் "பியர்ஸன்ஸ் வீக்லி" என்ற ஆங்கில வாரப்பத்திரிகையின் பெப்ரவரி மாதம் 10-ந் திகதி வெளியீட்டின் 14, 15, 17-வது பக்கங்களில் டபிள்யூ. ஜே. மார்க்கின் என்பவர் "முஹம்மது அல்லாவின் தீர்க்கதரிசி" என்ற தலைப்புடன் எழுதியுள்ள வியாசமும்; ஜே. பி. டேன்ஸ் என்பவர் அக்கட்டுரை சம்பந்தமாக வரைந்துள்ளபடங்களும் பிரசுரமாயிருக்கின்றன.

அந்த வியாசத்தில் இ. பி. கோ. 153-வது செக்ஷன்படி குற்றமாகும் சமாச்சாரம் அடங்கியிருக்கிறதென்ற காரணத்தை முன்னிட்டு "பியர்ஸன்ஸ் வீக்லி" பத்திரிகையின் பெப்ரவரிமாதம் 10-ந் திகதி வெளியீட்டின் ஒவ்வொரு பிரதியையும்,அக் கட்டுரையோ அல்லது அதன் மொழி பெயர்ப்போ அடங்கிய பத்திரிகைகளையும் இதர சகலவிதமான தஸ்தாவேஜிகளையும் பறிமுதல் செய்யும்படி பாஞ்சால சர்க்கார் உத்தரவு பிறப்பித்துள்ளனர். (தினகரன்

N. B.—சகோதரர்காள் சகோதரிகாள்! இவ்வாறான கஷ்டம் இலங்கை இந்தியா முஸ்லிம்களுக்கு தினேதினே ஏற்பட்டுக்கொண்டே வருகிறது. நாம் வெகுவாய் கட்டுண்டே கிடப்பதால் அதற்கு பரிகாரத்தைத் தேடிக்கொள்ள அரசாங்கத்தாரிடம் கூறவேண்டிய திருக்கிறது. தவிர இவ்வாறான விஷயங்களில் முஸ்லிம்கள் கிளர்ச்சிசெய்யவேண்டியது அவர்களில் கடமையாகும். நம் முஸ்லிம் சமூகம் இது விஷயமாய் ஒரே மூச்சாக பிரயாசையோடு வேலைசெய்து வருமாயின் கூடிய சீக்கிரம் கோரிய காரியம் கூடிவரும் என்பது திண்ணம். அன்னாளையே மிக மிக எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறோம். அவ்வாறு ஏற்படும் நாள்தான் முஸ்லிம்களின் மார்க்க பாதுகாப்புக்குள்ள நன்னாளாகும்.

இங்ஙனம்,
முஸ்லிம்களின் ஊழியர்கள்
ஸ்ரீவைகுண்டம் சே. நூர்முகம்மது சாகிபு,
குரும்பூர் எம். எஸ். அப்பாஸ்
ஷை கே. அஹ்மது முஹிய்யித்தீன்
கண்டி மீ. காசீம், அ. காசீம்.
187-188, கொழும்பு வீதி, கண்டி.

இஸ்லாத்தின் ஜோதி

பௌத்த குடும்பத்தினர் இஸ்லாத்தைத் தழுவினர்

நத்வதுஷ்ஷாதுலிய்யாவின் நனிபெருஞ் சேவை

கொழும்பு கும்பனித்தெரு, அந்நதுவதுஷ்ஷாதுலிய்யா—ஸாவிய்யதுல் கைறிய்யா" சங்கத்தாரிடத்தில் பௌத்த சமயத்தைச் சார்ந்த ஜேமிஸ் என்னும் 22 வயதுடைய ஓர் இளஞ்சிங்கள வாலிபர் வந்து, தாம் சுயமாக இஸ்லாமில் சேர்ந்துகொள்ள விரும்புவதாயும், தம்மை பரிசுத்ததீனுல் இஸ்லாத்தில் சேர்த்துக்கொள்ளும்படியாயும் கேட்டுக்கொண்டதின் பேரில் மேற்குறித்த சங்கத்தாரால், அறபியில் அதிக பாண்டித்தியம் அடைந்தவரும், கல்விகேள்விகளில் சிறந்தவரும், ஷை சபையின் சபாநாயகரும் அடியேனின் உஸ்தாதுவுமாகிய கண்ணியம்வாய்ந்த ஆலி ஜனப், செ. அ. ஸயீத் ஆலிம் ஸாஹிப் அவர்களைக்கொண்டு அன்னவருக்கு சென்ற 27-5-33-ல் கலிமா சொல்லிக்கொடுக்கப்பட்டு, முஹம்மது ஜைனுத்தீன் என பெயருமிட்டு, பரிசுத்த தீனுல் இஸ்லாத்தில் சேர்த்துக்கொண்ட விஷயம் யாவரும் நன்கறிந்ததே. மேலும் இந்நவ் முஸ்லிம் இச்சொற்ப நாளைக்குள் நமது வேத ஆதிநூலாகிய பரிசுத்த குர்ஆன் ஷரீபை நன்கு வாசிக்கத் தெரிந்துகொண்டதுடன் நஹ்வும் பயின்று வருவதும், தொழுகைமுதலிய நல்வணக்கங்களை செவ்வனே செய்துகொண்டு வருவதும், ஈங்கு வதியும் சகோதர முஸ்லிம்களிடத்தில் நற்புகழ் அடைந்திருப்பதும் மிகமிக போற்றத்தக்கனவாம்.

நிற்க இதுபோழ்து எமதுசகோதர இக்வானாகிய இந்நவ் முஸ்லிமின் தாயும் சகோதர சகோதரிகளும் மனப் பூர்வமாய் இஸ்லாத்தை தழுவிக் கொள்ள விரும்புவதாய் தெரியப்படுத்தியதின்மேல் ஷை சங்கத்தாரால் சென்ற வெள்ளியிரவு 15-3-34-ல் இன்னவர்களுக்கும் கனம் ஸயீத் ஆலிம் அவர்களைக் கொண்டு கலிமாச் சொல்லி கொடுக்கப்பட்டு, முறையே பின்வரும் நாமகரணங்களுமிட்டு நம் பரிசுத்ததீனுல் இஸ்லாத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டது.

நாமங்களாவன.—(மேலே குறிப்பிடப்பட்டவருள்பட)

பழையபெயர்	புதியபெயர்	வயது
ஜேமிஸ்	முஹம்மது ஜைனுத்தீன்	22
என்லோஹாமி	கதீஜா உம்மா	42
பியஸிலின்	மறியம் பீபி	11
பியதாஸ	முஹம்மது ஷம்ஸுத்தீன்	9
லீலாவதி	பாத்திமாஉம்மா	3

அவ்வமயம் கனந்தங்கிய ஸயீத் ஆலிம் ஸாஹிப் அவர்கள் இஸ்லாத்தின் சிறப்பையும் அதில் ஒழுகிக் கொள்ளவேண்டிய நல்முறைகளையும் பற்றி கேட்போர் மனம் கசிந்துருகுமாறு மிக உறுக்கத்துடன் இனிமையானதோர் ஹிதோப தேசஞ்செய்தார்கள்.

ஆகவே, இப்புனித கைங்கரியத்துக்குப் பொருளுதவி செய்த புண்ணியவான்களுக்கு சங்கத்தின் சார்பாக எங்களது மனமார்ந்த வந்தனத்தை சமர்ப்பித்துக்கொள்வதுடன், எல்லாம் வல்ல இறைவனாகிய அல்லாஹு ஜல்ல ஷானுஹு வதஆலா இந்நவ் முஸ்லிம்களின் ஈமானை ஸ்திரப்படுத்தி நல்லருள் பாலிக்கும்படியாய் இறைஞ்சுகிறோமென காரியதரிசி தெரிவிப்பதாக நண்பன் ப. முஹம்மது இப்ராஹீம் எழுதுகிறார்.

செய்தித் திரள்

யுத்த முஸ்தீப்பு

ஐரோப்பிய வல்லரசுகளெல்லாம் யுத்தத்திற்காகவுள்ள பலவாறான சாமான்களைத் தயார் செய்வதில் ஈடுபட்டிருக்கின்றன. பிரிட்டிஷார், அமெரிக்கர், ரஷ்யர் போலொற்றவர்கள் பட்டாளத்தின் செலவிற்காக ஏராளமான தொகையை ஒதுக்கிவைத்திருக்கின்றனர். ரஷ்யர்கள் சைனா, ஜப்பான் இவைகளின் எல்லைப்புறத்தில் 3-லட்சம் படைகளை அனுப்பிவைக்க அனுமதியளித்திருப்பதாக ஐரோப்பியப் பத்திரிகைகள் கூறுகின்றன. இவைகளின்காரணமாய் உலகத்தில் பெரியதோர் யுத்தம் நிகழ்பெறுமென்று யாவரும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றார்கள்.

காஷ்மீர் சம்பவம்

இதுகாலை அங்குள்ள முஸ்லிம்கள்மீது அளவற்ற கொடூரங்கள் செய்யப்பட்டு வருகின்றன. அநேக முஸ்லிம்கள் சிறைசெய்யப்பட்டிருக்கின்றார்கள். எத்தனையோ கியாதிவாய்ந்தோர் சமஸ்தானத்தினின்று வெளியேற்றப்பட் டிருக்கின்றார்கள். ஆண் பெண் இருபாலார்க்கும் தண்டனை விதிக்கப்பட்டுவந்தும் முஸ்லிம்கள் அக்கஷ்டங்களையெல்லாம் சகித்துக்கொண்டு உறுதியுடனிருக்கின்றார்கள். இக்கஷ்டங்களை நிவர்த்தி செய்துகொள்வதற்காக முஸ்லிம்கள் எத்தனையோ கூட்டங்கள் நடத்தி அதன்மூலம் பரிகாரத்துக்குள்ள வழியைத் தேடியிருக்கின்றனர். அஹ்ரார் சபையினர் காஷ்மீர் சம்பவத்தில் கலந்துகொள்ளத்தயாராயிருக்கின்றார்கள்.

சேர்க்கை ஹிருதயம்

ரஷிய வைத்திய நிபுணரொருவர், செயற்கையான ஹிருதயமொன்றை கண்டுபிடித்திருக்கிறார். உயிர்ப்பிராணிகளிலுள்ள ஹிருதயத்துக்கு ஏதாகிலும் கோளாறுகள் ஏற்பட்டு அது கெட்டுப்போகுமாயின் அதுகாலை இந்த செயற்கை ஹிருதயத்தை அந்த இடத்தில் வைப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கின்றார். இதனைப் பரீட்சிப்பதற்காக அந்த வைத்திய நிபுணர் ஒரு நாயைப்பிடித்து அதன் ஹிருதயத்தை எடுத்துவிட்டு செயற்கை ஹிருதயத்தை அந்த இடத்தில் வைத்துவிட்டார். அந்த நாய் அநேக மாதமாய் உயிருடனிருந்து வருகிறதாக அறிவிக்கப்படுகிறது.

வேதங்களில் மாறுதல்

அமெரிக்காவிலுள்ள இரு கலாஞான வல்லுநர்கள் ஒன்றுகூடி இன்ஜீல், தவ்றாத் இவ்விரு வேதங்களிலும் பொறுக்கியெடுத்து, 2 ஆயிரம் பக்கங்கள்கொண்டிருந்த வேதத்தை 546 பக்கங்களில் சுருக்கிப் பிரசுரித்திருக்கின்றார்கள். இதற்கு அன்னோர்கூறும் காரணமாவது:— 2 ஆயிரம் பக்கங்கள்கொண்ட முழு பைபிளானது பெருங்கஷ்டமானதாகவும் மனோநிம்மதியளிக்காததாயுமிருந்ததால் அதிலுள்ள அனுஷ்டான கஷ்டமானவைகளையெல்லாம் தள்ளிவிட்டுப் பிரசுரித்திருக்கிறோமென்பதே. இவ்வாறான மாறுதலுக்குப்பின்னும் அந்த பைபிளை அல்லாஹ்வின் வேதமென்று கூறுவது தகுமா என்பதுதான் நமது கேள்வி.

ரஷியா ஜப்பானின் வல்லமை

ரஷியாவினிடம் 4யுத்தக்கப்பல்களும்,4குரூய்ஸரும், 24 நாசகாரிக் கப்பல்களும்,8 நீர்மூழ்கிக் கப்பல்களும், ஜப்பானிடம் 9 யுத்தக்கப்பல்களும்,38 குரூய்ஸர்களும், 10 நாசகாரிக் கப்பல்களும், 62 நீர்மூழ்கிக் கப்பல்களும், 584 ஆகாயவிமானங்கள் வேலைசெய்துகொண்டும், 254 பத்திரப்படுத்தி வைக்கப்பட்டுமிருப்பதுடன், 300 தயார்செய்யப்பட்டும் வருகிறது. ரஷியப்படைகள் 4 லட்சத்து 30 ஆயிரமிருப்பதுடன், 1 கோடி 5 லக்ஷத்து 80 ஆயிரம் பேர் பழக்கப்பட்டு வருகின்றார்கள். ஜப்பா

னியரில் 2½ லட்சமிருப்பதுடன் 19,52,000 பழக்கப்பட்டும் வருகின்றூர்கள்.

கிழவன் வாலிபனுய்விட்டான்

அப்கனிஸ்தான் ஓர் ஆச்சரியமான பூமியாயிருக்கின்றது. அங்குள்ள 'இஸ்லாஹ காபுல்' என்னும் பத்திரிகை வரைவதாவது:—எங்கள் விசேஷ நிருபராகிய முஹம்மத் அப்ஜல்கான் என்பார் பின்வருமாறு தெரிவித்திருக்கிறூர். அதாவது, 'அலிய்ய ஆபாத்' என்னும் சிற்றூரில் ஓர் அதிஆச்சரியமான மனிதரிருக்கின்றூர். அவர் பெயர் ஹாஜீ ஷாத்வலீ என்பதாகும். அவருக்கு 120 வயதாயிருக்கின்றது. நெறுங்கிய குஞ்சுதாடியுமிருக்கின்றது. அவர் சுகஜீவியாயிருப்பதைக்கண்டு யாவரும் ஆச்சரியமடைகின்றூர்கள். புஷ்டியான திரேகத்தையுடையவராய்த் திகழ்கின்றூர். இவை யாவற்றையும்விட பேராச்சரியம் யாதெனில், ஹாஜி சாகிப் அவர்களுக்கு சமீபத்தில் ஓர் ஆண் மகவு ஜனித்திருப்பதேயாகும். அக்குழந்தை பிறந்ததின் சந்தோஷமாகிறது ஹாஜி சாஹிப் அவர்களின் வாலிபத்தில் புத்துணர்ச்சி அளித்திருக்கின்றது.

வானத்திலிருந்து முத்துச்சிப்பி மழை

சில நாளைக்குமுன் திஹார் சமஸ்தானத்தில் அதிஆச்சரியமான மழையொன்று பெய்தது. பலமாக மழை பெய்துகொண்டிருப்பதற்கிடையே ஆயிரக்கணக்கான முத்துச் சிப்பிகள் கீழே விழுந்தன. சற்றுநேரம் வரை விழுந்து மழையும் நின்றுபோனவுடன் பட்டிக்காட்டு வாசிகளிற் சிலர், சில சிப்பிகளை எடுத்துக்கொண்டு பரிசோதனைக்காக போலீஸ் ஆபீசுக்குச் சென்றூர்கள். அதனைப் பரிசோதித்துப் பார்த்ததில் பற்பல முத்துகள் அகப்பட்டன. அதிலுள்ள நடுத்தரமான ஒருமுத்தின் கிரயம் 100 ரூபாய் மதிப்பிடப்படுகின்றது. இவ்வாறே சில காலத்துக்குமுன் ஹைதராபாத்திலும் ஓர் சம்பவம் நிகழ்பெற்றிருக்கின்றது.

30 வருஷத்தில் 29 பிள்ளை

வியன்னுவிலுள்ள வைத்தியசாலையில் ஒரு மாதுக்கு 29-வது குழந்தை பிறந்திருக்கிறது. அவளுக்கு வயது 45 ஆயிருப்பதுடன் அக்குழந்தைகள் யாவும் உயிருடனிருக்கின்றன.

லாகூரில் "ஈதுல் அல்ஹா"

லாகூரிலுள்ள பாத்ஷாஹி ஜாமிஆ மஸ்ஜிதில் ஈதுல் அல்ஹாப் பெருநாள் தொழுகைக்காக பாஞ்சால கவர்னர் ஸர் சிகந்தர் ஹயாத் கான் விஜயஞ் செய்திருந்தனர். கவர்னரைச் சுற்றி ஆயிரக் கணக்கான முஸ்லிம்கள் ஆவலுடன் குழ்ந்துகொண்டனர். பிரிட்டிஷ் ஆட்சியில் முதன்முறையாக ஒரு முஸ்லிம் கவர்னர் மஸ்ஜிதிற்கு ஈதுல் அல்ஹாப் பெருநாள் தொழுகைக்கு விஜயஞ்செய்தது இதுதான். மஸ்ஜிதிக்குப் போகும் வழி நெடுக ஜமக்காளம் விரிக்கப்பட்டிருந்தது. மஸ்துக்கு கவர்னர் வருகிறூர் என்பதைக் கேட்ட முஸ்லிம்கள் ஆயிரக் கணக்காய் ஆங்கு குழுமியிருந்தனர். தொழுகை முடிவில் கவர்னர் ஒலி பரப்பும் கருவி மூலம் தமது நன்றியறிதலான வந்தனத்தைக் கூறினர். கூறி முடித்தவுடன் ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் கவர்னருடன் முஸாபஹாச் செய்து கைகுலுக்குவதற்கும், சகோதர முஸ்லிம் என்ற முறையில் கவர்னரைத் தழுவுவதற்கும், ஒருவரை ஒருவர் நெருக்கிக்கொண்டு முன்வந்தனர். உடனே கவர்னரைச் சுற்றி போலீஸ் சேவகர்கள் காவலாக வளைந்துகொண்டனர். கூட்டம் வரவர அதிகரிக்கவே, போலீஸ்காரர்களால் சமாளிக்க முடியவில்லை. போலீஸ் சூப்பரிண்டு கான்சாகிப் மிர்ஸா ஸிராஜுத்தீன் ஜன நெருக்கத்தால் கீழே விழுந்தாரெனினும் சமாளித்து எழுந்துகொண்டார். பிறகு பந்தோபஸ்தாக கவர்னர் மோட்டாரில் ஏறிச் சென்றூர்.

அப்கன் முன்னேற்றம்

அப்கனிஸ்தானத்தின் பொருளாதார முன்னேற்றத்தை யொட்டி, அப்கன் சர்க்கார் பல காரியங்கள் செய்துவருகின்றது. அப்கனிஸ்தானத்தில் மோட்டார்களை வரவழைக்கும் தனி உரிமை நாலு வருஷங்களுக்கு அஷமி வியாபார கம்பெனிக்குக் கொடுத்திருக்கிறூர்கள். இந்தக் கம்பெனியைத் தவிர அப்கனிஸ்தானத்திலுள்ள அப்கனியராவது, இதரர்களாவது மோட்டார் வரவழைக்கக்கூடாது.

அப்கனிஸ்தானத்திலுள்ள முந்திரிப்பருப்பு, உலர்ந்த பழவர்க்கங்கள் முதலியவைகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் உரிமை புஷ்டன் கம்பெனிக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

பட்டுப் பூச்சிகளை வளர்ப்பதற்கு பிரத்தியேகமான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

உள்நாட்டுக் கைத்தொழிலை விருத்தி செய்வான்வேண்டி, வெளிநாடுகளிலிருந்து பட்டுகள், சரிகைகள், தீப்பெட்டிகள், கம்பளிகள் வருவதை அப்கன் சர்க்கார் தடை செய்திருக்கிறது.

சீன துருக்கிஸ்தானில் கலகம்

துருக்கி ஸ்தானத்திலுள்ள காஷ்கார் பட்டணத்தில் பிரிட்டிஷ் ஸ்தானிகர் காரியலயத்தை துங்கன் என்ற ஜாதியார் தாக்கி சேதப்படுத்தினார்களெனத் தெரிகிறது. காரியாலயத்தின் வெளிப்புறமுள்ள கதவை உடைத்து துங்கன் ஜாதியார் உட்புகுந்தனர். இவர்கள் உட்புகுந்த சமயத்தில் இவர்களைச் சேர்ந்த அந்திஜினி ஜாதியார் மேற்படி காரியலாயத்திற்கு அருகாமையிலுள்ள வெளிகளில் பெரிய பட்டாளம் பவனி செல்வதுபோல் அதிவிமரிசையாகச் சென்று கொண்டிருந்தனர். அந்த அந்திஜினிகளை பிரிட்டிஷ் ஸ்தானீகர் கூட்டங் கூடாதபடி செய்தபோது அந்திஜினிகள் கோபங் கொண்டு பிரிட்டிஷ் ஸ்தானீகரும், உப ஸ்தானீகரும் வீற்றிருக்கும் மாடிமீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். ஸ்தானீகர்கள் காயமில்லாமல் தப்பித்துக்கொண்டனர்.

ஸ்தானீகர் காரியாலயத்துட்புகுந்த துங்கன் ஜாதியார் உள்ளே யிருந்த காசிமலி என்பவனையும், இவனது சகோதரனை நியாஸ் துருக்கி என்பவனையும் கொன்றனர்.

இதற்கிடையில் வெளியே நின்று கொண்டிருந்த சில துங்கன்கள் அந்திஜினிகளைத் தேடிய லையும்போது சிலர் உள் புகுந்து அநேகரைக் கொலை செய்தார்கள். காஷ்காரிலுள்ள ஹிந்துக்கள் ஸ்தானீகர் காரியாலயத்திற் கருகிலுள்ள தோட்டத்திற்குப் போயிருந்தார்கள். இந்தத் தோட்டத்தில் புகுந்த துங்கன் ஜாதியார் ஹிந்துக்களை ஒன்றும் செய்யவில்லை. சிறிது நேரம் அமைதி நிலவியது. இரவு வந்ததும் ஷெ ஜாதியார்கள் ஸ்தானீகர் காரியாலயத்தைதாக்கலாயினர். இதன் பயனாக டாக்டர் ஸ்மிகிட் என்பவரும் அயுப் என்பவரும்பலத்த காயமடைந்தனர். மறுநாட் காலையில் இந்த சம்பவத்தைக்கேட்ட டாக்டர் ஆன்டெர்ஸன் என்பவரும், டாக்டர் ஒஸ்ப்போஸ் என்பவரும் ஸ்தானீகர் காரியாலயத்திற்கு வந்து, காயமடைந்தவர்களுக்கு சிகிட்சை செய்தார்கள். இந்த டாக்டர்கள் திரும்புகையில், மேற்படி ஜாதியார் இவர்களை ஒன்றும் செய்யவில்லை. ஆங்காங்கு அனேகதுருக்கிகள் கொலையுண்டு கிடப்பதையும் இந்த டாக்டர்கள் கண்டனர்.

வெள்ளி ரயில்வண்டி

1906-ம் வருஷத்தில் நார்த்தம்டனிலுள்ள ஒரு கம்பெனி குவாலியர் மகாராஜாவின் யோசனையின்படி ஒரு நூதன புகைவண்டியை சிருஷ்டித்தது. இப்புகைவண்டி முழுவதும் தனி வெள்ளியால் செய்யப்பட்டது. இதற்கு ஏழு தொடர் வண்டிகள் உண்டு. இவ்வேழு வண்டிகளும், இவைகளின் சக்கரங்களும் வெள்ளியால் செய்யப்பட்டவை. ஒவ்வொரு வண்டியிலும் ஒவ்வொரு போஜன பதார்த்தம் வைக்க வசதி செய்யப்பட்டிருக்கிறது.

இப்புகை வண்டியின் முன் பக்கத்தில் மின்சாரக் கருவி ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. இதன் உதவியால் புகை வண்டி மெதுவாகச் செல்லும். போஜன மேஜைமீது வெள்ளித் தண்டவாளங்கள் போடப்பட்டிருக்கின்றன. இத்தண்டவாளங்களின்மீது இப்புகை வண்டி செல்லும்.

போஜன மேஜையைச் சுற்றி உட்கார்ந்திருக்கும் விருந்தாளிக்கு ஏதாவது ஒரு பதார்த்தம் வேண்டுமாயின் புகைவண்டி அவர் சமீபம் வருகையில், அருகிலுள்ள பதார்த்தத் தட்டை எடுத்துக்கொள்ளலாம். இவ்வாறு தட்டு எடுக்கப்பட்டவுடன் புகைவண்டி அவ்விடத்தில் நின்றுவிடும். மறுபடியும் தட்டை புகை வண்டியில் வைத்தால் தான் புகைவண்டி நகரும்.

இப்புகை வண்டியின் பாகங்களெல்லாவற்றையும்சமீபத்தில் மேற்படி கம்பெனியார் கழற்றி தூசுகள் இல்லாமல் துடைத்து பளபளப்பாக்கி இருக்கிறார்கள். "சிந்தியா" என்ற பெரும் மாணிக்கக் கற்கள் இப்புகை வண்டியில் பொறிக்கப்பட்டிருக்கிறது.

குவாலியர் மகாராஜா புதல்விக்கு சமீபத்தில் நடைபெற்ற விவாக வைபவத்திற்காக இப் புகைவண்டி போஜன மேஜையில் முதன்முதலாக உபயோகப்படுத்தப்பட்டது.

மலையாள ஜில்லாவில் "தப்லீக்"

தென் மலையாளமான பொன்னனியில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள மஊனத்துல் இஸ்லாம் சங்கம் மாதம் ரூபா 50 சம்பளத்தில் ஒரு இஸ்லாமிய பிரசாரகரைநியமிக்க தீர்மானம்செய்துள்ளது. தென்னிந்தியாவில் மஊனத்துல் இஸ்லாம் சங்கம் இஷாஅத் வேலையை வெகு திறமையாகவும், தீவிரமாகவும் செய்துவருகிறது. இஸ்லாமியப் பிரசாரகரை நியமிக்காமலே வருஷம் 1-க்கு இதுவரை சராசரியில் 600 பேர்களை பரிசுத்த தீனுல் இஸ்லாத்தில் சேர்க்கும் பாக்கியம் இந்த சங்கத்திற்கு இருந்து வருகிறது. இப்பொழுது பிர்சாரகர் நியமிக்கப்பட்டிருப்பதால்

இந்த சங்கத்தின் ஆதரவில் இன்னும் அநேகர் தீனுல் இஸ்லாத்தைத் தழுவுவார்களென்று எதிர்பார்கப்படுகின்றது. சங்கத்தின் தற்போதைய செல்வ நிலைமையில் ஒரு பிரசாரகரை விட அதிகம் நியமிக்க முடியாமலிருக்கிறது. செல்வநிலைமை சீர்படின் இன்னும் அதிகப் பிரசாரகர்களை நியமிக்க வேண்டுமென்பதே இச் சங்கத்தின் அவாவாகும் என்பதாக ஒரு நிருபர் எழுதுகிறார்.

பினங்கில் தீ விபத்து

இதுவரையிலும் பினங்கு நகரில் இவ்வளவு பெரிய தீவிபத்து ஏற்பட்டதில்லை யெனலாம். ஒரு கடையில் தீ முதலில் பிடித்தது. முன் பாகத்தில் தீப் பிடித்தது. ஜ்வாலை எரியும்போது பின்னுளிருந்தவர்கள் தப்பமுடியாமல்பொறியிலகப்பட்டஎலிகளைப் போலாயினர். மேற்படி கடை சர்ச் ஸ்திரீட் 13-ம் நம்பர் கடையாகும். சிங்கப்பூர் பிங் செங் கம்பெனியின் கிளையாபீஸ் அங்கிருந்தது.

அபாய அறிவிப்புச் செய்து நெருப்பணைக்கும் எஞ்சினும் இரு ஐரோப்பிய ஆபீசரும் சிப்பந்திகளுடன் வந்து சேர்ந்தனர். உள்ளே மனிதர்களிருக்கின்றனரென்று தெரிந்தவுடன் அவர்களைக் காப்பாற்ற பகிரதப் பிரயத்தனம் செய்யப்பட்டது. இரண்டு மூன்று பயர்மென்கள் உள்ளே நுழைய முயன்றும் நெருப்பு ஜ்வாலையும் எரியும் ரப்பரும் இடங்கொடுக்கவில்லை. முடிவாகத் தீ யணைக்கப்பட்டதும் 5 சவங்கள் சுட்டெரிக்கப் பட்டுப்போய் ரப்பர் கட்டைகளைப் போலிருந்தன. கடைசியாக மிஞ்சியது கட்டிடத்தின் சுவர்கள் தான். மொத்தம் 50,000 வெள்ளிக்கு மேற்பட்ட நஷ்ட மேற்பட்டிருக்குமென்று தெரிகிறது.

பஞ்சாப் ஹஜ்ஜூக் கமிட்டி

சர்க்கார் பின்வரும் அறிக்கை யொன்றை வெளியிட்டுள்ளது:—"ஹஜ்ஜூக் கமிட்டியின் சிபார்சுகளின் பேரில் இந்திய சர்க்கார் பாஞ்சாலத்தில் மாகாண ஹஜ்ஜூக் கமிட்டி யொன்றை ஸ்தாபிக்க முடிவு செய்துள்ளது. ஹிஜாஸுக்கு யாத்திரை செய்வோருக்கு சௌகரியங்கள் செய்து கொடுப்பதை கவனிப்பதே அக் கமிட்டியின் வேலையாகும். கமிட்டி யாத்ரீகர்களுக்கு யோசனை கூறுவதோடு உதவியும் செய்யும். அக் கமிட்டியில் 10 அங்கத்தினர்கள் தெரிந்தெடுக்கப்பெற்றவர்கள், 5 பேரை சர்க்கார் நியமனம் செய்வார்கள். அக் கமிட்டியின் ஆயுள் காலம் 3 வருஷமாகும். கமிட்டியின் முதல் கூட்டம் இம்மாதம் 22-ந் தேதி நடைபெறும்."

கால் நடையாகச் செல்லும் ஹாஜி

ஸுல்த்தானுல் முஜாஹிதீன் என்னும் ஜனுப் ஷா ஸுப்ஹான் அஹ்மத் நமது புனிதஸ்தலமாகிய திரு மக்கமா நகருக்கு கால் நடையாக யாத்திரை செய்யப் புறப்பட்டு கான்பூர் வழியாகச் செல்கிறார். ஒவ்வொரு 5 அடிக்கும் தொழுது கொண்டே செல்கிறார். இப்பொழுது இவர் ரவத்பூரில் தங்கியிருக்கிறார். ஜனங்கள் ஏதாவது கொடுத்தால் அதை ஏற்க மறுக்கிறார். எந்த உதவியும் வேண்டாமெனக் கூறுகிறார். போகுமிடங்களில் ஏராளமான முஸ்லிம்கள் விருந்தளிக்கின்றனர். இவர் தம்மிடம் ஒரே ஒரு போர்வை மட்டும் கொண்டு செல்கிறார்.

"ஜனங்கள் அவருக்கு வழியில் வசதிகள் அளிக்க வேண்டுமென" ஜனுப் ஹாபிஸ் ஹிதாயத்ஹுஸேன் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

ஓர் ஹிந்து முஸ்லிமானார்

—கூத்தாநல்லூர்

10-3-34 சன்மார்க்கத் தொண்டர் சபையின் ஆதரவில் ஷையூர் சின்னப்பள்ளி வாசலில் லொஹர் தொழுகைக்குப்பின் திருநெல்வேலியைச் சார்ந்த வானரம்பட்டி கிராமம் ராஹவ நாய்க்கர் குமாரர் ராமசாமி என்ற 27 வயதுடைய ஒருவர் தாம் இஸ்லாமாவதாய் நோக்கங் கொண்டு இச் சபையில் வந்து முறையிட்டார். ஷை சபையார்கள் அன்னாருக்கு, கைலி, தொப்பி, முதலிய உடைகள் கொடுத்து, கனம் ஹாஜி ஐ. மு. முகம்மது இஸ்மாயில் அவர்களால் அளிக்கப்படும் ஷுக்ரிய்யா விருந்திற்கு விஜயந்தந்த, கனம் வேலூர் மௌலானா மௌல்வி ஹாஜி ஜியாவுத்தின் ஹஸ்ரத் அவர்கள், ஷை. இ. பத்திராதியர் மௌலானா மௌல்வி அஹ்மத் ஸயீத் சாஹிப் அவர்கள், ஹிபாஜத்துல் இஸ்லாம் பத்திராதிபர் மௌல்வி A.R. அப்துர் றஹீம் அவர்கள் ஷை சங்க காரியதரிசி மௌல்வி அல்ஹாஜ் ச. அ. முகம்மது அலி சாஹிப் அவர்கள் முன்னிலையில் ஷையாருக்கு ஹஜ்ரத் ஜியாவுத்தீன் சாஹிப் அவர்கள் கலிமா சொல்லிக் கொடுக்கப்பட்டது. பின்பு ஹஜ்ரத் அவர்கள் அன்னாருக்கு ஜியாவுத்தீன் என்று நாமஞ் சூட்டினார்கள்.

208337

"ஹயாத்த மஸீஹ் அலைஹிஸ்ஸலாம்"

ஹஜ்ரத் ஈஸா நபியவர்களின் சரித்திரச் சுருக்கம், நபியவர்கள் விண்ணுக்குயர்த் தப்பட்ட விபரம், இனி அவர்கள் உலகுக்கு வரும் விபரம் ஆகிய இவைகள் குர்ஆன் ஹதீது முதலிய ஆதாரங்களைக்கொண்டு எழுதப்பட்டது. காதியானிகள் ஹஜ்ரத் ஈஸா நபியவர் களைப்பற்றிக் கூறும் கூற்றுகளுக்கு இந்நூல் தக்க மறுப்பாக மிளிர்கின்றது. இந்நூலைப் போலொரு நூல் இதுகாறும் தமிழில் வெளிவந்ததில்லை. காதியானித் தமிழ் புத்தகங்களைப் படித்து வழிவிலகிச் செல்லும் சோதர சோதரிகளின் கண்களை இந்நூல் திறந்துவிடும் என் பதிலையமின்று. முதல் பாகம் 90 பக்கங்களைக்கொண்டது. விலை அணா 7.

இரண்டாம் பாகம் 350 பக்கங்களைக் கொண்டது. விலை ரூ. 1-0-0.

கிறிஸ்தவர்களுக்கோர் வாயாப்பு

கிறிஸ்தவப் பாதிரிகள் இஸ்லாத்தைப்பற்றியும் நபிகள்பிரானவர்களைப்பற்றியும் விடுத்த 14 வினாக்களுக்கு சுன்னத்துவல்ஜமாஅத்து உலமாக்களால் அளிக்கப்பட்ட விடை கள் இதிலடங்கி இருக்கிறது. இந்த நூலைப் படித்துப் பார்ப்பார்களாயின் உண்மை இஸ் லாத்தைத் தெரிந்துகொள்வார்கள் என்பதில் எள்ளத்துணையும் சந்தேகமில்லை. மேலும் லாகூர் அஹ்மதியா பார்ட்டித் தலைவர் முஹம்மது அலி, M. A., LL. B., யால் எழுதப் பட்ட இயேசுவின் இரகசியம் குர்ஆனுக்கும் ஹதீதுகளுக்கும் விரோதமாகயிருப்பதை நன்கு தெரிந்துகொள்வர். சொற்ப காப்பிகளே கைவசமிருக்கின்றன. முந்திக்கொள்ளுங் கள். விலை அணா 6 தான்.

சுன்னத்ஜமாஅத்தின் விஸ்வாசம்

சுன்னத்து வல் ஜமாஅத்து என்றால் என்ன என்று வினவும் காதியானிகளுக்கு இது ஒரு பதிலாகும். இது சுன்னத்துவல் ஜமாஅத்து முஸ்லிம்கள் யார்? அவர்களின் கொள்கை யாது? சுன்னத்துவல்ஜமாஅத்தை விட்டு விலகியவர்கள் யார்? அவர்களின் கொள்கைகள் யாவை? இக்கொள்கைகள் தோன்றிய காலம் ஆகியவைகளைத் தெளிவுபட விளக்கும் நூல். விலை அணா 6 தான்.

காதியானி மத ஆராய்ச்சி

காதியானி மதக்கோட்பாடுகளைத் தெரிந்துகொள்ளாமல் அநேகர் அவர்களின் நூல்களைப் படித்து வழிதவறி விடுகின்றனர். இஸ்லாத்துக்கும் காதியானி மதத்துக்கு முள்ள வேற்றுமை, காதியானிகள் இஸ்லாத்தைத் தழுவியவர்கள் என்று கூறிக்கொண்டு அதைக் கெடுப்பதற்காகச் செய்யும் சூழ்ச்சி விபரம் முதலியவைகள் இதில் கூறப்பட்டிருக் கின்றன. காதியானிகளைச் சீர்திருத்த முஸ்லிம்கள் என்றும், மிர்ஜா குலாம் அஹ்மதைச் சீர்திருத்தக்காரர் என்றும் கருதி வருபவர்களின் கண்ணைத் திறந்துவிட்டு அவர்கள் இஸ் லாத்தைவிட்டு எவ்வளவு தூரம் விலகிச் சென்றிருக்கின்றனர் என்பதை நன்கு துலக்கும் நூல். 200-பக்கங்களுக்கு மேற்கொண்டது. விலை ரூபா 1-0-0 தான்.

முஸ்லிம்களின் நவீன அநுஷ்டானச் சம்ஹாரம்

அனுச்சார பித்அத் ஷிர்க்கு முதலிய நவீன அநுஷ்டானங்களில் கிடந்துழலும் முஸ்லிம்களுக்கும், அனுவசியமான சடங்குகளைக் கைக்கொண்டு கடன்படுவோருக்கும் இஸ்லாத்தின் உண்மை ஆசாரம் யாது என்பதைத் தெளிவுபடுத்தி அத்தகை வீண்டம்பச் செலவுகளிலும் அனுச்சாரப் பழக்க வழக்கங்களிலுமிருந்து விடுவிக்கும் அரிய புத்தகம்.

விலை அணு 10.

குர்ஆன் ஆங்கில வியாக்யான ஆராய்ச்சியின் முகவுரை

திருக்குர்ஆனுக்குக் காதியானி அஹ்மதிப் பார்ட்டியின் தலைவர் முஹம்மதுஅலி, M.A., LL. B., எழுதிய ஆங்கில வியாக்யானத்தில் இஸ்லாத்துக்கு விரோதமாக எழுதியுள்ள தவறுகளிற் சிலவற்றை எடுத்துக்காட்டுகிறது. இது பாஞ்சாலத்தைச் சேர்ந்த ஷேக் குலாம்ஹைதர் சாஹிபால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட நூலின் தமிழ் மொழிபெயர்ப்பு.

விலை அணு 4.

அஹ்மதியர்களைப்பற்றிய கோர்ட்டுத் தீர்ப்பு

இதில் காதியானி மதஸ்தர்கட்கும் முஸ்லிம்கட்கும் மஸ்ஜித் கப்ருஸ்தான் ஆகியவைகள் சம்பந்தமாக ஏற்பட்ட வியாச்சியங்களும் கோர்ட்டுத் தீர்ப்புகளும் எழுதப்பட்டிருக்கிறது.

விலை அணு 2 தான்.

காதியானிப் பிரசாரமும் கம்பளை முஸ்லிம்களின் வெற்றியும்

சிலோன் கம்பளையில் காதியானிகளுக்கும், உலமாக்களுக்கும் நடக்க இருந்த மத தர்க்கவாத சம்பந்தமாக எழுதப்பட்டது. காதியானிகளின் தர்க்க நிலைமைகளையும் அவர்களின் தந்திரக் கபடங்களையும் தெரிந்து அவர்களோடு மல்லாடி அவர்களின் குறும்புகளை அடக்க விரும்புவோருக்கு இந்நூல் இன்றியமையாததாகும்.

விலை அணு 6 தான்.

ரத்துல் காதியானி

வஹீ என்பதென்ன? அது எவருக்கு வரலாம். தற்காலம் வஹீ உண்டா? இல்ஹாம் என்றால் என்ன? என்பனபோன்ற விஷயங்களைப்பற்றி விபரமாகவும் தெளிவாகவும் கூறப்பட்டிருக்கிறது.

விலை அணு

காதியானி மதஸ்தருடன் ஒற்றுமையாமை — விலை அணு

காதியானிக் கொள்கைகள் தலைகாட்ட முற்பட்டிருக்கும் இதுகாலை இந்நூல் ஒவ்வொருவரிடத்திலும் இருக்கவேண்டியது அவசியமாகும் என்பதை அறிவித்துக்கொள்ளப்படுகிறது.

தமிழ்நாடு ... காப்பக நூலகம் சென்னை-600 008

கிடைக்குமிடம் :—

முஸல்மான் ஆபீஸ்,
தென்காசி.

Printed at the Kesari Printing Works & Edited & Published by Moulvi A. R. Abdur Rahim Saheb. Manager, Hifazath-ul-Islam, 43-A, Post Office St., G.T., Madras.